[illegible]

TB
031,6
N29
177809

657

உ

கணபதி துணை.

# தமிழ்ப் பாட புத்தகம்

(ஏழாவது)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 APR 1927
MADRAS

கும்பகோணம் - டவுன்ஹைஸ்கூல்—தமிழ்ப் பண்டிதர்
ஊ. சா. வேங்கடராம ஐயர்
எழுதியது.



... சுப்பிரமணியம் & ஸன்,
...ம்பகோணம்.
... 1927. [விலை அணா ஒன்பது.

TB
031,6(T)
N27
17780

உ

கடவுள் துணை.

# மிழ்ப் பாட புத்தகம்.

(ஏழாவது.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 APR 1927
MADRAS

1576
494 8188

பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்
ஊ. சா. வேங்கடராம ஐயர்
எழுதியது.

தி. கி. சுப்பிரமணியம் & ஸன்,
கும்பகோணம்.
செய்தது.] 1927 [விலை அணு ஒன்பது.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
　　கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
　　பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயற்றி னகம்படியே
　　குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
　　வீரட் டானத் துறையம்மானே.

— திருநாவு

-600 008.
177801

TB
031,6N9
N29

# பொருளடக்கம்.


| எண். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| | **1. உரை நடைப் பகுதி.** | |
| 1. | கடவுள் உண்டு என்பது ... ... | 1. |
| 2. | நக்கீரர் ... ... ... | 4. |
| 3. | ஆராய்ந்து செயல் ... ... | 7. |
| 4. | செல்வமும் சிக்கனமும் ... ... | 11. |
| 5. | இராஸடேல் நியாய வழிகாட்டிகள் | 15. |
| 6. | உயர்குடிப் பிறந்தார் ... ... | 23. |
| 7. | தருமம் ... ... ... | 26. |
| 8. | நட்பு ... ... | 30. |
| 9. | உடலமைப்பு ... ... ... | 34. |
| 10. | சுகவாழ்க்கை ... ... | 38. |
| 11. | காலத்தின் அருமை ... ... | 42. |
| 12. | முயற்சி ... ... | 46. |
| 13. | தேனீ ... ... | 49. |
| 14. | நீர் ... ... | 54. |
| 15. | நீர்வீழ்ச்சி ... ... | 57. |
| 16. | திருநாவுக்கரசர் ... ... | 61. |

17. நீலகிரி ... ... 70.
18. பாரி ... ... ... 74.
19. அலெக்ஸாண்டரும்,கொள்ளைக்காரனும் 79.

## 2. செய்யுட் பகுதி.

1. கடவுள் வாழ்த்து ... ... 86.
2. நீதிநெறி விளக்கம் ... ... 87.
3. தமயந்தியின் சுயம்வரம் ... ... 91.
4. பணிதற் பெருமை ... ... 98.
5. தனிப்பாக்கள். ... ... 99.
6. பாரதத் தாய் ... ... 101.

## 3. இலக்கணப் பகுதி.

1 எழுத்தியல் ... ... 103.
2. சொல்லியல் ... ... 114.
3. பொதுவியல் ... ... 138.
4. புணரியல் ... ... 144.

# முகவுரை

இக்காலத்தில் தமிழ் தாழ்ந்த நிலையை அடைந்திருக்கிற தென்று பலர் பரதவித்துக் கூறுவர். உண்மையில் தமிழ் தனது தூய்மையை இன்றும் இழக்கவில்லை; ஆனால் அதைப் பயிலும் தமிழர்களே தங்களது நிலையில் குன்றி இழிவடைந்துள்ளார்கள். இதற்கு முக்கிய காரணம் அவர்கள் தங்களது தாய் மொழியைப் புறக்கணித்தமையே. இற்றைஞான்று இப்புறக்கணித்தலைப் புறக்கணித்தற்குப் பல துறைகளில் பாடுபடுவோர் பலராவர் அவர்களின் உழைப்பு பயனடைய வேண்டுமாயின் செவ்விய நடையையும், ஆழ்ந்த கருத்துக்களையும் புதிய உணர்ச்சிகளையுமுடைய பல தமிழ்ப் புத்தகங்கள் நமது சிறுவர்களின் உபயோகத்துக்காக எழுதப்படல்வேண்டும். அப்படிப்பட்ட புத்தகங்களில் ஒன்றாகும் எனது நண்பர் ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராமையர் எழுதித் தொகுத்திருக்கும் இப்புத்தகம். இன்னும் இதன் வரிசையில் வருவன நான்காகும்.

பாலர் பாடபுத்தகங்களாகப் பல தோன்றித்திகழ்ந்தன. அவற்றுள் சில மறைந்தொழிந்தன; சில இன்றும் உலாவுகின்றன; பல புதிதாக இன்னும் எழுதப்படுகின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு குணத்துடன் இலங்குவதாகும். அவைகளை அவ்வக்காலங்களில் அறிஞர்கள் போற்றுதல் இன்றியமையாதது.

ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராமையரது வரிசைப் புத்தகங்களில் உரைநடையும் செய்யுளும் இலக்கணமும் ஒருங்கே

திரட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் ஓராண்டுக்குப் போதிய விஷயம் அமைந்துள்ளது. உரைநடைப்பகுதியிலுள்ள விஷயங்கள் பலதிறத்தனவாய்க் காணப்படுகின்றன; இடையிடையே சித்திரங்களும் சேர்க்கப் பட்டுள்ளன; பழைய புலவர் அரசர் வள்ளல் இவர்களின் வரலாறுகளும், இயற்கைத் தோற்றங்களும், கதைகளும் பரந்திருக்கின்றன. சிறுவர்கள்' மனப்பாடம் செய்து மென்று சிந்திப்பதற்கு அனுகூலமான செய்யுள்கள் பலவுள. இலக்கண உறுப்புக்களுக்கு வேண்டிய உதாரணங்களை இலக்கியப்பகுதிகளினின்று பெற முடியும். இவ்வமைப்பு கற்போருக்கும் கற்பிப்போருக்கும் நல்லுதவியாக இருக்குமென நம்புகிறேன்.

இப்புத்தகத்தையும் இது முதலாகப் பின்வரும் மற்றவைகளையும் அன்பர்கள் தங்கள் தங்களுடைய பள்ளிக்கூடங்களில் பாடப்புத்தகங்களாக ஏற்படுத்தி ஆதரித்து ஸ்ரீமான் வேங்கடராமையரவர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிக்குமாறு அருள்புரிய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

கும்பகோணம்,<br>
26-7-26.

கே. வீ. வீரராகவையர்.

உ

கடவுள் துணை.

# முன்னுரை

சின்னாட்களாக நமது நாட்டிலே கல்வி முறை சீர்திருந்தி வருவதாகக் கூறப்படுகிறது. அச்சீர்திருத்தம் இனிது கைவர இன்னும் சில பாடபுத்தகங்கள் தமிழ் மொழியில் இருப்பது நலந்தருவதொன்றாகும் என்பது அடியேனது கருத்து. அக் கருத்தை நிறைவேற்ற வேண்டியே அடியேன் "தமிழ்ப்பாட புத்தகம்" என்ற வரிசையில் ஐந்து புத்தகங்களை எழுதி வெளியிட முன் வரலானேன்.

தண்டமிழ் மொழியின் வளர்ச்சிக் கென்றே தம்முடைய உடல், பொருள், காலம் ஆதியவற்றை அர்ப்பணம் செய்து உழைதது வந்த பரமோபகார சீலரான ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் எழுதிய உரை நடைகள்; செந்தமிழ், தமிழர் நேசன் போன்ற மாதப் பத்திரிகைகள்; வேறு பல பிரசுரங்கள் இவற்றைப் படித்து வருவதன் பயனாகவும், உலகப் போக்கையும் மாணவர்களது மனவன்மை முதலியவற்றையும் ஒரு வகையாக உணர்வதன் பயனாகவும், அறிவாலும் அனுபவத்தாலும் சிறந்த பெரியோர் பலருடன் பழகி அளவளாவி அறிந்து கொண்டதன் பயனாகவும் இப்புத்தகங்கள் எழுதப்பட்டன. ஆதலின், இவை ஒரு சிறிதேனும் கற்போர்க்குப் பயன்படும் என்பது அடியேனது தாழ்மையான கருத்தாகும்.

"பள்ளிக்கூடங்களிலே பல புத்தகங்கள் பாடமாகவைக் கப்படுகின்றன. ஆனால், ஒன்றாம் மாணவர்களால் முற்றும்

நன்ருகக் கற்கப்படுவதில்லை; கற்பிக்கப்படுவதும் இல்லை. சில பாகங்களே அரை குறையாகக் கற்கப்படுகின்றன'' என்ற ஓர் அபவாதம் நமது நாட்டிலே இக்காலத்தில் இருந்துவருகின்றது. இதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. புத்தகங்கள் பலவாக இருப்பதால் எல்லாவற்றையும் நன்ருகக் கற்க மாணவர்களுக்குப் போதிய காலம் கிடைப்பதில்லை. அதிகம் விலைப் பொருளைக் கொடுத்துப் புத்தகங்களை வாங்கிப் படிக்க இயலாத மாணக்கர்களும் பலர் இருக்கின்றனர்.

இப்புத்தகங்கள் ஒரு வகையில் அந்த இரண்டு இடையூறுகளையும் நீக்கக் கூடியன என்பது 'இவற்றுள் உரைநடைப் பகுதி, செய்யுட்பகுதி, இலக்கணப்பகுதி என்பன அந்த அந்த வகுப்புக்கு ஏற்றவாறு அமைந்திருக்கின்றன; விலையும் இயன்ற அளவு குறைவாக வைக்கப்பட்டுளது' என்பதை உணர்வதால் விளங்கும்.

மேல்நோக்காகப் பலவற்றைப் படிப்பதிலும் ஆராய்ச்சியுடன் விஷய உணர்ச்சி பெற்றுச் சிலவற்றைப் படிப்பது மேலானதாகும். படித்தவற்றையே எழுதுமாறு செய்வதும் பயன்தருவதொன்ருகும். இம்முறையிலே கற்பதற்கும், கற்பிப்பதற்கும் இப்புத்தகங்கள் துணை செய்யக் கூடியன என்பது தவருகா தென்னலாம்.

இப்புத்தகங்களை எழுதுமாறு தூண்டி ஊக்கமளித்தவர் மெஸர்ஸ் தி. கி. சுப்பிரமணியம் & ஸன்ஸ் கம்பெனியார் ஆவர். தமிழ்வளர்ச்சியில் அவர்களுக்குள்ள ஊக்கத்திற்கு மகிழ்ந்து அவர்கள்பால் நன்றி பாராட்டுகின்றேன்.

இப்புத்தக வரிசைக்குப் பொருந்த ஓர் அணிந்துரையை வரைந்து உதவியவர்கள் கும்பகோணம் துரைத்தன உயர்தரக் கல்லூரிப் போதகாசிரியருள் ஒருவரும், மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீக்ஷாதிகாரிகளுள் ஒருவரும் ஆகிய அறிவு நூற் பெரும்

புலவர் ஸ்ரீமான் க. சூ. வீரராகவ ஐயர் (எம். ஏ., எல். டி.,) அவர்கள் ஆவார்கள். இப்புத்தகங்களை வெளியிடுவதில் விஷயத்தாலும், கற்பனையாலும் போதிய உதவிகளைச் செய்து வருகின்றவர்களும் இவர்களே. இத்தகைய பேருதவிகளைச் செய்துதவும் ஸ்ரீமான் ஐயர் அவர்கள்பால் அடியேன் என்றும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையேன்.

இப்புத்தகங்களில் உள்ள குற்றங்களை அடியேற்கு எடுத்துக்காட்டித் திருத்தி அருளுமாறு அறிவுடைய பெரியோர்களைப் பன்முறையும் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

ஒன்றற்கும் பற்றாத அடியேனை இத்துறையிலே அமர்த்தித் தண்டமிழ்த் தொண்டியற்றிவருமாறு திருவருள் பாலித்து வரும் தோன்றாத் துணையாகிய கடவுளுடைய திருவடித் தாமரைகளை வாழ்த்தி வணங்கி வழிபடுகின்றேன்.

இங்ஙனம்,

நாராயண விலாசம்,
கும்பகோணம்,
26-7-26.

ஊ. சா. வேங்கடராமன்,
தண்டமிழ்த் தொண்டன்.

வாக் குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்
நோக் குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

—ஔவையார்.

# தமிழ்ப் பாட புத்தகம்.

(ஏழாவது.)

---

## (I) உரைநடைப் பகுதி.

### 1. கடவுள் உண்டு என்பது.

பூவுலகிலே வசிக்கின்ற நாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும் பலவகைப்பட்ட அற்புதக் காட்சிகளை நம்முடைய கண்களாலே காண்கின்றோம். அவற்றைக் காணுந்தோறும் நமக்கு "இவை தாமாகவே உண்டாகின்றனவோ; பிறராலே உண்டாக்கப் படுகின்றவோ" என்ற எண்ணங்கள் உண்டாகின்றன. உடனே தொன்றுதொட்டு வந்துள்ள நமது முன்னைப் பழக்கத்தின் தொடர்பால் நமது மனத்தே "அனைத்துங் கடவுளாலேயே உண்டாக்கப்படுகின்றன" என்ற உணர்ச்சி உண்டாகின்றது.

இஃதிங்ஙனமாகச் சிலர் சிறிது உலகப்பழக்கம் உண்டானதும் தம்மை முற்றும் உணர்ந்தவராக நினைத்துக்கொண்டு "அனைத்தும் இயற்கையே; கடவுள் இல்லை" என்று சொல்லத் தலைப்படுகின்றனர். இவ்விதம் மனம்போனபடி கூறுவார் ஒருவருடன் பேசும்படி நேரிட்டால் நாம் அவரோடு வாதாடாது ஓர் உதாரணத்தைக் கூறி நமது கொள்கையை நிலை நிறுத்துவோம்.

"ஐயரே, தாங்கள் 'கடவுள் ஒருவர் இல்லை; அனைத்தும் இயற்கையே' என்று சொல்லுகின்றீர்கள். தாங்கள் சொல்லும் வண்ணம் 'கடவுள் இல்லை' என்ற கொள்கையனுவதற்கு எனக்கும் உடன்பாடே. ஆயினும் 'கடவுள் உண்டு' என்று சொல்லுவோர் 'இல்லை' என்று சொல்லி மனம்போனபடி திரிபவர்க்கு 'மறுமையிலே கொடிய துன்பங்கள் உண்டாகும்' என்று சொல்லுகின்றனர். ஆனால், அவர்கள் சொல்லுவதற்கு எவ்வித சாட்சியுமில்லை. என்றாலும், ஒரு சமயம் அவர்கள் சொல்லும்வண்ணம் 'கடவுள் உண்டு' என்பது உண்மையாயின் 'இல்லை' என்று சொல்லித் தவறிநடந்த குற்றத்திற்குத் தண்டனை கிடைக்குமே என்று எண்ணிப் பயப்படாமலிருக்க முடியவில்லை. மேலும், நம்முள் ஒருவருக்குத் தனியே காட்டைக் கடந்து வெகுதூரத்திலுள்ள ஓர் ஊருக்குப்போக நேர்ந்ததாக வைத்துக்கொள்வோம். அச்சமயமோ, பொழுது போகுந் தறுவாயிலிருக்கிறது. நாமும் பயமில்லாமலேயே அக்காட்டிலே போய்க் கொண்டிருக்கிறோம். இந்நிலையில், எதிரேவரும் வழிப்போக்கர் ஒருவர் நம்மைப்பார்த்து 'ஐயரே, இக் காட்டிலே கொடிய விலங்குகள் பல நிறைந்துள்ளன; திருடர் பயமும் உண்டு. ஆதலின் நீர் இனிச் செல்லவேண்டாம். இன்றிரவு இங்குத்தங்கிக் காலையிலே தக்க துணையோடும் போகலாம். அன்றி, அவசரமாக இப்பொழுதே போகவேண்டுமாயின் தயைசெய்து கையிலே துப்பாக்கி, கத்தி ஆகிய இவைபோன்ற ஏதேனும் ஒரு கருவியைக் கொண்டு போம். அஃதிருப்பின் நடுவழியில் உண்டாகும் இடையூற்றை நீக்கிக்கொள்ளலாம்' என்று சொல்லுகிறார். அப்பொழுது அவ் வழிப்போக்கர் சொல்லியபடி ஏதேனும் ஓர் ஆயுதத்தைக் கையிலே கொண்டுபோகிறது தகுந்ததா? அல்லது கொண்டுபோகாது வெறுங் கையோடு போதல்

தகுந்ததா ? எனக்கு அத்தகைய அவசியம் உண்டானல் நான் அவ் வழிப்போக்கரது சொற்படி ஏதேனும் ஓர் ஆயுதத்தைக் கொண்டுதான் போவேன். ஏனெனின், கையிலே ஆயுதத்தை வைத்துக்கொண்டு காட்டிலே போகும்போது எனக்கு அங்கு ஏதேனும் இடையூறு நேர்ந்தால் நான் அந்த ஆயுதத்தால் அத் துன்பத்தைப் போக்கிக்கொள்வேன். இடையூறு சம்பவிக்க வில்லையாயின், அந்த ஆயுதத்தைச் சுமந்து சென்ற சிறிது வருத்தத்தைத் தவிர வேறு எவ்வித நஷ்டமும் எனக்கு உண்டாகாது. அவ்விதமின்றி வழிப்போக்கரது வார்த்தையைக் கவனியாது வெறுங்கையுடன் செல்ல, நடுக்காட்டிலே எவற்ருலோ இடையூறு நேரிடுமோயின், எனது கையிலே எவ்வித ஆயுதமும் இல்லாததனல், நான் அத்துன்பத்திற்கு உள்ளாகத்தான் வேண்டிவரும். இதனல், தாங்கள் சொல்லுவது போலக் 'கடவுள் இல்லை' என்பது உண்மையாயின் 'உண்டு' என்று கொண்டு விதிவிலக்குகளுக்குக் கட்டுப்பட்டு நடந்ததற்காக எவருக்கும் எவ்விதத் தீங்கும் உண்டாகாதென்பதும்; 'கடவுள் உண்டு' என்பது உண்மையாயின் 'இல்லை' என்றுகொண்டு அடங்காது மனம்போனபடி நடந்தவர்க்குத் தண்டனை இல்லாமற் போகாதென்பதும் வெளியாகின்றன அல்லவா? ஆகவே, இவ்விஷயத்தில் 'எந்தக்கொள்கை சிறந்ததாகும்' என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்."

இதனல் "அனைத்தும் இயற்கையே; கடவுள் என்று ஒன்று இல்லை" என்பது பொருந்தாதது என்பதும், "கடவுள் உண்டு" என்பது மறுக்கமுடியாதது என்பதும் விளங்கும். 'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்பது பழமொழி.

## 2. நக்கீரர்.

---

பாண்டி நாட்டிற்குத் தலைநகரான மதுரையம்பதியிலே ஓர் உபாத்தியாயர் இருந்தார். அவர் பல சிறுவர்களைக் கூட்டமாகச் சேர்த்து வைத்துக்கொண்டு அவர்களுக்குத் தமிழ் நெடுங்கணக்கை (அரிச்சுவடியை)க் கற்பித்து வந்தார். இக் காரணம்பற்றி இவர் அக் காலவழக்கப்படி 'கணக்காயனர்' என்று பெயர் பெற்றார். இவருக்கு ஒரு புதல்வர் இருந்தார். அவர் பெயர் நக்கீரனார் என்பது. அவர் பாலப் பருவத்திலேயே கல்வி கற்று மிக்க தேர்ச்சியினைப் பெற்றவர். மனம்மொழி மெய்களாற் கடவுள் வழிபாடியற்றும் மாண்பினர். தமக்குண்டாகும் இன்ப துன்பங்களிலே விருப்பு வெறுப்பற்றவர். எதற்குந் தோன்றாத் துணையாகிய கடவுளையே நம்பியிருப்பவர். பொய்யடிமையில்லாத புலவர் எனச் சான்றோராலே போற்றப்பெற்றவர்.

இத்தகையார் தக்க வயது வந்ததும், அப்பொழுது அம் மதுரையம்பதியிலே நடைபெற்றுவந்த செந்தமிழ்ச் சங்கத்தில் ஒருவராக அமர்ந்தார். அமர்ந்து, சிலகாலஞ் சென்றபின் இயற்கைக்கு விரோதமெனத் தாங்கருதிய ஒரு கவியிற் குற்றங் கண்டதற்காகக் கடவுளாலே தமக்கு நேர்ந்த சாபத்தைப் போக்கிக் கொள்வான் கைலையங்கிரியை நோக்கிச் செல்வாராயினர். செல்லும் வழியிலே ஓரிடத்தில் ஒரு குளமும் அக்குளக்கரையிலே ஒரு பெரிய ஆலமரமும் இருந்தன. அம்மரத்தினின்றும் உதிர்கின்ற இலைகள் தண்ணீரிலே விழுந்தால் மீன்களாகவும் தரையிலே விழுந்தாற் பறவைகளாகவும் மாறுதல் வழக்கம். அவ்விடத்தில் அவர் தம்முடைய நித்தியக் கடமைகளை முடித்துக்கொள்ள எண்ணி அக் குளத்திலிறங்கி நீராடிவிட்டு

ஆண்டு ஒரு புறத்திலமர்ந்து கடவுளைத் தியானஞ் செய்து கொண்டிருந்தார்.

இஃதிவ்வாருக, ஒரு பூதம் தான் அழியாதிருக்க வேண்டித் 'தாம் செய்கின்ற தியானத்தினின்றும் தவறின ஆயிரம் மெய்யன்பர்களைச் சேர்த்து உண்ணவேண்டும்' என்ற தனது கருத்தை நிறைவேற்றிக் கொள்ளும்பொருட்டு முன்னமே தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றென்பதின்மரைப் பிடித்துக்கொண்டு போய்த் தனக்குச் சொந்தமான ஒரு மலைக் குகையிலே அடைத்துவைத்துவிட்டுப் பாக்கியான ஒருவரைத் தேடிக் கொண்டு அக் குளத்தண்டை வந்திருந்தது.

இந்நிலையில், அப் பூதத்தின் தந்திரத்தால் அந்த ஆலமரத்திலிருந்து ஓர் இலை காற்றினல் அலைப்புண்டு ஒருபாதி தண்ணீரிலும் மற்றொருபாதி தரையிலுமாக விழுந்தது. விழுந்த அவ்விலை, வழக்கம்போல ஒருபாதி மீனுருவமும், பிறிதொருபாதி பறவை உருவமுமாக மாறியது. மீனுக்குத் தரையும் பறவைக்குத் தண்ணீரும் பகையிடங்கள் என்பது அனைவருக்குந் தெரிந்ததே. இவ்வாறு, வேறுபட்ட சரீரங்களைக் கொண்ட அவ்விரண்டும் முறையே தங்கள் தங்களுடைய சுகத்தை வேண்டி நீருக்குந் தரைக்குமாக ஒன்றை ஒன்று இழுக்கலுற்றன.

இதைக் கண்டதும், கடவுளைத் தியானஞ் செய்துகொண்டிருந்த நக்கீரனர் அப் பிராணிகள் படும் கஷ்டத்தைச் சகிக்க முடியாது தியானத்தை விட்டு நீங்கி அவ்விரண்டனையும் வெவ்வேருகப் பிரித்து விட்டார். உடனே, அவை இரண்டும் மகிழ்வடைந்து மீன் தண்ணீருள்ளும் பறவை ஆகாயத்துமாகப் போயின.

இன்னணம், அப் பிராணிகளின் உயிர்களைக் காப்பதற்

காகத் தமது தியானத்தினின்றும் நீங்கிய நக்கீரனுரை, அப் பூதம் தான் எண்ணிய எண்ணத்தை நிறைவேற்றும் பொருட்டுத் தூக்கிச் சென்று குகையிலே அடைத்துவிட்டு நீராடச் சென்றது.

அப்பொழுது, இவருக்கு முன்னே அக் குகையிலே அடைபட்டுள்ள அனைவரும் இவரைப்பார்த்து "ஐயன்மீர், நாங்கள்நெடுநாட்களாகஇக்குகையிலே அடைபட்டிருக்கிறோம். ஆனால், இதுவரையில் எங்களுடைய உயிர்கள் காப்பாற்றப் பெற்று வந்தன. இன்று அப் பூதத்திற்கிருந்த குறையை நிவர்த்தி செய்வதற்குத் தாங்கள் வந்து விட்டீர்கள். இப்பொழுதோ அப் பூதம் மிக்க சந்தோஷத்துடன் நீராடச் சென்றிருக்கின்றது. அது நீராடிவந்ததும் நம் அனைவரையும் உண்டுவிடுமே. நாம் என்ன செய்வது? இன்று நீங்கள் வாராமலிருந்தால் நாங்கள் இன்னுஞ்சிலகாலம் உயிருடனிருப்போமே. இப்பொழுது தாங்கள் எங்களுக்கு யமனுக வந்து சேர்ந்தீர்களே?" என்று கூறினர்.

இதைக்கேட்ட நக்கீரனுர் உடனே அவர்களால் அப் பூதத்தின் செய்கைகள் அனைத்தையும் தெரிந்து கொண்டு மீண்டும் அவர்களைப் பார்த்து "ஐயன்மீர், நீங்கள் இவ்விஷயத்தில் இனிச் சிறிதும் பயப்படல் வேண்டாம். கடவுள் நம்மைக் காப்பாற்றுவார்" என்று தைரியங்கூறிப் பின்னர்த் தமது வழிபடு கடவுளாகிய முருகப்பெருமானை உன்னிப் பல பாடல்களையும், முத்தியை விரும்புவோனுக்குத் தக்க வழிகளைத் தெரிவிக்கவல்ல திரு முருகாற்றுப்படையையும் பாடினர்.

இவ்வாறு, பலருடைய உயிர்களைக் காக்கும் பொருட்டுத் தமது திருவருளையே வேண்டிப் பாடும் பெரும்புலவரான நக்கீரனுரது இனிமையான வாக்கைக் கேட்பதற்கு முருகப்பெரு

மான் அங்கு எழுந்தருளினர். அவருடைய பாட்டைக் கேட்டு மனமகிழ்ந்தார். உடனே, தமது வேலை ஏவி அக் கொடிய பூதத்தைக் கொன்றதோடு அக் குகையைப் பிளந்து அதனுள் அடைபட்டுக்கிடந்தார் அனைவரையும் வெளிப்படுத்தினர். வெளியேவந்த அனைவரும் முருகக்கடவுளை வணங்கித் துதித்த துடன் நக்கீரனரைப் பார்த்து “ஐயரே, தம்மாலல்லவோ எங் களுக்குக் குகப்பெருமானது காட்சி கிடைத்தது? தம்மாலல் லவோ எங்களுடைய உயிர்கள் மீண்டன?” என்று பலவாறு கப் புகழ்ந்தனர். முருகக்கடவுளும் மறைந்தனர். அனைவருந் தத்தம் இடங்களுக்குச் சென்றனர்.

அப்பால், நக்கீரனர் முருகக் கடவுளது திருவருளால் அப் பொய்கையிலே மூழ்கிப் பொன்முகலி யாற்றிலே எழுந்த னர். ஆண்டிருக்குங் காளத்திமலை அவருக்குக் கைலைபங்கிரி யாகத் தோன்றியது. தோன்றலும் கைலைபாதி காளத்திபாதி எனப் பெயரிய ஓர் அற்புதத் திருவந்தாதியைப் பாடிச் சாபத்தி னின்றும் நீங்கிப் பேரின்ப வீடு பெற்று உய்ந்தனர். ‘கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.’

---

## 3. ஆராய்ந்துசெயல்.

ஆண்டவன் உலகத்தையும், எண்ணிறந்த பலதிறப்பட்ட ஜீவகோடிகளையும் படைத்தான். அவற்றுள் மக்கள் என்ற ஒரு வகுப்பினையும் படைத்துள்ளான். அந்த மக்கட்பிறப்பே பிற வற்றிற்கெல்லாம்மேலானது. பிற பிறப்புக்கள் மக்களாவர் செய் யும் வினைகட்குத் துணை நிற்கவே தோன்றியன. அவற்றால் தமது புத்தி சக்தியைக் கொண்டு ஏதும் தொழில் புரிதல் இய லாது. ஆறறிவினையும், எதனையும் செய்து முடிக்கும் ஆற்ற

வினையும் உடைய மக்கள் வகுப்பினரே உலக உபகாரமான செயல்களைச் செய்யத் தகுந்தவராவர்.

எல்லாச் செயலினையும் ஒருவரே செய்துவிடலாம் என்பதும் முடியாதது. எல்லாரும் ஒரே செயலைத் தான் செய்ய வேண்டும் என்பதும் பொருந்தாதது. ஒருவராகச் செய்யக் கூடிய செயல்களும் உண்டு. பலர்சேர்ந்தே செய்யக்கூடியசெயல்களும் உண்டு. ஒருவர் செய்து நிறைவேற்றக் கூடியதற்குப் பலர் செய்ய முன்வருவது பயனற்ற காலப்போக்காகும். பலர் சேர்ந்தே செய்யக்கூடியதை ஒருவர் தாமேசெய்து நிறைவேற்றுவோம் என்று முயலுவதும் இயலாததொன்றாகும்.

எந்தச் செயலைச் செய்யத் தொடங்கினாலும் அதனைச் செய்யுமுன் ஒவ்வொருவரும் "இது தம்மால் இடையூறின்றி நிறைவேற்றக் கூடியதா? இடையூறு நேரிடுமாயின் அதனை நீக்கிக்கொள்ளத் தமக்கு வன்மை உண்டா? அங்ஙனம் இடையூற்றையும்போக்கி நிறைவேற்றினால் அதனால் வரும்பயன் பெரிதா? அவ்வாறு பெறப்படும் பயன் தமக்கு நேர்ந்த கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் ஈடு கொடுக்கக் கூடியதாகுமா?" என்றெல்லாம் முற்கூட்டி ஆராய்ந்தே செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்பவரே கருதிய கருமத்தை இனிது நிறைவேற்ற வல்லவராவர்.

இங்ஙனம் ஆராய்ந்து கொண்டவர் அதனை இனிது நிறைவேற்றும் பொருட்டுத் தக்க துணைவரைத் தேடிக்கொள்ளல் பொருத்தமானது. அப்படித் தேடிக்கொள்வது தக்கதொரு பின்பலமுமாகும். துணைவரைத் தேடிக்கொள்வது மாத்திரம் போதாது. தாம்செய்யக்கருதியிருக்கும்செயலைப்பற்றியஅவரது கருத்தையும் நன்கு அறிந்து கொள்ளல் வேண்டும். அத்துணைவர் தமது செல்வம் முதலியவற்றின் பெருக்கத்தைக் கருதி முதலை அழிக்கும் செயலினராக இருத்தல் கூடாது. அவர்

'பயன் தரும்' என்று உறுதியாக நம்பப்படாத செயல்களைச் செய்பவராகவும், செய்யுமாறு தூண்டுபவராகவும் இருத்தல் கூடாது. ஆனால், அவர் தாம் தொடுத்த காரியம் இனிது நிறைவேறாமையால் உண்டாகும் பழிச் சொற்களுக்கு அஞ்சுபவராக இருத்தல் வேண்டும்.

இவ்வாறு உற்ற துணைவருடன் ஆராய்ந்த பிறகும் அவர் 'தன்கையே தனக்கு உதவி' ஆகையினாலே மீட்டும் ஒருமுறை "தாம் இச்செயலைச் செய்யவேண்டியது தானா? செய்யாவிட்டால் வரும் இழுக்கு யாது? அந்த இழுக்கைப் போக்கிக் கொள்ள வேறுவழி உளதா? உளதாயின் அந்த வழியிலே போக்கிக் கொள்ள முயலுவது இலகுவா? இந்தச் செயலைச் செய்வது இலகுவா? இந்தச் செயலைச் செய்தே தான் போக்கிக் கொள்ள வேண்டுமாயின், இதுதான் அதனை நிறைவேற்றிக் கொள்ளத்தக்க காலமா? பிறிதொரு காலத்திலே செய்வது நன்மையைத் தருவதா?" என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். தகுந்த காலத்தை அறிந்து செய்தால் உலகத்தைப் பெற விரும்பினாலும் பெற்றுவிடலாம். அப்படியே தகுந்த இடத்திலிருந்தும் தமது காரியத்தைத் தொடங்குதல்வேண்டும். எவ்வளவு நல்லதானாலும் தமக்கு மாத்திரம் பெரும் பயனை அளித்துப் பிறர் பலர்க்கும் தீமையை விளைவிப்பதாயின் அச் செயலைச் செய்தல் கூடாது. அறிவினை உடையவர் தம்மினும் உலகினர்க்கு நன்மையைச் செய்யும் காரியங்களையே செய்ய முயலுவர்; செய்வர்.

இங்ஙனம் ஆராயாது ஊக்க மிகுதியால் 'நிறைவேற்றி விடலாம்' என்று தொடங்கியவர் தமது நிலைமையை உணராத வெறியராவர். அவர் விரைந்து அழிந்து விடுவர். மயிலின் தோகையாகிய பாரமானாலும், பஞ்சுப்பாரமானாலும் அச்சுத்

தாங்கும் அளவுக்கு மேலாகச் சுமத்தப்படின் அந்த அச்சு முரிந்துவிடு மல்லவா ? நுனிக்கிளையிலிருந்து அடிமரத்தை வெட்டுவது வெட்டுபவனுடைய அழிவுக்கு ஆதார மல்லவா ? நல்ல வழியில் முயலாத செயல்களனைத்தும் இங்ஙனமே தான் சித்தி பெறுமல் அழிவன. அவற்றை நிறைவேற்றப் பலர் முயன்றாலும் அம்முயற்சி வீணேயாகும். அவை நல்லனவாக இருப்பினும் பயன் தராதொழியும். நன்றாக நிறைவேற்றும் வலிமையினை உடையவர்போலத் தோன்றி இடையிலே வலி யழிந்தவர் பலர். பொருந்தாச் செயல்களைச் செய்பவர் உற்ற நட்பினராலும் பழிக்கப்படுவர். எடுத்த காரியத்தை இனிது நிறைவேற்றாது இடையிலே முரிதல் இழுக்கினையே தருவதா கும்.

ஆதலின், ஒவ்வொருவரும் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறினையும் அறிந்து கொள்ளல்வேண்டும். வினைவலி, தன்வலி, மாற்றான்வலி, துணை வலி என்ற நான்கையும் ஆராய்ந்து கொள்ளல்வேண்டும். முடிவு, இடையூறு, முற்றினால் வரும்பயன் இவற்றையும் பார்த் துக் கொள்ளல்வேண்டும். இங்ஙனம் ஆராய்ந்து நல்ல துணைவ ருடன் நல்ல காலத்தில் நல்லஇடத்தில் நல்ல செயல்களைச் செய் தல் புகழ்பெறும் வழியாகும். இவ்வாறு செய்பவரே தலைப்பிலே கூறியபடி லோகோபகாரமான செயல்களைச் செய்தற்கு உரிய பெரியர் ஆவர். இங்ஙனம் செய்தலே ஆராய்ந்து செய்யும் செயலாகும்.

## 4. செல்வமும் சிக்கனமும்.

பூவுலகில் மக்களது வாழ்க்கை இன்புறுதற்குப் பெருந் துணையாக இருப்பது செல்வம். செல்வமே அறத்திற்கும் இன்பத்திற்கும் துணைக்காரணமாவது; ஒருவனுக்கு இம்மையிலே இனிது உண்டு உடுத்து உயிர்வாழ்வதற்கு இன்றியமையாததாக இருப்பது.

முனிவராலும், மன்னராலும் செய்யவேண்டியனவாகக் கருதப்படும் காரியங்களும் செல்வத்தால் நிறைவேறுவன. செல்வத்தினுல் சுற்றத்தாரது பசிப்பிணியை நீக்கலாம்; பகைவரது செருக்கை அறுக்கலாம்; நட்பை வளர்க்கலாம்; அரசரது நன்மதிப்பைப் பெறலாம்; பூமியை ஆளலாம்; பலரும் வணங்கத்தக்க புகழினைப் பெறலாம்; அழியாப் பொருளாகிய கல்வியைக் கற்றுக்கொள்ளலாம்; கற்றற்குத் துணைசெய்யும் புத்தகங்களை வாங்கிக் கொள்ளலாம்.

செல்வத்தைப் பெற்றுள்ளவன் கல்லாதவனுயினும் உலகினரால் நன்கு மதிக்கப்படுவான்; அவனே எந்த இடத்திலும் முன்னர் வரவேற்கப்பட்டு அமர்த்தப்படுவான்; எழுதப்படிக்கத் தெரியாத கைக்குறியாளனுக இருப்பினும், அவன் தான் இருக்கும் நாட்டை ஆட்சிபுரியும் சபைக்குப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றவனுவான். அவனிடத்திலுள்ள தீச்செயல்களும், தீக்குணங்களும் மறைக்கப்படுகின்றன. அவனிடத்தில் இல்லாத உயர்ந்த செயல்களும், உயர்ந்த குணங்களும் வலிவிலே அவனை வந்தடைகின்றன; வேறுபல அதிகாரப் பதவிகளும் அவனைச் சேர்கின்றன. அவனுல் நிறைவேற்ற முடியாத காரியங்களும் இல்லை; அனுபவிக்க இயலாத இம்மை இன்பமுமில்லை. அவனை அறியாமலும் அவனுல் சில

புண்ணியச் செயல்கள் செய்யப்படுகின்றன. சோற்றருண்டை உடைந்த காலத்துச் சுற்றிநிற்கும் காக்கைக் கூட்டம்போல அவனைப் பலர் தொண்டுபூண்டு சூழ்ந்து நிற்பர்.

எவனிடம் செல்வம் இல்லையோ அவன் எவ்வளவு கற்று வல்லவனாயினும் பெற்ற தாயாலும் இகழப்படுவான்; 'வாழ்வி லும் தாழ்விலும் இன்பிலும் துன்பிலும் ஒருமனப்பட்டு ஒத்துழைப்பேன்' என்று உறுதிமொழி பேசிக்கொண்ட மனைவி யாலும் வெறுக்கப்படுவான்; உறவினராலும் உலகினராலும் ஒதுக்கப்படுவான்; உயிரோடிருப்பினும் கால்நடைப் பிணம் போல உழன்று திரிவான்; பசிப்பிணியால் வருந்துவான்; பிறரிடம் தனது வறுமையைப் போக்கிக்கொள்ளவேண்டிப் பல் லெல்லாம் தெரியக்காட்டுவான்; பருவரலை முகத்திற் கூட்டு வான்; சொல்லெல்லாம்சொல்லி நாட்டுவான்; துணைக்கரங்களை விரித்து நீட்டுவான்; மல்லெல்லாம் அகல ஓட்டுவான்; மானம் என்பதனை வீட்டுவான்.

அந்தோ! இத்துணைத் தொல்லைகளுக்கா உள்ளாவது? ஒருவரும் உள்ளாதல் கூடாது. அனைவரும் இத்தொல்லைகளி னின்றும் நீங்கிப் பொருளாளராக இருக்கவேமுயலல்வேண்டும். முற்பிறப்பில் ஒருவர் பிறருக்குக்கொடுப்பதை இடையில்நின்று 'கொடாதே' என்று பொறாமை காரணமாகத் தடுத்தவரே இப் பிறப்பில் இத்துணைத் தொல்லைகளையும் அனுபவிப்பவர். இத னால் எவரும் செல்வமுடையராதற்கு முதலிற் செய்யவேண்டி யது 'கொடுப்பதைத் தடுக்காதிருத்தலே' என்பது விளங்க வில் லையா?

இவ்வாறு உணர்ந்து செல்வத்தைத் தேடிக்கொள்வதில் முயற்சி உடையவர் எப்பொழுதும் தரும மார்க்கத்திலேயே அதனைத் தேடமுயலல் வேண்டும். கல்வி கற்பித்தல், உயிர்க்கு

உறுதியினைப் பயக்கும் சீரிய அறிவு நூல்களை எழுதுதல், வெளிப்படுத்தல், உழுதொழிலைச் செய்தல், சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல வாணிகம்புரிதல், அரசர்மாட்டு உழைத்தல், கைத்தொழில் பயிலல் முதலியன செல்வத்தைத் தேடுதற்குற்ற தருமமார்க்கங்களாகும். இந்நெறிகளில் தேடியபொருளே அறச் செயல்களுக்கு உரியதாம். நிலைத்திருப்பதும் அப்பொருளே யாம்.

இவ்வாற்றாலன்றித் திருடுதல், பொய்ச்சான்றுகூறுதல், பிறரை மோசம் பண்ணுதல் ஆதிய தீச்செயல்களால் தேடப் பட்ட பொருள் தருமச்செயலுக்கு உதவாது; வேறு பல தீச் செயல்களையும் செய்யவே தூண்டும். அன்றியும், அப்பொரு ளால்செய்யப்படும் அறப்பயன் பொருளைஉடையவனையும், அப் பொருளைத் தனதாக்கிக்கொண்ட பாபப்பயன் செய்தவனையும் சேரும். பிச்சை எடுத்துப் பிழைப்பேன் என்பதும், அடிமைப் பட்டுப் பிழைப்பேன் என்பதும் சிறந்தன ஆகா. பிறருக்கு ஆட்பட்டு நெய், பால், தயிர், காயம், பருப்பு, பாயசம் முத லியவற்றோடு வெள்ளிக்கலத்தில் உண்பதைக் காட்டிலும், தான் பாடுபட்டுத்தேடிய தனது சொந்தப்பொருளால் உப்பில்லாத கூழைக் கையிலே வைத்துக்கொண்டு உண்பது மேலானது. உள்ளூரிலே இருந்து பொருள்தேடச் சக்தியற்றவரே வெளி யூர்களுக்குப் போதல் வேண்டும். தனது நாட்டிலே இருந்து பொருள்தேடச் சக்தியற்றவர்களே வெளிநாடுகளுக்குப் பொரு ளைத் தேடும்பொருட்டுப் போதல் வேண்டும். எந்தப்பொரு ளும் முற்கூறியாங்குத் தருமவழியைவிட்டு விலகித் தேடப்பட லாகாது. இவ்வுண்மைகளை அறிந்து தரும மார்க்கத்திலே செல்வத்தைத் தேடி இன்புறுவதே மாந்தரது கடமையாகும்.

இங்ஙனம் கடமைவழி ஒழுகித் தரும மார்க்கத்திலே

பொருளைத் தேடியவர் அதனைச் செலவு செய்யுங்கால் சிக்கன வாழ்க்கையராகவும் இருத்தல்வேண்டும். சிக்கனம் என்பது வரவுக்குத் தக்க செலவுகளைச்செய்து வாழ்ந்துவரத் துணைபுரியும் தன்மையாகும். சிக்கனம் வேறு; உலோபத்தன்மை வேறு. உலோபம் தானும் அனுபவியாது பிறரையும் அனுபவிக்க விடாது செல்வத்தைச்சேர்த்துவைக்கும்தன்மையாம். சிக்கனம் அங்ஙனம் அமைவதன்று. 'தனது வருமானம் எவ்வளவு? தான் செய்யவேண்டிய காரியங்கள் எவை? தனது வருமானத்தை எங்ஙனம் பகுத்துக்கொள்வதால் தான்செய்யவேண்டிய அனைத்துக் காரியங்களையும் உலகினர் புகழப் பிறருக்கு ஆட்படாது இனிதுசெய்து நிறைவேற்றலாம்?' என்று ஒருவன் தனது செல்வநிலையை முற்கூட்டி ஆராய்ந்து தெரிந்துகொள்ளும் தக்கதொரு முறையே சிக்கனமாவது.

"அரசனுயினும் அளவறிந்து அழித்து உண்ணவேண்டும்" என்பது பெரியவர் வாக்கு. எவ்வளவு குறைந்த வருமானத்தை உடையவராயினும் ஒருவர் செலவுகளை விரியவிடாது ஆராய்ந்தே செய்வாராயின் அவரிடம் செல்வம் குறைவுறாது; தேவையான அளவு இருந்துகொண்டே இருக்கும். வரவுக்கு மேலாகச் செலவுசெய்பவர் தமதுதேவையை நிறைவேற்றிக்கொள்ளப் பிறருக்கு ஆட்படவே நேரிடும். அடிமை வாழ்க்கையினும் இறத்தல் மேலானது என்பது உலகமறிந்த உண்மையல்லவா? முதலிலும் அதிகமாகச் செலவு செய்பவர் மானத்தை இழப்பர்; மதிகெட்டுத் திரிவர்; போன திசைகளிலுள்ள எல்லார்க்கும் கள்ளராவர்; எழுபிறப்பிலும் தீயராவர்; நல்லார்க்கும் பொல்லாதவராவர். இங்ஙனம் வரையறையின்றி நடந்தவரே கடன்பட்டு உழல்பவர். கடன்கொண்டார் படும் தொல்லையைக்கூறவும் வேண்டுமோ?

ஆதலின், மக்களாய்ப் பிறந்தார் ஒவ்வொருவரும் தரும மார்க்கத்தை அறிந்து செல்வத்தைத் தேடிச் சிக்கனமாக வாழ்ந்து அறச்செயல் புரிந்து இன்புற்று வாழ்வாராக.

---

## 5. 'இராஸடேல்' நியாய வழிகாட்டிகள்.

'இராஸடேல்' என்பது ஒரு பட்டணம். அஃது இங்கிலாந்திலே மான்செஸ்டர் நகரத்திற்கு அருகாமையிலிருக்கிறது. அது கம்பளி நெசவுக்குப் பெயர்போனது. அந்தக் கம்பளி நெசவுத் தொழிலாளர் ஒன்று சேர்ந்து கூட்டுறவுப் பண்டகசாலையை நிலையிட்டுக் கொண்டனர்; அதனால் தங்களது செல்வ நிலைமையைப் பெருக்கிக் கொண்டனர். அஃது இப்பொழுது ஒரு பிரசித்தமான நகரமாக விளங்குகின்றது. அந்த நகரத்தின் வரலாறும், அக் கம்பளி நெசவுத்தொழிலாளர்கள் முன்னேறிய வரலாறும் படிப்போர்க்கு மிகவும் ஆச்சரியத்தை விளைப்பன ஆகும்.

இந்த இராஸடேல் நகரம் மிகச் சிறியது. அதில் தேரைச் சந்து என்ற ஒரு வீதி உண்டு. அது சுகாதாரத்தைக் கெடுக்கக்கூடியவண்ணம் அவ்வளவு ஆபாசங்கள் நிறைந்ததாக இருந்தது. அதில் வாசம்பண்ணி வந்த நெசவுத்தொழிலாளர்களோ ஏழைகளா யிருந்தார்கள். வயிறு நிறைய உண்பதற்கும் அவர்களிடம் பொருளில்லை. நல்ல வீடுகளும் இல்லை. நல்ல உடைகளும் இல்லை. பெண்டு பிள்ளைகளுடன் பெரிதும் கஷ்டப்பட்டு வந்தார்கள்; இயந்திரங்களை வைத்துத் தொழிற்சாலைகளை நடத்தும் முதலாளிகளிடம் அடிமை வேலையைச் செய்து உயிர் வாழ்ந்துவந்தார்கள். அதனால் அவர்கள் அடைந்த தொல்லைகளுக்கு அளவில்லை.

இப்படியாக, அந்தக் கம்பளி நெசவுத் தொழிலாளர்களிற் பலர் ஒருநாள் ஒன்று கூடினர். "எங்களுக்குக் கிடைக்கும்



குடிசை வீடு.

கூலி விகிதம் மிகக் குறைவாயிருக்கின்றது; உணவுக்கும் போதவில்லை. ஆதலின், நீங்கள் சிறிதேனும் கூலியை உயர்த்தி உதவவேண்டும். இன்றேல் நாங்கள் வேலை செய்வதை நிறுத்தி விடுவோம்" என்று முதலாளிகளிடம் தெரிவிப்பதாக முடிவினைச் செய்துகொண்டனர். ஆனால், அந்த முடிவை முதலாளிகளிடம் அறிவிப்பதற்கு அவர்களில் ஒருவரும் தைரியமாக முன்வரவில்லை. கடைசியில் அந்த முயற்சி பூனையின் கழுத்திலே மணியைக் கட்ட முயன்ற எலிகளின் கதைபோலப் பயனற்றதாக முடிந்தது.

பின்னர்ச் சிலநாட்கள் செல்லலும், தொழிலாளர்கள் தங்களது கஷ்டத்தைத் தாங்கமாட்டாமல் தாங்கள் செய்திருந்த முடிவினை முதலாளிமார்களுக்குத் தெரிவித்தார்கள். அந்தப்

பொல்லாத முதலாளிகள், தொழிலாளர்களது வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. தொழிலாளர்களுக்குப் பரிந்து பேசுவோரும் இல்லை. அதனால், தங்களது கஷ்டத்தைக் குறைத்துக்கொள்ள முயன்ற தொழிலாளர்களுக்கு "ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்பது போல முதலாளிகள் உள்ளதையும் குறைக்கத் தொடங்கினார்கள். தொழிலாளர்களுக்குத் துன்பம் அதிகமாகியது. தலைவலி நீங்கித் திருகுவலியாகியது. அந்தோ! பாவம்!! என்ன செய்வார்கள் அந்த ஏழைத் தொழிலாளர்கள் !!!

என்றாலும், அவர்கள் தங்களது முயற்சியிலே சிறிதும் குறைந்துவிடவில்லை. முரட்டுச் செயல்களுக்கும் தங்களை உள்ளாக்கிக் கொள்ளவில்லை. அவர்கள் தங்களது விடுதலைக்கு நியாயமும் அமைதியுமான வழியையே நாடினார்கள். அங்ஙனம் முயன்றால்தான் தங்களது கட்சி வெற்றியை அடையும் என்று அவர்கள் நம்பினார்கள்; பலரறியப் பறை சாற்றினார்கள்; ஒன்றுகூடிச் செய்தார்கள்; பெரும்பயனைப் பெற்று இன்புற்று வாழ்ந்து வருகிறார்கள்; உலகத்தார்க்கும் நியாய வழிகாட்டிகளாகத் திகழ்கின்றார்கள். அந்த வழிதான் யாது? அதுதான் சர்வவல்லமையுள்ள கூட்டுறவுப் பண்டகசாலை முறை.

ஒருகால் (1843) ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலையில் அத்தொழிலாளரிற் பலர் ஒரு மதுவிலக்குச் சங்கத்திலே கூடினர். அப்பொழுது 'எப்படித் தங்களது கஷ்டத்தை நீக்கிக்கொள்ளலாம்?' என்ற ஆராய்ச்சியினையே செய்துகொண்டிருக்கும் ஒரு தொழிலாளர் எழுந்து, அங்கே கூடியிருப்பவர்களைப்பார்த்து "சகோதரத் தொழிலாளர்களே, நாமோ வறுமை நோயாற் பெரிதும் துன்புற்று வருந்துகின்றோம். நம்முடைய பெண்டு பிள்ளைகளோ அளவில்லாத் துன்பத்திற்கு ஆளாகி நலிகின்றார்

கள். நாமும் பாடுபட்டு வருந்தி உழைக்கின்றோம். 'இங்ஙனம் வருந்திப் பாடுபட்டு உழைத்தும் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய உண்டி, உடை, உறையுள் என்ற மூன்றற்குமே பெரிதும் துன்புறவேண்டியிருக்கிறதே' என்று கருதி ஏழைகளின் விடுதிக்குச் சென்று விடலாமா? அதற்கு மானம் இடையில் நின்று தடை செய்கின்றதே. மானம் உயிரினும் சிறந்ததல்லவா? அன்றியும், அது சோம்பேறிகளது செய்கையாகவும் முடியுமே. பிறநாடுகளுக்குச் செல்லுவோம் என்றாலோ, அது வறுமையாளனாகப் பிறந்த குற்றத்திற்காக ஒருவன் தன்னைத் தானே தீவாந்தர சிட்சைக்கு உள்ளாக்கிக் கொள்வதாக முடிகின்றது. மேலும், 'அங்கும் இத்தகைத் தொல்லைகள் நமக்கு உண்டாகமாட்டா' என்று எங்ஙனம் நாம் நம்ப முடியும்? 'ஐங்காதம் போனாலும் தன் சாயல் தன்னோடே' என்பது பழமொழியல்லவா? இரந்து பிழைப்போம் என்றாலோ அது பெரிதும் இழிவானதாகக் காணப்படுகின்றது. உடலில் வன்மை யிருந்தும் பிறரது கையை எதிர் பார்ப்பது வெட்கமானதல்லவா? கடனை வாங்கி வயிற்றை வளர்க்கலாம் என்றாலோ அது தன்னைத்தானே பிறருக்கு அடிமையாக்கிக் கொள்வதாக முடிகின்றது. கடன் கொடுப்பாரும் இல்லை. அன்றியும், கடன் கொண்டவன் கால் மனிதன். திருடிப் பிழைக்கலாம் என்றாலோ அது மனத்தாலும் நினைக்கத் தகாத தீச்செயலாக அறிவுடையோரால் கருதப்படுகின்றது. ஆதலின், இந்தப் புண்ணிய நாளில் நம்மவர்களது துன்ப நீக்கத்திற்கும் விடுதலைக்கும் உற்ற வழியைப்பற்றி அளவளாவி ஏதேனும் நல்லதொரு முடிவுக்கு வருவது பெரிதும் விரும்பத் தக்கதாகும்" என்று கூறி அமர்ந்தார்.

அமர்தலும், அங்கிருந்த மதுவிலக்குப் பிரசாரகர் ஒருவர் எழுந்து அவர்களைப்பார்த்து "சகோதரர்களே, நம்மவர் இத்துணைத் தாழ்ந்த நிலைமையை அடைந்ததற்குக் காரணம் அவர்களுக்குப் பொருள் வருவாய் குறைந்திருப்பதன்று;

மக்களுடைய ஒழுக்கம், உணர்ச்சி, பொருள் ஆதியவற்றை அழிக்கவல்ல குடிப்பழக்கமே காரணமாவது. அது 'திரு நீக்கப் பட்டார் தொடர்பு' மாம். அன்றியும், குடியர் அறிவுடையோ ரால் நன்கு மதிக்கப்படார்; பெற்ற தாயாலும் வெறுக்கப்படு வார்; அறிவிழந்து மயங்குவார்; அனைவராலும் சிரிக்கப்படு வார். ஆதலின், நம்மவர்கள் தாங்கள் தேடும் பொருள்களைப் பானவகைகளுக்குச் செலவு செய்யாது வீட்டுச் செலவுகளுக்கு உபயோகப் படுத்துவார்களாயின் அவர்களுக்கு எவ்விதத் துன்பமும் வரக் காரணமில்லை. அதுவே நம்மவர்களது விடுதலைக்கு உற்ற வழியாகும்" என்று கூறித் தமது ஆசனத்திலே அமர்ந் தார்.

அப்பால், ஓர் அரசியற் பிரசாரகர்எழுந்தார். "சுய ஆட்சி உரிமை கிடைத்துவிடின் அனைத்துத் தொல்லைகளும் நீங்கி விடும் என்பதே எனது கருத்து" எனத்தெரிவித்துஅமர்ந்தார். பின்னர்க் கம்பளி நெசவுத் தொழிலாளரில் ஒருவர் எழுந்து சபையிலுள்ளவர்களைப் பார்த்து "சகோதரர்களே, மதுவிலக்கு சுயஆட்சி உரிமை ஆகிய இரண்டும் மேலானவையே. நமது பல நாள்அனுபவத்தில் அவ்விரண்டும் இலகுவில் நிறைவேறக் கூடி யனவல்ல. அவ்விரண்டும் கைவரும்வரையில் உயிரோடு இருக்க வேண்டாமா? ஒருவரும் நாணயங்களை அப்படியே உண்ண முடியாது. உண்பதும் இல்லை. உணவுப் பொருள்களாக மாற் றியே அனைவரும் உண்பர். நாம் பாடுபட்டுத் தேடும் பொருளை ஒரு வியாபாரியிடம் கொடுத்து உணவுப் பொருள்களைப் பெறு கிறோம். அவர் அதற்கு இலாபமாக ஒரு பாகத்தை வைத்துக் கொள்ளாமல் வாங்கின விலைக்கே சாமான்களை நமக்குக்கொடுப் பரோ? கொடுக்க மாட்டாரல்லவா? சிறிதும் செல்வத்தைச் சேர்க்கச் சக்தியற்ற நமக்கு அந்த வியாபாரிகள் நம்மிடமிருந்து அடையும் பொருள் அற்பமல்லவே. அற்பம் அற்பமாகுமா? பல துளி பெருவெள்ள மன்றோ? அந்த வியாபாரிகள் வாங்கு

வதுபோல நம்மவர்க்கு வேண்டும் உணவுப் பொருள் முதலியவற்றை மொத்தமாக ஒன்று சேர்ந்து நாமே வாங்கலாகாதா? சில்லறையாகப் பிரித்துக்கொள்ளலாகாதா? அதனுல் நமது பொருள் மிகுதியாகாதோ? பொருளை இழந்தவர் இழந்த அல்லது வைத்து மறந்த வழியிலேயே அந்தப் பொருளைத் தேடவேண்டும். நமது தேட்டம் இடைக்கொள்ளையடிக்கும் வியாபாரிகளாலேயே அழிகின்றது. ஆதலின், நாம் அனைவரும் ஒன்ருகச் சேருவோம். நமக்கு வேண்டும் பொருள்களை மொத்தமாக வாங்குவோம். சில்லறையாகப் பிரித்துக் கொள்வோம். இங்ஙனம் செய்வது எவர்க்கும் இடையூறு செய்வதாகாது. இதுவே நம்மால் இப்பொழுது செய்யத்தக்கது" என்று கூறி அமர்ந்தார்.

இஃது எல்லோராலும் ஒருமனதாய் ஒத்துக் கொள்ளப்பட்டது. உடனே கம்பளி நெசவுத் தொழிலாளர்களில் இருபத்தெட்டுப்பேர் ஊக்கத்துடன் முயலத் தொடங்கினர். அங்கத்தினர்களைச் சேர்க்கவும், மூலதனத்தை அமைக்கவும் ஒரு கையொப்பச்சீட்டு வெளியிடப்பட்டது. அஃது அந்நகரத்தின் சுற்றுப் பக்கங்களிலுள்ள தொழிலாளர்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டது. கையொப்பத் தொகையோ ஒவ்வொரு வருக்கும் இரண்டு பென்ஸ் தான். கையொப்பத் தொகையை வசூல் செய்ய மூன்று கௌரவ உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பட்டார்கள். இராஸடேல் 'குபேரர்' களுக்கு அந்த இரண்டு பென்ஸ் தொகையைக் கொடுப்பதும் அப்பொழுது பெரிதும் துயரத்தை விளைவிப்பதாயிருந்தது. ஒவ்வொருவரிடமும் பல முறைகள் சென்றுதான் அந்தச் சிறிய தொகையையும் வசூல் செய்ய முடிந்தது. இப்படியாக இருபத்தெட்டுப் பவுன் மூலதனமாகச் சேர்ந்தது. 'இருபத்தெட்டுத் தரித்திரர்கள் சேர்ந்து இருபத்தெட்டுப் பவுனை வைத்துக்கொண்டு எப்படிப் பெரிய காரியங்களைச் செய்து விடலாம்' என்று நினைக்கக்கூடும். அஃது

உண்மையே. ஆனாலும், அவர்கள் தங்களது ஊக்கத்தில் குன்றி விடவில்லை. பின்னர் ஒருநாள் (24-10-1842.) "இராஸடேல் நியாயவழியார்களின் சங்கம்" என்ற பெயருடன் ஒரு சங்கத்தை நிலையிட்டுக் கொண்டார்கள். அச்சங்கத்திற்கு உரிய நோக்கங்கள் ஆறு. விதிகள் பதினன்கு. அவற்றைச் சுருக்கமாகக் கூறவேண்டுமாயின் "சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமையாவது; 'எனது, உனது' என்பதிலும் 'நமது' என்பதே மேலானது; கடன் வாங்குவதும், கடனைக்கொடுப்பதும் தீமையைத்தருவன; தமக்குவேண்டியவற்றைத்தாமேசெய்துகொள்ள வேண்டுமே தவிரப் பிறரது கையை எதிர் பார்த்தல் கூடாது; 'எல்லார்க்கும் ஒருவர்; ஒருவர்க்கு எல்லாரும்'; எவருக்கும் அவரவரது உரிமையை அனுபவிப்பதில் இடையூறு உண்டாகலாகாது; கடன், வட்டி, இலாபம், போட்டி, தரகு என்ற தீமைகளினின்றும் நீங்கவேண்டும்." என்ற சில தொடர் மொழிகளால் கூறிவிடலாம். இவை கேட்பதற்கு இனிமையாக இருந்தாலும் இவற்றைச் செய்து நிறைவேற்றுவதில் மிகுந்த கஷ்டங்கள் உண்டு. ஆனல், அவர்கள் நிறைவேற்றி இன்புற்று வருகிறார்கள்.

இம்முறையில் அக்கம்பளிநெசவுத் தொழிலாளர்கள் ஒருநாள் (21-12-1844) தங்களது தொழிலைத் தொடங்கினார்கள். பண்டகசாலைக்கென வருஷத்திற்குப் பத்துப் பவுன் வாடகை கொடுப்பதாக ஓரிடத்தை அமர்த்திக்கொண்டார்கள். பதினன்கு பவுனுக்கு வாங்கிய சாமான்களுடன் தங்களது பண்டகசாலையைத்திறந்து வைத்தார்கள். முதலில் பலரும் அவர்களைப்பழித்தனர். நாளடைவில் அது வளரலாயிற்று. இப்பொழுது அச்சங்கத்துக்கு ஆயிரக் கணக்கிலே கிளைச் சங்கங்கள் இருக்கின்றன. பல விளை நிலங்களும், இயந்திர சாலைகளும் உள. பல கப்பல்களும், புகை வண்டித் தொடர்களும் உண்டு. பிரசங்க மண்டபங்களும், புத்தகசாலைகளும் இருக்கின்றன. அச்சங்கங்களிற்



ஒரு பெரிய கட்டிடம்.

சேர்ந்தவர்களுடைய குழந்தைகள் செலவின்றிக் கல்வியைப் பெறுகிறார்கள் கோதுமைமா, சர்க்கரை, வெண்ணெய், இறைச்சி என்ற நான்கு பண்டங்களுடன் தொடங்கப்பட்ட அச்சங்கத்தில் இப்பொழுது உப்பு முதல் கர்ப்பூரம் வரையிலும், குண்டூசி முதல் யானைத் தந்தம் வரையிலும் கிடைக்கும். வளர்த்துவானேன். அங்கத்தினர்களுக்குத் தேவையான அனைத்தும் அங்கேகிடைக்கும். சிறுவர் வயதுவந்தவர், பொருளாளர் ஏழை, ஆண் பெண் என்றபேதமின்றி அனைவர்க்கும் சமமாக எல்லாப் பொருள்களும்கிடைக்கின்றன. அக்கூட்டத்தினர் இப்பொழுது நாட்டை ஆளும் சபையில் பிரதான ஸ்தானத்தைப் பெற்று வாழ்கின்றனர். அவர்களைப் பார்த்துப் பிறதேசங்களிலும் அம்முறை பரவி வருகின்றது; நமது நாட்டிலும் சிற்சில இடங்களில் தோன்றியுள்ளது. அம்முறை நமது நாடு முழுவதிலும் பரவி நலம் பயப்பதாக.

---

## 6. உயர்குடிப் பிறந்தார்.

மனிதர்களுக்கு இருக்கவேண்டிய இன்றியமையாத பெருமைகளுள் முதற்கண் இயற்கையில் அமையவேண்டியது உயர்ந்த குடியிலே பிறந்தவர்களது குணம். உயர்ந்தகுடி—தொன்று தொட்டுப் புகழுடன் வரும்குடி. அத் தன்மை செம்மையும் நாணமும் உடைமையால் வெளிப்படும். செம்மை—செப்பம், அஃதாவது கருத்தும், செயலும் தம்முள் மாறுகாமை.

இவை எவரிடத்திலே பிறர் கற்பிக்கவேண்டிய தில்லாமல் தாமாகவே அமைந்துகிடைக்கின்றனவோ அவரே உயர் குடிப் பிறப்பினராவர். இவர் தமது குலம்புரி நடையாகிய ஒழுக்கத்தினின்றும் சிறிதும் தவறமாட்டார்; மறந்தும் வாய்மையினின்றும் பிறழார்; தமது நிலைமையைப் பெரிதும் காத்து வருவார்.

ஒழுக்கமோ மக்களாவார்க்கு உயிரினும் சிறந்தது. அது தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் தக்கவாறு ஒழுகவேண்டியன இவை இவை என அறிவுடையோரால் விதிக்கப்பட்ட ஆசாரமாவது. இது நல்லொழுக்கம், தீயொழுக்கம் என இரு வகைப்படும். நல்லொழுக்கமோ அறிவுடையோரால் கைக்கொள்ளப்படுவது. அந்த நல்லொழுக்கம் அறநூல்களுள் விதித்தவற்றை உணர்ந்து அம்முறையே நடப்பதாம். அஃதின்றேல் ஆறறிவினையுடைய மனிதராயினும் ஐயறிவினையுடைய விலங்கினங்களிலும் கடைப்பட்டவராகக் கருதப்படுவார்.

ஒழுக்க முடைமையோ ஒருவனை உயர்ந்த குலத்தவனாக்கி விடும். அஃதின்மை ஒருவனைத் தாழ்ந்த குலத்தவனாக்கிவிடும். பொறுமை கொள்பவனிடத்திலே எப்படிச் செல்வம் தங்காதோ

அப்படியே ஒழுக்கம் இல்லாதவனிடத்திலே மேன்மைத் தன்மை நிலைபெறாது. நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாகி இம்மை மறுமை என்ற இரண்டு இடங்களிலும் இன்பத்தை உண்டாக்கும். உயர்ந்தோர் எப்படி நடக்கின்றனரோ அப் படி நடப்பதே நல்லொழுக்கம். ஒருவர் நல்லொழுக்க முள்ள வர் என்பதை அவரிடத்திலுள்ள நன்றியறிதல், பொறை யுடைமை, இன்சொல், இன்னா செய்யாமை, கல்வி, ஒப்புர வறிதல், அறிவுடைமை, நல்லிணக்கம் ஆகிய ஆசார வித்துக் களால் அறிந்து கொள்ளலாம். இக்காரணம் பற்றியே உயர் குடிப் பிறந்தோர் ஒழுக்கத்தைத் தமது உயிரினும் சிறந்ததா கப் போற்றி வருவர்.

'பணியுமாம் என்றும் பெருமை' என்றபடி உயர்குடிப் பிறந்தோர் என்றும் அடங்கியே நடப்பர். இது மனம் மொழி மெய் என்பன தீ நெறியிலே செல்லாது அடங்கி நடப்பது என விரியும். இது பிறரிடத்திலே உள்ள குற்றங்களைக் கண்டு பிடிக்க முயலாமல் தம்மிடத்திலுள்ள குற்றங்களை ஆராய முய லுவதால் வளர்வது. இக் குணம் நடுவுநிலைமையில் ஒழுகுபவ ரிடமே தோன்றுவதாகும்.

இந்த அடக்கத்தை உடையவர் தேவருலகை அடைவர். நல்லோரால் பெரிதும் கொண்டாடப்படுவர்; மிகப் பெரிய பெருமைகளையும் அடைவர்; தமது நிலைமையினின்றும் கலங் காது நிற்பர்; பிறர் மனம் மகிழ்வுறுமாறே நடப்பர்; தரும தேவதையினது திருவருளைப் பெறுவர்; அனைத்துச் செல்வங் களையும் எய்துவர்; எல்லார்க்கும் நன்மையையே செய்வர்; கோபமாகிய பகைவனிடமிருந்து தப்பிப் பிழைப்பர்; கொடுஞ் சொற்களைக் கூறமாட்டார்; செல்வத்தாலாகிய பெரும் பயனை அடைவர்; தம்மைச் சேர்ந்த தீயோரையும் நல்லோராக்குவர்;

அமைதியுற்று வாழ்வர் ; கல்வி பெருமிதம் குடிப்பிறப்பு ஆதிய பெருமைகளால் மிகச் சிறப்புறுவர் ; பிறர் அரிதில் அறிய முடியாத உண்மைகளையும் எளிதில் உணர்வர் ; அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சி நடப்பர் ; செய்வனவற்றை உலகம் உவக்குமாறு செய்வர்; 'போதும் என்ற மனமேபொன் செய்யும் மருந்து' என்றதற்கேற்பப் பெற்றதைக் கொண்டு மகிழ்ந்திருப்பர் ; ஐம்புலன்களையும் பொறிவழியே போக்காமல் அடக்கி ஆள்வர். இத்துணைச் சிறந்த நன்மைகளை அளிக்கக் கூடிய அடக்கத்தை உயர்குடிப் பிறந்தார் கைக்கொள்ளாது இருப்பரோ ?

இங்ஙனம் உணர்ந்து நல்லொழுக்க சீலராய் அடங்கி நடக்கும் ஒருவர் வறுமைகாரணமாகவும், வஞ்சகம் காரண மாகவும் எப்பொழுதும் நடுவு நிலைமைக்கு மாறான காரியங் களைச் செய்யமாட்டார்; தாம் கெட்நேர்ந்த காலத்தும் அயலார் கெடுமாறு எண்ணமாட்டார்; உலகம் முழுவதையும் ஒருகுடை யின்கீழ் ஆளும்உரிமை கிடைப்பதானாலும் பொய்யினைப் பேச மாட்டார் ; தமது உடலே வற்றி உயிர் நீங்குங்காலமானாலும் உண்ணத் தகாதவர் கையால் உணவருந்தமாட்டார் ; மேலோர் செய்த குற்றச்செயல் சந்திரனிடத்துக் களங்கம்போல எப்பொ ழுதும் அழியாது நின்று இழிவுபடுத்துமாதலின் அன்னார் மறந்தும் தமது குடிப்பிறப்பிற்குக் குறைவு வரக்கூடிய எத் தகைய இழிவான காரியங்களையும் செய்யமாட்டார். 'நிலத்தின் உரத்திற்கேற்ற முளை' என்பது போலப் பிறப்பின் பெருமைக் கேற்பவே அவர்எப்பொழுதும் உண்மைவழியிலே ஒழுகி நல் லொழுக்கமுள்ளவராய் அடங்கிநடப்பர். அடக்கம் இன்றேல் நல்லொழுக்கம் இல்லை. நல்லொழுக்கம் இன்றேல் உயர்குடிப் பிறப்பில்லை. அடக்கமும் ஒழுக்கமும் இல்லாதவர் உயர்குடிப்

பிறந்தார் எனக் கூறப்பட்டாலும் அவர் உயர்குடிப் பிறவாதவரே; அவ் விரண்டும் உடையவர் எக்குடிப் பிறந்தாராயினும் அவர் உயர்குடிப் பிறந்தவரே.

---

## 7. தருமம்.

உலகங்களின் ஒரே தலைவராகிய கடவுளுக்கு மக்களாவார் என்றும் மீளாஅடிமைகள் ஆவார். தமக்குத் திருத்தொண்டு செய்து பிழைக்கும் பொருட்டே ஆண்டவனால் அவர்களுக்கு இந்த அருமையாகிய உடம்பு அளிக்கப்பட்டது. மனிதர்களிடத்திலுள்ள பொருள்கள் எல்லாம் கடவுள் கொடுத்தனவே.

கடவுள் எதன் பொருட்டுப் பொருளைக் கொடுத்தருளினார்? தாமும் உண்டு, பிறரையும் உண்பித்து இம்மை மறுமைப் பயன்களை எய்தும் பொருட்டே ஒருவருக்குக் கடவுள் பொருளைக் கொடுத்தருளியது. இங்ஙனமாக ஒருவன் இதற்கு மாறாக நடக்கலாகுமா? ஓர் ஊழியன் தன்னிடத்தே இருக்கும் தனது தலைவனது பொருளை அந்தத் தலைவனது கருத்துக்குப்பொருந்திய வழிகளில் அல்லவா செலவு செய்தல் வேண்டும்? அஃதன்றோ அந்தத் தலைவனை மகிழச் செய்வது? அங்ஙனம் செய்யாமல் அவனது கருத்துக்கு மாறாகத் 'தனது நன்மைக்கு உதவும்' எனச் சேமித்து வைத்துக்கொள்ளலாமா? அல்லது தனது இச்சையின்படியே செலவு செய்துகொள்ளலாமா? அவை தன்னலம் பாராட்டும் தீச்செயலும், நம்பிக்கை மோசமும் ஆக அன்றோ முடியும்? உலோப குணமாகவும் ஆகுமே. அத்தலைவனது தண்டனையையும் அடைவிக்குமே.

உண்ணவும் உடுக்கவும் நிற்கவும் இருக்கவும் வழியின்றி வருந்துகின்ற எளிய மாந்தர்கள் எண்ணிறந்தவராக நம்மைச்

சுற்றிலும் இருக்கின்றனரே. அவர்களுக்கு உண்ண உண வும், உடுக்க உடையும், நிற்க நிழலும், இருக்க இடமும் கொடுத்து உதவவேண்டியது செல்வத்தைப் படைத்தவர் செய லன்ருே? அங்ஙனம் செய்யாது தாங்கள் மாத்திரம் நல்ல வீடு களிலே வாசம் பண்ணல், நல்ல அறுசுவைகளோடு கூடிய உண வுகளை உண்ணல், அழகிய பட்டு பருத்தி இவற்ருலாகிய ஆடை களை உடுத்திக் கொள்ளல் முதலிய இன்பங்களை அனுபவித்து அவர்களை மறத்தல் கூடுமா? வருமானத்திலே நான்கில் ஒரு பாகத்தைத் தருமத்திற்குச் செலவு செய்தல் நீதியாகும். இது சொற்ப வருமானத்தை உடையவர்களால் கூடாதாயினும், அவரும் இயன்ற அளவு தருமத்தைச் செய்தாக வேண்டும் என்பதும் நியாயமாகும்.

வேலையைச்செய்து உண்டு உடுத்து உயிர்வாழச் சக்திபற்ற வர்களுக்கும் குருட்டர் முடவர் முதலிய அங்கவீனர்களுக்கும் போதிய உதவிகளைச் செய்வது பொருளாளர்களது கடமை யாகும். உழைத்து உயிர்வாழச் சக்தியுள்ளவர்களுக்கும், அநா தப் பிள்ளைகளுக்கும் கல்வியையும், கைத்தொழில்களையும் கற் பித்தலும் அவர்களுடைய கடமைகளாகும்.

'இவற்றைச் செய்வதற்கு அதிகம் பொருள் வேண்டி யிருக்குமே. என்னல் அவ்வளவையும் கொடுத்து உதவ இயல வில்லையே. சிறிதுதானே கொடுக்க இயலும். அச் சிறியதைக் கொடுத்தும் நிறைவேற்ற முடியாதே' என்று எண்ணி எவனும் வாளா இருத்தலாகாது. ஒவ்வொருவரும் சிறிது சிறிதாக வேனும் இயன்ற அளவு கொடுத்தே ஆகவேண்டும். முதல் வீட் டிலே நுழைந்தபொழுது பிச்சைக்காரனது பிச்சைப் பாத்திரம் வெற்றுப் பாத்திரமாகவேதான் இருக்கும். இந்தப் பிச்சைக் காரன் கடைசிவீட்டில் நுழைந்து திரும்புங்கால் அந்தப் பாத்தி

ரம் நிரம்பியிருக்கும். அஃது எங்ஙனம் நிரம்பியது? ஒவ்வொரு வீட்டாரும் சிறிது சிறிதாக அந்தப் பாத்திரத்திலே இட்ட பிச்சைஅரிசியால் அல்லவோ நிரம்பியது ? ஒரு வீட்டுக்காரரும் போடாமல் இருந்துவிட்டால் நிரம்புமா ? நிரம்பாதன்றோ ? அங்ஙனமேதான் இந்தத் தருமத்தின் பயன் நிரம்புவதும் நிரம்பாததும். உண்ணும்போது ஒருபிடி சோற்றை அளித்தல் எவர்க்கும் எளிதேயாம். 'சோறிட நாடும் துணிதரக் குப்பையும் ஆறினோர்க்கு உண்டு ' என்னும் உந்தியார்.

தனது வருமானத்திலே காற்பாகத்தைத் தருமத்தின் பொருட்டுச் செலவுசெய்ய ஒருவன் விரும்புகிறான். ஆனால் அவனது நிலைமை அதற்கு இடந்தரவில்லை. எனினும் அரை வீசம், கால்வீசம், அரைக்கால்வீசம் என்ற எவ்வளவு சிறிய அளவிலேனும் அவன் தனதுபொருளைத் தருமத்திலே செலவு செய்து வருவானாயின் அஃது அவனுக்கு ஒருகாலத்திலே தருமப் பயனை முழுவதும் நிறைத்துவிடும். இங்ஙனமே பலரும் தங்களால் இயன்றஅளவு சிறிது சிறிதாகக்கொடுத்து உதவினால் அந்தத்தொகை 'பலதுளி பெருவெள்ளம்' என்றபடி பெருகிப் பெரிய பெரிய தரும காரியங்களையும் செய்து முடித்தற்குத் துணைசெய்வதாகும். நாட்டிலுள்ள கலாசாலை, வைத்தியசாலை, வாசகசாலை, புத்தகசாலை முதலியன பல இம்முறையில் தோன்றியனவே.

இங்கே கூறியவற்றை உணர்ந்து தருமச்செயலை மேற்கொண்டவர் முதலிலே தங்களுடைய சுற்றத்தார்களைக் காப்பாற்றல் வேண்டும். " சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்" என்பதும் "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல் " என்பதும் நீதி மொழிகளல்லவா ? செய்யுங்கால் ஏதும் பதில் உதவியை எதிர்பார்த்துச் செய்தலாகாது. அஃது ஒருவருக்கொரு

வர் பயன் கருதிச் செய்து கொள்ளும் செயலேயாகும். உதவி யாக மாட்டாது.

'தாம் செய்யும் தருமச்செயல் பிறர்பலரால் அறியப்படல் வேண்டும்' என்று எண்ணுவது அறிவுடையோர் செய்யும் செயலாகாது. அஃது ஆடம்பரக்காரரது செயலாகவே முடியும். அன்றியும், அத்தகைத் தருமம் என்றும் நின்று நடைபெறாது. 'தாம் செய்வது தமது மற்றொருகைக்கும் தெரிதல் கூடாது' என்று கருதிச் செய்பவரே உத்தம தருமசீலர் ஆவர். அன்னார் 'தம்மால் தருமமாகச் செய்யப்பட்ட பொருளே தம்முடைய பொருளாவாது. தாம் உண்டனவும், சேர்த்து வைத்துள்ளன வும் தம்முடையன ஆகா' என்ற உண்மையை நன்றாய் உணர்ந் தவர் ஆவர். அவரே 'இப்பொருளை நாம் பிறக்கும் பொழுதே கொண்டுவரவில்லை. அதனை இறக்கும் பொழுதும் கொண்டு போக இயலாது. காதற்ற ஊசியும் கடை வழிக்கு வாராது. இப் பொருளோ இடைநடுவிலே கடவுளால் தந்தருளப்பட்டது. இப்பொருளுக்கு நாம் சொந்தக்காரர் என்பது பெயர்மாத் திரையே. இது சிவன் தந்ததாதலினால் நாம் தருமகர்த்தரே. ஆதலின், இப்பொருளைப் பிறர்க்கும் கொடுத்து மகிழ்வுறல் வேண்டும். இஃதொன்றே பொருள் படைத்ததன் பயனாவது' என்று எண்ணிப் பிறர் பொருட்டுத் தருமத்தைப் பண்ணி இரு பெரும் பேறுகளையும் எய்தற் குரியவர் ஆவர்.

தருமம் முப்பத்திரண்டு வகையாகக்கூறப்படும். அவற்றுள் சில இந்தக் காலத்திற்கு வேண்டாதனவாகக் கருதப்படலாம். புதிதாகச் சில தருமச்செயல்கள் காலத்திற் கேற்பச் சேர்க்கவும் படலாம். அறிவுடையோரால் 'எவை எவை தருமச்செயல் கள்' என்று கூறப்படுகின்றனவோ அவைற்றை உள்ளன் போடு செய்பவரே தருமசீலர் ஆவர். அங்ஙனம் செய்யாதவர்

உலோபியே ஆவர். தாமும் அனுபவித்துப் பிறருக்கும் உதவாத வர் தேனீக்குச் சமமாவர். தேனீ எப்படிப் பல பூக்களிலிருந் தும் தேனைக்கொணர்ந்து சேர்த்துத் தான் உண்ணாது அழிந்து விடுகின்றதோ அப்படியே உலோபிகளும் பொருள் இருந்தாலும் இழந்தவரே ஆவர். பணத்தைப் பாடுபட்டுத் தேடிப் புதைத்து வைப்பவர் கேடு கெட்டவரே. தருமத்தின் மேம்பட்ட செல் வம் இல்லை. தருமமே இறக்கும் பொழுதும் உதவக்கூடியது. சிவிகையில் அமர்ந்திருப்பவரையும், சிவிகையினைத் தூக்கிச் செல்பவரையும் பார்ப்பதே தருமத்தைச் செய்வதால் வரும் உயர்வையும், தருமத்தைச் செய்யாமையால் வரும் இழிவையும் காட்டும்.

ஆதலின் ' தருமமே செய்யத்தக்கது. தருமமே வெற்றி யைத் தருவது. தருமமே புகழைத்தருவது. தருமமே இனிப் பிறவா நிலையாகிய இன்பத்தை அளிப்பது. தருமமே அன்பை வளர்ப்பது. தருமமே அருளைக் கொடுப்பது' என்ற இந்த உண் மைகளை உணர்ந்து இயல்வது கரவாமல் செல்லும் வாயெல் லாம் அறஞ்செயவிரும்பித் தருமத்தைச் செய்து அன்புற்று இன்புற்று வாழ்வதே மாந்தரது கடமையாகும்.

---

## 8. நட்பு.

இஃது, இருவர் மனம்மொழி மெய்களால் வேறுபாடின்றி ஒருவரை யொருவர் விரும்பி யிருப்பதைத் தெரிவிக்கும் ஒரு தொழிற் பெயராம். இந்நட்பை ஆசிரியர் திருவள்ளுவ தேவனார் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி யொத்தல் என மூன்று வகை யாக்கியுள்ளார். இவற்றுள் மூன்றுவதாய உணர்ச்சி ஒத்தலே மிக மேலானதாம். அவ்வுணர்ச்சி யொத்த தலையாய நட்பினர்

என ஆசிரியர் பரிமேலழகரால் சிறப்புடை உதாரணமாக எடுத்துக் காட்டப்பெற்ற இருவரது கதையை ஈண்டுக் கூறுவோம்.

முன்னொரு காலத்திலே தமிழ்நாட்டு மூவேந்தருள் ஒருவனை கோப்பெருஞ்சோழன் என்பான், உறையூர் என்னும் பதியைத் தனக்கு இராஜதானியாகக் கொண்டு சோழநாட்டை அரசாண்டு வந்தான். அவன் கல்வி கேள்விகளில் மிக்கவன்; தெய்வபக்தி யுள்ளவன்; தன்னுயிரைப் போலவே மன்னுயிர்களைப் பார்க்கும் பெற்றியுள்ளவன்; நீதிதவறு நெறிமுறையோன்; யாதுகாரணம் பற்றியோ, தன்மீது பகைமைகொண்ட தன்னுடைய மக்களுடன் மாறுபட்டுப் போர்தொடங்கிய மாசு ஒன்று தவிர வேறு சிறிதுங் குற்றமில்லாதவன்; எவர்க்கும் எளிதில் விளங்கும் வண்ணம் நட்பின் தன்மையை எடுத்துக்காட்டிய ஏந்தல்; பொத்தியார், புல்லாற்றூர் எயிற்றியனர் போன்ற புலவர் பெருமான்களுடைய அறவுரைகளைத் தட்டாதுகேட்டு அவற்றின் வழிநடந்து அவர்களை ஆதரித்துவந்த அண்ணல்; மக்களுடன் போர்செய்தலைக் குற்றமுடைத்தென்று பற்பல காரணங்களால் இடித்துக்கூறிய பேரறிவாளராகிய புலவருக்குத் தனது நாட்டைக் கொடுத்துத் தனது மறுமைக்கான வழிகளை நாடியிருந்தவள்ளல்.

இத்தகையாளனுக்கு உற்ற நட்பாளர் ஒருவர் இருந்தனர். அவர், பாண்டிநாட்டிலுள்ள பிசிர் என்னும் ஊரிற் பிறந்தவர். ஆந்தையார் (ஆதன் + தந்தையார்) என்னும் பெயரினை யுடையவர். அவர், அக்கால வழக்கப்படி தமது ஊர்ப்பெயரோடு பொருத்திப் பிசிராந்தையார் என வழங்கப் பெற்றார்.

இவ் விருவருள், அரசன் சோழ நாட்டிலேயே இருந்தவன். ஆந்தையார் பாண்டி நாட்டிலேயே இருந்தவர். ஒருவரை

யொருவர் நேரிற் பார்த்துக்கொண்டதே யில்லை. ஆனால், அரசன் ஆந்தையாருடைய குணவிசேஷங்களைப் பலர்சொல்லக் கேட்டுளான். புலவரும் அரசனுடைய குணவிசேஷங்களைப் பலர்சொல்லக் கேட்டுளார்.

இன்னணம் உயர்வாகக்கேட்ட குணவிசேஷங்களை உன்னுந்தோறும் அவ்விருவர்களுக்கும் மனத்தே அன்பு முதிர்ந்து கொண்டே வந்தது. அன்பு முதிர முதிர இருவருடைய மனங்களும் ஒத்தன. அதனால் அரசன் நினைப்பன ஆந்தையாருக்குப் புலப்படும். ஆந்தையார் எண்ணுவன அரசனுக்கு விளங்கும். இவ்வாறு இவர்களது நட்பு முதிர்வடைந்து வந்தது.

இந்நிலையில், ஒருகால் சோழன் இவ் வுலகவாழ்க்கையைத் துறக்கவேண்டி அக்கால வழக்கப்படி வடக்கிருக்க எண்ணினான். உடனே, தன்னருகிலிருந்த மந்திரி முதலாயவர்களையும், புலவர் பெருமக்களையும் பார்த்து "ஐயன்மீர், யான் இவ்வுலகவாழ்க்கையைத் துறப்பான் வடக்கிருக்கப் போகின்றேன். அதனை யுணர்ந்து எனது உணர்ச்சியோ டொத்தவரும் பாண்டி நாட்டிலுள்ள பிசிர் என்னும் ஊரில் இருப்பவரும் எனது அரிய உயிரைப் போன்றவருமான ஆந்தையார் என்னும் நண்பினர் அப்பொழுது வருவார்" என்று கூறினன்.

கேட்ட அன்னார், அரசனை நோக்கி "மன்ன, யாது நீ இங்ஙனம் மனம் பேதுறுவது? எவரும் உயிருட னிருக்கும்பொழுது நட்டல் உலகத்தியல்பு. அவரோ உன்னை நேரில் அறியார். அன்றியும், உன்னால் எவ்வித உதவியையும் அடைந்திலர். மேலும், நீயோ இப்பொழுது உலகப் பற்றைத் துறந்து போகின்றனை. இந்நிலையில் உன்னிடத்தில் அவர் எதற்குவருவார்? இவற்றால் நீ கூறுவது பொருந்தாதன்றோ?" என்றனர்.

உடனே, அரசன் அவர்களை நோக்கி "ஐயன்மீர், நீங்கள்

சிறிது அவசரப்பட்டுவிட்டீர்கள். அவர் நீங்கள் கூறியன போன்ற அத்துணைக் குறுகிய நோக்க முடையவரல்லர். அவர் எனது செல்வக்காலத்து என்னிடம் வரவேண்டுவது அத்துணை ஆவசியகமன்று. எனது இடுக்கட்காலத்து வாராதிருத்தல் குற்றமாம். அவ்வுயர்வை அவர் நன்கறிந்தவர். ஆதலின் அவர் தவறாது வருவர்'' என்றனன்.

இங்ஙனஞ் சின்னாட்செல்ல, அரசன் ஒருநாள் மீட்டும் சபையோர்களைப் பார்த்து ''சபையோர்களே, யான் இன்று வடக்கிருப்பேன். எனது உள்ளக் கருத்தை எங்களிருவருடைய உணர்ச்சி ஒத்தலின் உயர்வால் நன்கறிந்த அப் பிசிராந்தையார் இன்னேவருவர். எங்களிருவரது மனத்தின் ஒற்றுமைத் தன்மையை நீங்கள் இதனிற் காண்பீர்கள். அன்றியும், அவர் வரும்பொழுது எனது பெயரையே தமது பெயராகக் கூறிக் கொண்டுவருவர். ஆதலின், அவர்க்கும் என்னுடன் வடக்கிருக்கத் தக்க இடத்தைத் திட்டஞ் செய்து வைப்பீர்களாக'' என்றுகூறி வடக்கிருந்தனன். அவர்களும் அங்ஙனமே ஆந்தையார்க்கென்று ஓர் இடத்தை அமைத்து வைத்தார்கள்.

இஃதிங்ஙனமாக, ஆந்தையார் தமது ஆருயிர்த் தோழனாகிய சோழன் வடக்கிருந்ததைத் தமது உணர்ச்சியாலறிந்தார். இனி இத்தகைய ஒத்த நண்பன் கிடைப்ப தரிதென உணர்ந்தார். தாமும் அவனுடன் வடக்கிருத்தலே உயர்வெனத் துணிந்தார். உடனே தம்மூரைவிட்டுச் சோழன் உறந்தைக்குப் புறப்பட்டார். அரசன் வடக்கிருக்கு மிடத்திற்குச் சென்றார்.

அக்கால், அங்கிருந்தார் அனைவரும் ஆந்தையாரை நோக்கி ''ஐயரே, நீவிர்யாவர்? யாண்டையர்? எங்கு வந்தீர்'' என்று வினவ, அதற்கு அப்பெருந்தகையார் மந்திரி முதலாயினர்

களைப் பார்த்து "ஐயன்மீர்" என்று தொடங்கி முன்னே அரசன் கூறி யாங்கு அனைத்தையும் நவின்றனர்.

கேட்ட ஆண்டுள்ளோர் அனைவரும் பெரு மகிழ்வெய்தி அவரைப் பார்த்து "புலவீர், தங்களது வரலாற்றால் தாங்கள் வயது சென்றவர்களாகக் காணப்படுகின்றீர்கள். ஆயினும், மூப்பிற்கடையாளமாய நரை திரை முதலாயின நும்மாட்டுக்காணப் படவில்லையே; அதற்குக் காரணம் யாது? அதன் நுட்பத்தை எங்களுக்கு விளக்குங்கள்" என வேண்டினர்.

வேண்டலும், ஆந்தையார் அங்குள்ளவர்களை நோக்கி "ஐயன்மீர், என்னுடைய மனைவி மக்கள் முதலாயினர் அறிவு நிரம்பி யிருக்கின்றனர். ஆண்டிலே சிறியவர்கள் முதியோனாகிய எனது வார்த்தையைத் தட்டி நடப்பதில்லை. எங்களுடைய அரசனும் நீதிநெறிக்குப் புறம்பான காரியங்களைச் செய்யாமல் எங்களைக் காத்து வருகின்றான். இவற்றோடு எங்களுடைய ஊரில் மனமடங்கிய சான்றோர் பலர் வாழ்ந்து வருகின்றனர். ஆதலின் என்னிடம் நரை, திரை முதலாயின காணப்படவில்லை." என்றுகூறிவிளக்கினர். உடனேதமதுஉயிர்த்தோழனாகிய சோழன் வடக்கிருந்த இடத்திற்குச் சென்று மன்னனைக் குறித்து மனம் வருந்தினர். தாமும் தமக்கென்றே அரசனால் நியமிக்கப்பெற்ற இடத்திலிருந்தனர். பாருங்கள்! இவ்வுத்தமர்களது நட்பை. இஃதன்றோ தலையாய நட்பாவது?

---

## 9. உடலமைப்பு.

கடவுட் படைப்பில் எறும்பு முதல் யானை ஈறாகப் பலதிறப்பட்ட உயிர்ப் பிராணிகள் இருக்கின்றன. அவற்றுள் மக்கட் பகுதியினர் உயர்ந்த நிலையினர் ஆவர். கண்ணாலே பார்த்தல்,

காதாலே கேட்டல், வாயாலே உண்ணல், மூக்காலே முகர்தல், மெய்யாலே தொடுதல் என்பன ஏறக்குறைய பிற பலவகைப் பிராணிகளுக்கும் பொதுவாகும். ஆனால், மேற்சொல்லியவற்றைத் தவிர மனத்தால் நினைத்துப் பகுத்து அறிந்து உரைக்கும் ஆறாவது அறிவு மனித வகுப்பினருக்கே உண்டு என்பது அனுபவத்தால் அறியப்படுகின்றது. மேலும், மனித வகுப்பினரே தலை நிமிர்ந்தும் அண்ணாந்து பார்த்தும் அகண்டமான கடவுளைத் தொழும் இயல்பினைப் பெற்றவர் ஆகின்றனர். இப்படிப்பட்ட பல அருமையான காரியங்களைச் செய்ய வல்லதாதலின் மனித உடம்பு மிக ஆச்சரியமான அமைப்பினைப் பெற்றதாகவே இருத்தல் வேண்டும்.

மனித உடல் ஒரு கோயில் போன்றது; உயிருக்கு இருப்பிடமாய் இருப்பது. "பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல் போல்" என்பர் இலக்கண நூலார். தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, வெண்ணீர் என்ற ஏழு தாதுக்களால் யாக்கப்பட்டது உடம்பு. அதனது அருமையான அமைப்பினாலேயே படுத்தல், இருத்தல், எழுதல், நிற்றல், நடத்தல், ஓடுதல், ஆடுதல் முதலியவற்றைச் செய்ய இயலுகின்றது; கைகளையும் கால்களையும் நீட்டவும், மடக்கவும், சுழற்றவும் முடிகின்றது; உலக விஷயங்களை உணர்ந்து சுகமாக வாழத் தக்க வசதி உண்டாகின்றது.

மனித உடலை வெளித் தோற்றத்தின்படியே பார்க்க அதனிடத்தில் மூன்று பாகங்கள் தெளிவாய்க் காணப்படுகின்றன. அவை தலை, உடல் அல்லது முண்டம், கைகால்கள் என்பனவாம். இவற்றுள் மேலே இருக்கும் தோலை உரித்துப் பார்த்தால் உள்ளே சதை, எலும்பு, இரத்தம், நரம்பு முதலியன காணப்படும். அன்றியும், அங்கே அமைந்திருக்கின்றதும்

சதை, இரத்தக் குழாய்கள், நரம்புகள் முதலாயவற்றை இடம் விட்டு இடம் பெயராமல் காத்து வருகின்றதும் ஆகிய எலும் புச் சட்டம் மிக முக்கியமானதாகும்.

"எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்" என்பர் கற்று வல்ல பெரியோர். அறிவைப் பெருக்கும் பலகணிகள் போன்ற கன்மேந்திரியங்களாகிய வாய், கண், மூக்கு, காது என்பன அங்கேதான் அமைந்திருக்கின்றன. மேலும், செல் வத்துட் செல்வமாகிய மூளை என்னும் அருமையான உறுப் பும் இத் தலைப் பாகத்திலேயே இருக்கின்றது. இந்த நுண்ணிய உறுப்புக்களைப் பாதுகாத்தற் பொருட்டே தலையிலுள்ள எலும் புச் சட்டம் வலிவாய்க் கோக்கப்பட்டு உறுதிபெறச் செய்யப் பட்டுள்ளது. இத் தலைச்சட்டம் உடலுடன் கழுத்து என்னும் பாகத்தால் இணைக்கப்பட் டிருக்கின்றது.

உடலில் நான்கு உட்பிரிவுகள் காணப்படுகின்றன. அவை சங்கிலித் தொடர்போன்று நீண்ட முதுகுத் தண்டு, முன் பக் கத்திலே தோன்றும் மார்பு எலும்புகள், பக்கங்களிலுள்ள விலா எலும்புகள், கூபகம் அல்லது இடைக்குழி என்று சொல் லப்படும் இடுப்பெலும்புகள் என்பனவாகும். முதுகுத் தண்டு பெண்பாலர் தலையில் அணிந்து கொள்ளும் "ஜடை சிங்கா ரம்" அல்லது "ஜடைநாகம்" போன்றது. இதனை முள்ளந் தண்டு என்றும் கூறுவர். அதன் அமைப்பின் உதவியினாலே தான் எல்லாப் பக்கங்களிலும் வளைந்து திரும்ப இயலுகின்றது. இதன் மேல் உள்ள முதல் எலும்பிலே தான் கழுத்து செரு கப்பட் டிருக்கின்றது. மார்பின் முன் பக்கமாய்த் தட்டையாய் மேலே பருத்துக் கீழே சுருங்கிக் காணப்படும் எலும்புதான் மார்பெலும்பு என்று சொல்லப்படுவது. அது முதுகுத் தண்டு டன் விலா எலும்புகளால் சேர்க்கப்பட்டுள்ளது. விலா எலும்

புகள் பக்கத்திற்குப் பன்னிரண்டாக இருக்கின்றன. இப்படியாக மார்பெலும்பு, விலா எலும்புகள், முதுகுத் தண்டு என்பன மார்புக் கூட்டைக் காக்கின்றன. இக் கூடு சிறிது நேரம் விரிந்தும், சிறிது நேரம் சுருங்கியும் காற்றை உட்கொள்வதற்கும், வெளிவிடுவதற்கும் துணையாயிருக்கின்றது. இந்தக் கூட்டிற்குள்ளேதான் இருதயம், நுரையீரல், பெரிய இரத்தக் குழாய்கள் முதலியன இருக்கின்றன.

மார்புக் கூடு அல்லது நெஞ்சறை என்பதன் கீழே ஒரு பெரிய அறை உளது. அஃது உதரம் அல்லது வயிறு என்று சொல்லப்படுவது. அவ்வுதரத்திலே இரைப்பை, கல்லீரல், பெருங்குடல், சிறு குடல், சிறுநீர்ப்பை முதலியன அடங்கி இருக்கின்றன. இந்த ஆச்சரியமான உறுப்புக்கள் அனைத்தையும் உதரத்தின் அடியிலே தோன்றும் இடுப்பெலும்புகள் தாங்கிப் பாதுகாக்கின்றன. இவற்றுடனே தான் கால் எலும்புகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

கைகளும் கால்களும் ஏறக்குறைய ஒரே விதமான அமைப்பை உடையன. கைகளில் புஜம் அல்லது தோள், முழங்கை, முன்கை, கணுக்கை அல்லது மணிக்கட்டு, அங்கை அல்லது உள்ளங்கை, புறங்கை, விரல்கள் எனப் பல பாகங்கள் காணப்படுகின்றன. இப்பாகங்களிலுள்ள எலும்புகள் கைக்கு முப்பத்திரண்டாக இருக்கின்றன. இவை இணைக்கப்பட்டிருக்கும் திறமையினாலேயே கைகளை இஷ்டப்படி நீட்டவும் மடக்கவும் வீசவும் சுழற்றவும் சாத்தியமாகின்றது. இம்மாதிரியாகவே கால்களிலும் தொடை, முழங்கால், முன்கால், கணுக்கால், உள்ளங்கால், விரல்கள் எனப் பல பாகங்கள் இருக்கின்றன. இக்கால்களின் பல பாகங்களிலும் அவ்வவற்றின் தொழிலுக்குத் தகுந்தபடி எலும்புகள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

அவற்றுள் முக்கியமான எலும்புகள் பெரியனவாகவும், குழல் போன்றும் அமைந்திருக்கின்றன. வெளிப்புறத்திலே வன்மை வாய்ந்தும், உட்புறத்திலே போகப்போக மென்மையவாகியும், தொடுங்கால் மெத்தென்றும் இருக்கும் ஒருவகைப் பச்சைப் பதார்த்தங்களும் காணப்படுகின்றன. உட்புறத்தில் நடுவே இருப்பது மச்சை எனப்படும். எலும்புகள் ஒடிந்தபோதிலும் அவை மறுபடியும் ஒன்று சேர ஆதாரமாயிருப்பது இந்த மச்சைதான். சிறு வயதினரின் எலும்புகள் குருத்தாய் வளை யுந் தன்மையவாய் இருக்கின்றன. ஆதலின் அவை எளிதில் ஒடிவதில்லை; ஒடிந்தாலும் விரைவில் ஒன்றுசேர்ந்து விடும். ஆனால் வயது முதிர முதிர அவை இறுகி எளிதில் வளையாத படி விறைப்பாயிருக்கும். ஆதலின் அவை நறுக்கென ஒடியக் கூடியன. அப்படி ஒடிந்தால் அவை இலகுவில் ஒன்று சேர்வ தில்லை.

இவ்வாறு பல எலும்புகளால் பலவிதமாக இணைக்கப் பட்டுப் பல உறுப்புக்களைத் தாங்கிக் காத்து நிற்கும் உடற் சட்டமானது ஓர் அபூர்வமான கட்டடமாகும். இத்துணைச் சிறந்த உடல் அயலார்க்கு உதவுதலாகிய அறத்தினைப்புரிதற் கும், ஆண்டவனைக் கண்டு இன்புறுதற்குமே அளிக்கப்பட்ட தாகும். இத்தகைய உடலின் சிறப்பையும், அஃது அளிக் கப்பட்டதன் நோக்கத்தையும் உணர்ந்து அன்பின்வழி நடந்து ஆண்டவனுடைய திருவடிகளை வாழ்த்தி வணங்கி வழிபடுவதே மாந்தரது கடமையாகும்.

---

## 10. சுகவாழ்க்கை.

சுக வாழ்க்கை — சுகமான வாழ்வு. இது தூய வாழ்க்கை, இன்பவாழ்க்கை என விரித்துக்கூறப்படும். தூய்மை உடல்

தூய்மை, உளத்தூய்மை என இருவகைப்படும். உடல்தூய்மை நீராலும், உளத்தூய்மை உண்மையாலும் உண்டாவதாம். இது பொதுவிதி.

இனிச் சுகவாழ்க்கைக்கு மேட்டுப்பாங்கான நிலத்திலும், காற்ருேட்டமுள்ள இடத்திலும் வாசம் பண்ணுதல்; நல்ல நீரைப்பருகுதல் முதலிய வேறுபல சுகாதார விதிகளும் உண்டு. அவற்றுள் உழைப்பு, உண்டி, உறக்கம் என்ற மூன்றுமே பெரிதும் இன்றியமையாதன.

உழைப்பு—உழைத்தல்—வருந்தி முயலுதல். உழைப்பில்லாத உடல் வேலைஇன்றி வறிதே விடப்பட்டிருக்கும் இயந்திரம்போலப் பழுதாக வேண்டியதே. 'பழக்கத்தில் இல்லாத பண்டம் பாழ்' என்பது பழமொழி. உழவு, கைத்தொழில் முதலியவற்றைச் செய்பவர் உடல்வன்மை மிக்கவராக இருக்கின்றனர்; நோயின்றி இன்புறுகின்றனர்; நீடிய ஆயுளைப் பெற்று வாழ்கின்றனர். அங்ஙனமின்றி இருப்பவர் யாண்டும் நோய்வாய்ப்பட்டு வருந்துவர்; எப்பொழுதும் வைத்தியரை நாடி அலைவர்; மருந்தும் கையுமாகத் திரிவர். இங்ஙனம் இருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்ருேம் அல்லவா? நன்ருய் உழைக்காதவர்க்கு உண்ட உணவு ஜீரணமாகாது. அன்ஞர் உயிர் தாங்கிக் கிடக்கும் சோற்று மூட்டைக்குச் சமமாவர். அவர்க்குச் சுகமே இல்லை. ஆதலின், சுகவாழ்க்கையை விரும்புவோர் நன்ருக உழைத்தல் வேண்டும்.

உழைத்து உயிர்வாழ வேண்டாத செல்வர்கள் என்ன செய்வது? அவர்கள் செய்யத்தக்கனவும்உண்டு. அன்ஞர் காலை மாலைகளில் சில மைல்களேனும் விரைவாக நடந்துவரல்வேண்டும். சில மைல்கள் விரைந்து ஓடியும் பழகலாம் இவற்ருல் நல்ல காற்றை உட்கொள்ள இயலும். அன்ஞர், கண்களுக்கு இனி

மையையும், குளிர்ச்சியையும் அளிக்கும் தோட்டங்களைப் பயிர் செய்யலாம். நாள்தோறும் படுக்கையைவிட்டு எழுந்தவுடன் கசரத்துச் செய்யலாம். சில்லறைக் காரியங்களை முடித்துக் கொண்டு குளிர்ந்த சுத்தமான நீரில் மூழ்கிவிட்டுப் பிராணு யாமம் பண்ணலாம். சுக வாழ்க்கைக்கு மேலானவழி பிரா ணுயாமமே.

இங்ஙனம் உழைப்பவர் நல்ல காற்றை வேண்டிய அளவு உட்கொள்பவர் ஆவர். காற்றுத்தான் உதிரத்தைச் சுத்தஞ் செய்வது. உதிரம் சுத்தமாகவே இருக்குமாஞல் நோய் என் பதே அணுகமாட்டாது. நோயற்ற வாழ்க்கையே சுக வாழ்க்கை. நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்.

சுகவாழ்க்கையை வேண்டி உழைப்பவர் பின்னும் செய்ய வேண்டியதும் உண்டு. அதுதான் உணவு விஷயத்தில் பெரி தும் கவனமாயிருத்தல். 'சுவை மிகுந்ததா யிருக்கின்றது' என்றே 'இலகுவில் கிடைக்கின்றது' என்றே தலையணைக் குப் பஞ்சைத் திணிப்பதுபோல் எப்பொழுதும் உண்ணும் வேலையாகவே இருத்தல் கூடாது. அஃது அஜீரணத்தை உண்டுபண்ணி நோயினைப் பெருக்கும். அன்றியும், அது காலன்கையில் தன்னைக் கட்டிக் கொடுப்பதும் ஆகும். 'மீதூண் விரும்பேல்' என்பது ஒளவையார் வாக்கு. சிறிது அஜீரண மானுலும் 'லங்கணம் பரமௌஷதம்' என்றபடி பட்டினி கிடத் தலே நல்ல மருந்தாகும். நமது பெரியோரும் பல பட்டினி விரதங்களை உண்டுபண்ணி இருக்கின்றனர். "நாம் உலகமே கிடைப்பதானுலும் பசித்தாலன்றி உண்ண மாட்டோம்; இந் நிலையில் நமனுர்க்கு எம்மிடத்திலே வேலை யாது இருக்கின் றது ?" என்பர் தேரையர். ஒரு போது உண்பவர் 'யோகி' எனப்படுவார். இருபோது உண்பவர் 'போகி' எனப்படுவார்.

மூன்று போது உண்பவர் 'ரோகி' எனப்படுவார். நான்கு போது உண்பவர் 'உடல் விட்டுப்போகி' எனப்படுவார். ஆகவே சுகவாழ்க்கையை விரும்புவோர் 'எந்நாளும் பசித்தபொழுது உண்பது; வேண்டிய அளவே உண்பது; கால இயல்பு, தேக இயல்புகளோடு மாறுகொள்ளாத உணவுகளை உண்பது; சுவை, வீரியங்களால் கெடாத சுத்தமான உணவுகளை உண்பது' என்ற இவற்றில் சிறிதும் தவறுதல் கூடாது. இயன்ற அளவு நாவை அடக்கியே பழகுதல் வேண்டும்.

இக் கூறியாங்கு உழைத்து, உண்டு வாழ்பவர் தமது சுகத்தைப் பெருக்கிக்கொள்ள நன்ருய் உறங்கவும் வேண்டும். உறக்கமே கஷ்டப்பட்டு உழைத்த உறுப்புக்களை மீட்டும் வன்மையுறச் செய்வது. பகலில் ஓடி ஆடி உழைத்து வருந்திய உறுப்புக்கள் இரவில் உறக்கத்தில் அமைதி பெற்றுக்கிடக்கின்றன; தாங்கள் இழந்த பலத்தைத் திரும்பப் பெறுகின்றன. நன்ருய்த் தூங்காவிட்டால் உறுப்புக்கள் மறுபடியும் தாங்கள் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யமாட்டா. நன்ருய்த் தூங்க விரும்பியவர் மனத்தே சிறிதும் கவலையை வைத்துக்கொள்ளலாகாது. "கவலை கொண்டார்க்குக் கண்ணுறக்கம் வாராது" என்பது பழமொழி. படுக்கையிலே கிடந்து புரண்டு கொண்டும், கனுக் கண்டுகொண்டும் இருப்பது நல்ல உறக்கமாகாது. பகலில் உழைத்து இரவில் உறங்காதவர் மறுநாள் சோம்பேறியாக இருப்பர். சோம்புத்தனம் மூதேவிக்கு இருப்பிடமாகும். இதனை விரும்புவது அறிவுடையோர்க்கு அழகாகுமா? ஆகாதல்லவா? ஆதலின், ஒவ்வொருவரும் "ஒன்றையும் அறியாமல் நன்ருகத் தூங்கினேன்" என்று விழித்தெழுந்தபின் சொல்லுமாறு அவ்வளவு நன்ருகத் தூங்குதல் வேண்டும். எக்காரணங் கொண்டும் பகலிலே தூங்குதல் கூடாது. "நாம் பக

லிலே உறங்கமாட்டோம்; நம்மிடத்திலே நமனுர்க்கு என்ன வேலே இருக்கின்றது?" என்ருர் தேரையர்.

ஆகவே, சுகவாழ்க்கையை விரும்புவோர் நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்தல் வேண்டும். நன்ருய் ஜீரணமான பிறகு வேண்டிய அளவே உணவினை உட்கொள்ளுதல் வேண்டும். உழைத்த உறுப்புக்கள் களைப்பு நீங்கி வன்மையைப் பெறுமாறு உறங்குதல் வேண்டும். இவையே சுகவாழ்க்கைக்கு உற்றன. இவை கைவரின் சுகவாழ்க்கைக்கு உரிய அனைத்தும் கைவரும்; வாழ்க்கையும் இனிதாகும். இங்ஙனம் இனிய வாழ்க்கையில்இருப்பவரே உடலே இனிது போற்றியவர் ஆவர். "உடலே அறஞ்செய்யத் துணையாவது" என்பர் பெரியார். அம்முறையில் இச்சுகவாழ்க்கை மறுமை இன்பத்திற்குத் துணை செய்வதும் ஆகும்.

---

## 11. காலத்தின் அருமை.

காலம் மாத்திரைமுதல் பலவகையாகப் பெருக்கிக் கணக்குப் பண்ணப்படும். அக்காலம் மிக அருமையானது. 'நாளேக்கு நாளேக்கு' என்று கூறப்படுவன 'நேற்று நேற்று' என்று மாறிச் சென்ற நாட்களாகிவிடும். சென்ற ஒரு மாத்திரைப்பொழுதும் திரும்பிவரமாட்டாது. அதனுலேயே அறிவுடையோர்காலத்தை ஒரு சிறிதும் வீண்போக்காது பயனுடைய காரியங்களிலேயே செலவழித்து வருகின்றனர். அவ்வாறு மாத்திரைப் பொழுதையும் வீண்பொழுது பண்ணுது வாழ்பவரே காலத்தின் அருமையை உணர்ந்தவர் ஆவர்.

நாளேக்குச் செய்தால் நல்லபயனைக்கொடுக்கும்காரியத்தை இன்றைக்குச் செய்வதும் அறிவிலார் செயலேயாம். இன்றைக்

குச்செய்தால் நல்லபயனைக் கொடுக்கக்கூடிய காரியத்தை 'நாளைக்குச் செய்வேன்' என்று தள்ளிவைப்பதும் அறிவற்ற செயலேயாம். எந்தக்காலத்தில் எந்தக் காரியத்தைச் செய்வது நல்ல பயனைக் கொடுக்குமோ, அந்தக் காலத்திலே அந்தக் காரியத்தைச் செய்வதுதான் அறிவுடைமையாகும்.

இந்த நிமிஷத்திலேயே தவறாது செய்துமுடிக்கவேண்டிய ஒரு காரியத்தை 'இதனை இப்பொழுது செய்யவேண்டுவதில்லை; பின்னர்ச்செய்துகொள்ளலாம்' என்றுசெய்யும் வீணான ஆலோசனையே காலதாமதம் எனப்படும். இந்தக் காலதாமதத்தைச் செய்தல் மக்களால் விலக்கப்படவேண்டிய குற்றங்களில்ஒன்று. இதனைக் கைக்கொண்டவர் எந்தச் சிறிய காரியத்தையும் செய்து முடிக்கும் சக்தியற்றவர் ஆவர். 'நாளைக்கு நாளைக்கு' என்று காலங்கடத்துபவர்க்கு எடுத்த காரியம் என்றைக்கும் நிறைவேறாது. இங்ஙனம் வீணான ஆலோசனையைச் செய்துகொண்டே காலதாமதம் பண்ணுபவர் காலத்தின் அருமையை உணராதவர் ஆவர். காலம் உயிருக்குச் சமமானது. ஒவ்வொரு நிமிஷமும் வாழ்நாளின் ஒரு சிறு பாகமே. "இன்றைக்குச் செய்யவேண்டிய காரியத்தை நாளை வரையில் நிறுத்திவைத்தல் கூடாதது" என்பது ஓர் ஆங்கிலப் பழமொழியின் கருத்து. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்பது பழமொழி.

ஒரு மாத்திரைப்பொழுது வீண்போனாலும் அது காலக்கொலையே ஆகும். காலக்கொலைக்கும் உயிர்க்கொலைக்கும் பேதமில்லை. ஒருபொழுது ஒன்றைச் செய்யவேண்டியதாக இருக்க வெறுப்புக் காரணமாகவோ வேறு காரணங்களாலோ அதனை அப்பொழுது செய்யாது பிறிதொன்றைச் செய்வதும் காலதாமதத்தைச் சேர்ந்ததே. ஏனெனில், செய்யவேண்டிய காரியம் செய்யப்படாது பாக்கியாகவே இருக்கும். அந்தக் காரி

யத்தைச் செய்தாகவேண்டிய காலமும் சென்றுவிட்டது. இது காலத்தை வீணாக்கியதல்லவா ?

காரியங்களைச் செய்வதில் 'விருப்பமுள்ளதைச் செய்வது; விருப்பமில்லாததைச் செய்யாதுவிடுவது' என்பதும் கூடாதது. 'இப்பொழுது செய்தாகவேண்டியது எது?' என்று ஆராய்ந்து பார்த்தே செய்தல்வேண்டும். ஒரு காரியத்தைச்செய்ய ஒரு சமயம் ஏற்றதாக இருக்கலாம். அந்தச் சமயத்தை நழுவவிட்டால் திரும்பவும் அச்சமயம்வராது.போன நிமிஷம் போனதே; வீணானதே.

ஒவ்வொரு நிமிஷத்தையும் நல்ல காரியங்களைச் செய்வதிலேயே செலவு செய்தல் வேண்டும். அவற்றை நாளைக்கென ஒதுக்கிவைத்தால் அந்த 'நாளை' என்பது நம்முடைய நாளாகுமா ? நமனுடைய நாளாகுமா ? இரண்டும் இலகுவில் அறிந்து கொள்ளக்கூடியன அல்ல. நமனுடைய நாளாக இருந்தால் அந்த நிமிஷத்தில் செய்வதாக எண்ணிய காரியத்தைச் செய்து நிறைவேற்ற முடியாது. நம்முடைய நாளாக இருந்தால் அப்பொழுது செய்யவேண்டிய வேறுகாரியம் இருக்கலாம் அல்லவா? 'யமன் சூரியனாகிற படியைக்கொண்டு ஜீவகோடிகளுடைய உயிர்களாகிற அரசியை நித்தம் அளந்து அளந்து உண்டு வருகின்றான். அந்த முறையில் நமது உயிர் என்றைக்கு உண்ணப் படுமோ?' என்று அறிவுடையோர் பயந்து நடப்பர். 'இச்சமயம் தப்பினால் எச்சமயம் வாய்க்குமோ' என்பது பெரியார் வாக்கு.

ஓர் ஊரில் இரண்டு உழவர் இருந்தனர். இருவருக்கும் ஒரே இடத்தில் இரண்டு பெரிய புன்செய்த் தாக்குகள் இருந்தன. இருவரும் நன்றாய்ப் பாடுபட்டு உழைக்கும் இயல்பினர். அங்ஙனமே அந்த இருவரும் அக் கொல்லைகளை நன்றாய் உழுதனர்; பண்படுத்தினர்; 'ஆனி அரணைவால் கரும்பு' என்றபடி

ஆனி மாதத்திலேயே கரும்புப் பயிரை உண்டுபண்ணினர். இரு வருடைய கொல்லைகளிலும் கரும்புப்பயிர் நன்ருய் வளர்ந்தது; முற்றியது; வெட்டவேண்டிய பருவமும் வந்தது. இருவர்க்கும் விளைவு சமமாகவே இருந்தது. இருவரும் கருப்பங் கழிகளை வெட்டினர். தத்தம் கொல்லைகளிலேயே கருப்பங் கழிகளைச் சேர்த்து வைத்தனர்.

இங்ஙனம் சின்னுட்கள்செல்ல அவர்களுள் ஒருவர், தமது கருப்பங்கழிகளை ஆலையிலிட்டு ஆட்டினர்; சக்கையை அந்தக் கொல்லையிலேயே ஒரு போராகப் போட்டனர்; வெல்லக்கட்டியை வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தனர் ; நல்ல விலைக்கு அந்த வெல்லக்கட்டிகளை விற்றனர்; பெரும்பொருளைத் தேடிக் கொண்டனர். மற்ருெருவர் 'பாக்கிவேலைகளைச் செய்து முடிப் போம் ; பின்னர்க் கரும்பை ஆட்டுவோம்' என்று எண்ணிக் காலம் தாழ்த்தனர்.

இந்நிலையில் எதிர்பாராது அந்தக் கொல்லைகளிலே தீப்பற் றிக்கொண்டது. கரும்பை ஆட்டிப்போட்டிருந்த சக்கைப் போரும், ஆட்டாது வைத்திருந்த கருப்பங்கழிகளும் எரிந்தன. சக்கையாகப் போட்டிருந்தவர் கரும்பின் பயனைப் பெற்றுவிட் டார். ஆதலின் அவர் மகிழ்ச்சியோடிருந்தார். 'பின்னே ஆட்டு வோம்' என்று வைத்திருந்தவர் தமது ஒரு வருஷத்திய வேலை யும் வீணுனமையைக்கண்டு வருந்தினுர். 'முன்னமேயே ஆட்டி யிருந்தால் இந்த நஷ்டம் வந்திருக்கமாட்டாதல்லவா ?' என் றும் எண்ணினுர்.

ஆதலின், ஒவ்வொரு மாத்திரையையும் வீணுக்காது எப் பொழுது எப்பொழுது எந்தஎந்தக் காரியத்தைச் செய்யவேண் டுமோ, அப்பொழுது அப்பொழுது அந்த அந்தக் காரியத்தைச் செய்து புகழினையும் இன்பத்தினையும் எய்துவதுடன் மக்கள்

உடம்பு எடுத்த பயனையும் பெறுவது மாந்தர்களின் தவறாக் கடமையாகும். காலமே உயிர். உயிரே காலம்.

---

## 12. முயற்சி.

முயற்சி என்பது ஒருவன் தான் எடுத்துக்கொண்ட காரியம் இனிது நிறைவேறும்பொருட்டு அதன்கண் இடைவிடாது ஊக்கத்துடன் உழைக்கும் உழைப்பாகும். இஃது உயிர்க் குணங்களுள் ஒன்றாவது. உலகத்திலே எவனும் எவ்வித வேலையும் இன்றி வாளா இருக்கமாட்டான். இருக்கவும் முடியாது. ஏதேனும் ஒரு தொழிலைச் செய்தே தீரவேண்டும். சும்மா இருக்கின்ற திறம் அரிது.

எந்தத் தாயும் தான் பெற்ற பிள்ளையைக் கொலைசெய்ய மனத்தோடு உடன்படமாட்டாள். அஃதேபோல எவனும் தான் தொடங்கிய தொழில் சீர்கேடுறுவதற்கு உடன்படமாட்டான். ஒரு தொழில் சீர்கெடாது நன்னிலையிலே இனிது நடைபெற வேண்டுமாயின், அதற்கு அத்தொழிலைச் செய்பவனிடம் இடைவிடாது முயலும் முயற்சி இருக்கவேண்டியது இன்றியமையாதது.

முயற்சியின்மை பழிப்புக்கிடமாவது. முயற்சியுடைமை புகழுக்கிடமாவது. இவற்றுள் முயற்சியின்மையை “இனிவர இருக்கும் கெடுதலை முன்னர்க்காட்டும் அடையாளம்; வறுமைப்பிணியை வலியப் புகுவிப்பது” என்றும், முயற்சி இல்லாதவனை “மரத்திற்குச் சமமானவன்; குடியைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பு; தான் கெடுவதற்கு முன்னாகத் தனது குலத்தின் பெருமையைக் கெடுப்பவன்; எந்நாளும் புகழைப் பெறமாட்டாதவன்; பக்கத்தாரது பரிகாசமொழிகளுக்கும், பழிமொழிகளுக்கும் உள்ளாகுபவன்; பகைவரிடத்திலே அடிமைப்

படுபவன் ; பிறருடைய தேட்டத்திலே தனது வயிற்றை வளர்த்துக்கொள்ள வேண்டிநிற்பவன் ; சோம்பலே உருக்கொண்டது போல உழன்று திரிபவன் ; மூதேவிக்கு இருப்பிடமாயவன் " என்றும் அறிவுடைய முயற்சியாளர் இழித்துக் கூறுகின்றமையால் முயற்சியின்மையின் இழிதன்மையை உணரலாம்.

இந்த இழிதன்மைகளைப்பெற எவரும் விரும்பமாட்டார். பெருமையைப் பெறவே முயலுவர். பெருமை முயற்சியாளரை வலிய வந்தடையும். முயற்சியாளர் எந்நாளும் இகழ்ச்சியை அடையமாட்டார் ; அவர் எல்லாவற்றையும் பெற்றவராவர் ; எதனையும் தமது கருத்தின்படி நிறைவேற்றும் ஆற்றலினைப் பெற்றவராவர் ; தளர்வு வந்த காலத்திலும் தமது நிலைமையினின்றும் அசையமாட்டார் ; துன்பத்திற்குத் துன்பத்தைச் செய்பவராவர் ; துன்பத்தைக் கண்டு துன்பப்படமாட்டார் ; தாம் பிறந்த குலத்தைப் பிறங்கச் செய்வர் ; தாம் பிறந்த குடியை உயர்குடியாக்குவர் ; மடியை மடிந்தழியச்செய்வர் ; ஆண்மைக்கு நிலைக்களமாவர் ; தளர்ந்த சுற்றத்தாரைத் தாங்குவர் ; உலகத்தை ஆளத்தக்க வன்மையையும் பெறுவர் ; இலக்குமி வாசம் பண்ணுதற்கும் உரியவர்.

இனி, ஒரு சிலர் ' தண்ணீரின் அளவுக்கு மலர் நீளுவது போல முயற்சியின் அளவுக்கு உயர்வு உண்டாகும் ' என்பதை அறியமாட்டாராகி " விதியல்லவோ ஒருவனுடைய உயர்வு தாழ்வுகளுக்குக் காரணமாவது ? முயலுவதால் எங்ஙனம் உயர்வு உண்டாகும்? ' அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி—எடுத்த கருமங்கள் ஆகா ' என்பது தவறுபடுமா ? எத்தகைய சூழ்ச்சிகளைச் செய்து முற்பட்டாலும் விதி அந்த எல்லாச் சூழ்ச்சிகளையும்வென்று தான் முன்னே நிற்கக்கூடியதாயிற்றே" எனவினவுவர்.

விதி உயர்வானது என்பது உண்மையே. ஆனாலும், அவர் முயற்சியாளரது மொழியிலிருந்து அறிந்து கொள்ளவேண்டியனவும் சில உண்டு. கஷ்டப்படும் ஒருவனைச் சுட்டி "ஐயா, ஏன் இவன் கஷ்டப்படுகிறான்?" என்று ஒரு சாமானியரைக் கேட்போமாயின் அவர் என்னவிடை கூறுவர்? "ஐயா, இவன் தான் முற்பிறப்பிற் செய்த தீவினையின் பயனை அநுபவிக்கின்றான்?" எனவே கூறுவர். நல்வினை தீவினை என்பன நம்மாற் செய்யப்படுவன. விதி அந்த இரண்டு வினைகளையும் ஆராய்ந்து பார்க்கும் மத்தியஸ்தர் போன்றது. நாம்செய்த நல்வினை தீவினைகளின்பயனை ஆராய்ந்து நடுநிலை தவறாமல் உரியகாலத்தில் அவற்றின்பயனை நமக்கு அளிக்கவேண்டியதே அதனது வேலை. விதியால் தானே ஒன்றையும் செய்துவிட முடியாது. அன்றியும், நாம் ஒருவனைச்சுட்டி "இவன் சோம்பேறியாகத் திரிகின்றான்; அதனால் கஷ்டப்படுகின்றான்" என்று கூறுவோமாயின் அவனை உலகினர் பழிப்பர். அங்ஙனமின்றி ஒருவன் வேண்டிய அளவு முயன்றும் பயன்பெறாவிடில் அவனை உலகினர் பழிக்கமாட்டார். தான் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாது கை சோரவிட்டவனை உலகத்தாரும் கைவிடுவார்.

இங்ஙனம் அறிந்து முயலுவதே மாந்தரது கடமையாகும். விதியை நினைந்து சோம்பேறியாக இருத்தல் கூடாது. அங்ஙனம் முயலுவோர் தமது முயற்சிக்கான பயனை உடனே எதிர்பார்த்தல் என்பதும் கூடாததே. முயலவேண்டியதே மக்களது கடமை. பயனை எதிர்பார்த்தல் அவரது வேலையன்று. வேலைக்குத்தக்க கூலியைக்கொடுக்க விதியிருக்கின்றது. நல்ல முயற்சியைச் செய்து 'காத்தன வெல்லாம் கடைமுறைபோய்க் கை கொடுத்து—வேத்தவையின் மிக்குச் செயும்'. ஆதலின், ஒவ்வொருவரும் தாம் தாம் செய்யவேண்டியவற்றை இனிது முற்

கூட்டி அறிந்துசெய்ய முயலல்வேண்டும். இடையில் எதற்கும் அஞ்சி முயற்சியைக் கைவிடலாகாது. இங்ஙனம் முயலுபவரே பயன் பெறற்கு உரியவர். விடாது முயலுகின்றவன் விதியையும் வெல்வான். விதியை மதியால்வெல்லலாம். குறையாதமுயற்சியை உடையவர் ஊழையும் தோல்வியுறச் செய்வர். முயற்சி மெய்வருந்தக் கூலிதரும். முயன்றால் முடியாததொன்றில்லை. முயற்சி திருவினையாக்கும்.

---

## 13. தேனீ.

பூச்சி வகைகளிலே தேனீக்களும் சேர்ந்தனவாகும். தேனைச் சேர்க்கும் ஈக்கள் தேனீக்கள் எனப்படும். ஒற்றுமைத் தன்மை, தன்னலம் பாராட்டாமை, சுறுசுறுப்புடைமை, முற்கூட்டி ஆராய்ந்து செய்தல், சிக்கனம் பேணல், அஞ்சாமை ஆதிய குணங்கள் தேனீக்களிடம் இயற்கையிலேயே அமைந்துள்ளன.

தேனீக்கள் ஈக்களின் வகுப்பைச்சேர்ந்தனவே. ஆயினும், நம்முடைய வீடுகளிலே இருக்கும் ஈக்களுக்கும் தேனீக்களுக்கும் வாழ்க்கை முறையிலே பலவித வேறுபாடுகள் காணப்படும். வீட்டு ஈக்கள் அழுகிய வஸ்துக்கள் முதலியவற்றிலே தங்கும்; அவற்றிலிருந்து உணவை உட்கொள்ளும்; குப்பைக் குழி முதலிய இடங்களிலே முட்டைகளை விட்டு வைக்கும்; அந்த முட்டைகளிலிருந்து ஈப்புழுக்கள் வெளியே வரும். அவ்வாறு வெளிவந்த புழுக்கள் தங்களைச் சுற்றிலும் உள்ள ஆகாரங்களை உட்கொண்டு ஈக்களாக மாறும். தேனீக்கள் பல அறைகளையுடைய தேன் கூடுகளைத் தாங்கள் தங்குவதற்கெனக் கட்டிக் கொள்ளும்; உணவின் பொருட்டு உருசியுள்ள தேனைப் பல திறப்பட்ட புஷ்பங்களிலிருந்தும் கொண்டுவந்து

சேர்க்கும் ; தகுந்த முன் யோசனையுடன் பிற்கால உபயோகத்திற்கென அவற்றைச் சேமித்து வைக்கும்; கூடுகளிலேயேமுட்டைகளை விட்டு வைக்கும்; அவற்றிலிருந்து வெளிவரும்தேனீப் புழுக்களைப் பெரிதும் கவனமாய்க் காத்து வரும்; தேனீயாக மாறிப் பறக்கும் சக்தி உண்டாகும் வரையில் அவற்றை உணவு கொடுத்து வளர்த்து வரும்.

தேனீக்களின் உடல் தலை, மார்பு, வயிறு என்ற மூன்று பாகங்களாகப் பரிந்திருக்கும். அவற்றுள் தலைப் பாகத்திலே இரண்டு ஸ்பரிசக்கொம்புகள், இரண்டு கலப்புக் கண்கள், மூன்று இயற்கைச் கண்கள், வாய் முதலிய உறுப்புக்கள் என்பன அமைந்துள்ளன. மார்புப் பிரதேசத்திலே மூன்று ஜோடி கால்களும், இரண்டு ஜோடி இரக்கைகளும் இருக்கின்றன. வயிற்றின் பின்புறத்திலே ஒரு விஷப்பை இருக்கின்றது ? அதன் தொடர்பாக ஒரு விஷக்கொடுக்கும் இருக்கின்றது.

கண்கள் புஷ்பங்கள் இருக்கும் இடத்தைப் பார்க்கவும், ஸ்பரிசக்கொம்புகள் புஷ்பங்களிலே தேன் இருக்கும்இடத்தை உணர்ந்து கொள்ளவும் உதவுகின்றன. வாயிலே தொங்கும் குழல்போன்ற உறுப்பு, தேனை நக்கி உறிஞ்சுவதற்கு ஏற்றபடி அமைந்திருக்கின்றது. மகரந்தப்பொடிகளை உண்பதற் கேற்றபடி இரண்டு தாடைகளும் அதனை ஒட்டி அமைந்திருக்கின்றன. இரக்கைகளின் துணையினாலே தான் தேனீக்கள் சுறுசுறுப்பாகப் பறக்கின்றன. விஷப்பையும், விஷக்கொடுக்கும் தேனீக்களின் தற்காப்புக்குத் துணை செய்கின்றன.

தேனீக்கள் தங்களுடைய கூடுகளை மரங்களின் பொந்துகள், பாறைகள், கட்டடங்கள் ஆகிய இடங்களில் அமைத்

துக்கொள்ளும். அக் கூடுகள் ஒருவகை மெழுகினல் செய்யப் படுகின்றன. அந்த மெழுகானது தேனீக்களின் அடிவயிற்றிலே உண்டாகின்றது. மெழுகு உண்டாகுந்தோறும் தேனீ அதனை வாயினல் நக்கி எச்சிலுடன் சேர்த்துக் கூடாகக் கட்டுகின்றது. மெழுகுக்கு உரிய மூலப்பொருள் தேனீக்கள் பருகும் தேனேயாகும். ஒரு பவுண்ட் மெழுகு உண்டாவதற்குச் சற்றேறக்குறைய பதினைந்து அல்லது பதினறு பவுண்ட் தேன் வேண்டியிருக்கும் என்பர் ஆராய்ச்சியாளர். தேனைச் சேகரம் செய்வதில் உண்டாகும் சிரமத்தையும், மெழுகின் இன்றியமையாமையையும் நோக்கி அவை மெழுகைப் பெரிதும் சிக்கனமாகவே செலவு செய்யும். தேனீக்கள் தங்களுடைய கூடுகளை ஆறு கோணங்களை உடையனவாகவும், பல அறைகளை உடையனவாகவும் அமைத்துக் கொள்ளும். தேன் கூடுகளும், அவற்றிலுள்ள அறைகளும் கணித சாஸ்திரப் பரிசோதனைக்குச் சரியாகவே அமைந்திருக்கின்றன என்றும் சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

புஷ்பங்கள் நிறைந்த வஸந்த காலத்தில் தேனீக்கள் பல புஷ்பங்களிலிருந்து தேனை உறிஞ்சிச் சேர்க்க முயலும். அக்காலங்களில் அவை மிகச் சுறு சுறுப்பாய் இருக்கும். சில வெளியே சென்று தேனைக் கொண்டுவரும். சில கூடுகளைக் காவல்காத்து நிற்கும். இக்காலங்களில் அவை பத்தாயிரக் கணக்கில் ஒன்று சேர்ந்து தொழிலை நடத்துவது பெரிதும் வியக்கத் தக்கதா யிருக்கும். அக்கால், எவரேனும் அவற்றிற்கு இடையூறு செய்தால் அவை அதனைச் சிறிதும் பொறுப்பதில்லை. இடையூறு செய்தவரைப் பலவகையிலும் அச்சுறுத்தி அவ்விடத்தினின்றும் அப்புறப்படுத்தியே மறுவேலையினைச் செய்யத் தொடங்கும்.

தேனீக்களால் புஷ்பங்களிலிருந்து உறிஞ்சிச் சேர்க்கப்படும் தேனானது தேன்பை என்ற ஒரு பாகத்திலே போய்ச் சேருகின்றது; அங்கே ஒருவகை மாறுபாடடைந்து கூடுகளுக்குக் கொண்டுபோகப்படுகிறது. தேனீக்கள் புஷ்பங்களி



தேன் கூடு.

லிருந்து உறிஞ்சிக் கொண்டுவரும் தேனுக்கும், கூட்டில் சேர்த்துவைக்கும் தேனுக்கும் பெரிதும் வித்தியாசம் உண்டு.

தேனைக் கூட்டிற்குக் கொண்டுவருவதுபோல மகரந்தத் தூள்களையும் தேனீக்கள் கூட்டிற்குக் கொண்டுவருகின்றன

தேனீக்களின் கால்களில் மகரந்தத் தூள்களைச் சேகரம் செய்வதற்குத் துணையாகக் கணக்கற்ற உரோமங்கள் இருக்கின்றன. கடைசியில் இருக்கும் இரண்டு கால்களிலும் சீப்புப்போன்ற நீண்ட இரண்டு உறுப்புக்கள் உரோமங்கள் அடர்ந்து இருக்கின்றன. இவ்விரண்டுகால்களிலும் மேற்பாகமாகப் பைபோன்ற ஓர் உறுப்பு இருக்கின்றது. இதனை மகரந்தக் கூடை என்று சொல்லலாம். இவற்றின் உதவியினாலேதான் தேனீக்கள் மலர்களிலிருக்கும் மகரந்தத் தூள்களைக் கூட்டிற்குக் கொண்டு போய்ச்சேர்க்கின்றன. தேனீக்கள் தேனைப்பருகும் பொருட்டுப் புஷ்பங்களுக்குள்ளே புகும்பொழுது உடல் முழுவதும் மகரந்தத்தூள்கள் ஒட்டிக் கொள்ளும்; புஷ்பங்களிலிருந்து வெளியே வந்தவுடன் முற்கூறியபடி பின்னங்கால்களில் உள்ள சீப்புக்களினால் அந்த மகரந்தத் தூள்கள் எல்லாவற்றையும் நன்றாகத் துடைத்துத்திரட்டி இந்த மகரந்தக்கூடையினுள்ளே போட்டுக்கொள்ளும்; பின்னர்க் கூடுகளுக்குச் செல்லும்.

தேனீக்களிலே ஆண், பெண், அலி என்ற மூன்று பிரிவுகள் இருக்கின்றன. அவற்றுள் அலிகளே பெரும்பான்மையன. வெளியேபோய்த் தேனைக்கொண்டு வருதல்; அறைகளைக்கட்டுதல்; கூட்டிலுள்ள தேனீக்களைப் பாதுகாத்தல்; கூட்டைப் பரிபாலனம் செய்தல்; தாமாகவே உணவைத்தேடி உண்ணும் சக்தியினைப் பெற்றிராத புழுக்களுக்குத் தேனையும், மகரந்தத் தூளையும் கலந்து ரொட்டி போலச் சமைத்து உணவாக அளித்தல்; புழுக்களிலிருந்து வெளிவந்த தேனீக்குஞ்சுகளை வேலைகளிலே பழக்குதல்; இராணிக்கு வேண்டிய ஊழியங்களைச் செய்தல்; போர்த்தொழில் புரிதல்; நிர்வாகத்திற்குத் துணைசெய்தல்;பிற இன்றியமையாத வேலைகளைச்செய்தல் ஆகிய எல்லா வேலைகளையும் அவைகளே செய்கின்றன.

ஆண் வகுப்பைச்சேர்ந்தன உருவத்திலே பெரியனவாக இருக்கும். அவற்றிற்குக் கொடுக்கில்லை ; மகரந்தத் தூள்களைச் சேகரம் பண்ணுவதற்கு இன்றியமையாத உரோமச் சீப்புக் களும் மகரந்தக் கூடைகளும் இல்லை. இவற்றால் அவை இயற்கையிலேயே சோம்பேறிகளாக இருக்கின்றன. இச்சோம்பேறித் தனத்தால் அவை அதிகமாகத் தேன் கிடைக்காத காலங்களில் பிற தேனீக்களால் வெறுத்து ஒதுக்கப்படுகின்றன. அவற்றால் அவை அக்காலங்களில் உணவின்றிப் பெரிதும் வருந்துகின்றன. முயற்சியுள்ள வேலைக்காரத் தேனீக்களால் "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பதும், சோம்பல் நிறைந்த ஆண் தேனீக்களால் "சோம்பரென்பவர் தேம்பித் திரிவர்" என்பதும் உறுதிப்படுகின்றன. பெண்ணினத்தைச் சேர்ந்தவையே கூட்டிற்குத் தாயாகவும், இராணியாகவும் இருக்கின்றன. இவற்றின் நிர்வாகம் குடியரசு முறையில் மிகவும் திறமைவாய்ந்ததாக இருக்கும். தேனீக்களின் வாழ்க்கை முறையிலிருந்து மக்கள் வகுப்பினர் கற்றுக்கொள்ள வேண்டியன இன்னும் பல.

---

## 14. நீர்.

உலகத்திலே வாழ்கின்ற உயிர்களுக்குப் பெரிதும் இன்றியமையாத பொருள்கள் பல இருக்கின்றன. அவற்றுள் முதன்மையானது காற்றிலுள்ள பிராணவாயுவாகும். நீர் அல்லது ஜலம் அடுத்தபடியாகக் கூறப்படும். நீர் பஞ்ச பூதங்களில் ஒன்று என்பது பிரசித்தமானது. அது தான் சேர்ந்த நிலத்தின் இயல்புக்குப் பொருந்த நிறம், சுவை, கனம் முதலிய குணங்களால் வேறுபடும் இயல்பினையும் உடையது.

ஒவ்வொருவரும் காலையில் எழுந்தவுடன் முகத்தினைக் கழுவிக் கொள்ளுகின்றனர் ; பல்லைத் துலக்குகின்றனர் ; உடைகளைத் துவைக்கின்றனர் ; உடம்பைச் சுத்தம் செய்து கொள்ளக் குளிக்கின்றனர் ; வீடுகளை மெழுகி அலங்கரிக்கின்றனர் ; அரிசி, காய், கனி முதலியவற்றைப் பக்குவம்பண்ணி உண்கின்றனர். இவை அனைத்திற்கும் நீர் இன்றியமையாததாகவே இருக்கின்றது. தாகத்தைச்சாந்திசெய்யும் பொருளும்அந்தநீரே யாகும். இவையன்றி வயல்களிலும், கொல்லைகளிலும் உண்டு பண்ணப்படும் பயிர்கள் நன்றாய் வளர்வதற்கும் நீர் இன்றியமையாத தாகின்றது. நதிகளிலும், பெருங்கால்வாய்களிலும் ஓடும் ஜலத்திலே மாந்தரது பிரயாணமும், சரக்குகளின் போக்குவரத்தும் மிக எளிதாக முடிகின்றன. கடலால் அடையும் நன்மைகள் அனைத்தும் அங்கே நீர் இருப்பதனாலேயே. மேலும், பல தொழிற்சாலைகளிலும், ஆலைகளிலும் நீர் மிகவும் பயன்படுகின்றது. "புறந்தூய்மை நீரான் அமையும்" "நீரின்றமையாதுலகு" என்பர் திருவள்ளுவர்.

பிராணவாயு, ஜலவாயு என்ற இரண்டு வாயுப் பொருள்கள் சேர்ந்து உண்டாகியது நீர் என்பது ரசாயன விற்பன்னர்களின் கருத்தாகும். மின்சாரம் என்ற எலக்டிரிக் சக்தியை ஒரு பாத்திரத்திலுள்ள நீரிலே செலுத்தினால், அந்த நீர் மேற்கூறிய இரண்டு வாயுக்களாய் இலகுவிலே பிரிந்துவிடும். ஒன்பது பங்கு எடையுள்ள நீரிலே பிராணவாயு எட்டுப்பங்கு எடையினையுடையதாகவும், ஜலவாயு ஒருபங்கு எடையினை யுடையதாகவும் அமைந்துள்ளன என்பது சோதனைகளால் கணக்கிடப்பட்டுள்ளது.

சாதாரணமாக நீர் திரவ ரூபமாயிருக்கிறது. அதைக்காய்ச்சினால் ஆவி உண்டாகின்றது. அந்த ஆவியினால் நிறைவேற்ற

முடியாத காரியம் ஒன்றுமே இல்லையாம். அதன் சக்தி எண்ணிறந்த வழிகளால் மாந்தருக்குப் பயன்பட்டு வருகின்றது. ரயில் வண்டித்தொடர்களை இழுத்துச் செல்வதிலும், கடலினைக் கிழித்துக்கொண்டு ஓடும் கப்பல்களைச் செலுத்துவதிலும், ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் உள்ள இயந்திரங்களைச் சுழற்றுவதிலும் நீராவி பெரிதும் உபயோகப்பட்டுவருகின்றது.

நீரைக் காய்ச்சுவதுபோலவே குளிரவைத்தலும் உண்டு. அக்கால், அது பனிக்கட்டியாக உறைந்து விடுகின்றது. இலகுவில் ஓடியும், நெகிழ்ந்தும் இருந்த நீர் உளிக்கும் உடைபடாத கட்டிப்பொருளாக மாறிவிடுகின்றது. வெப்பம் மிகுந்த நாடுகளில் உள்ள மனிதர்கள் வேனிற் காலங்களிலே தங்களது உடம்பைக் குளிர வைப்பதற்குப் பனிக்கட்டியை உபயோகப் படுத்திக் கொள்ளுகின்றார்கள். குளிர் நாடுகளிலே சிலபருவங்களில் நீரெல்லாம் பனிக்கட்டியாக உறைந்து அவர்கட்கு இடரினை விளைவிப்பதும் உண்டு. சில சமயங்களிலே தெரு முழுமையும் பனிக்கட்டிகளால் நிரம்பிக் கிடக்கும். அக்கால், அத்தெருக்களின் வழியே செல்ல வேண்டியவர்கள் உப்பைத் தெளித்து அவற்றை நெகிழ்வித்துப் பாதையை உண்டாக்கிக் கொள்வார்கள்.

நீர் எப்பொழுதும் ஆவியாகவே ஆகாசத்தில் இருக்கின்றது. நீரால் நனைந்து ஈரமான வேஷ்டி முதலியவைகள் உலரும்போது அவற்றில் உள்ள நீர் ஆவியாக மாறி ஆகாசத்திலே புகுகின்றது. நீர் நிலைகளாகிய கிணறுகள், குளங்கள், ஏரிகள், கடல்கள் முதலியவைகளினின்றும் வேனிற் காலத்தில் நீர் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து ஆவியாக மாறி ஆகாசத்திலே புகுகின்றது. இப்படிப் பலவகையாகச் சேரும் ஆவியே உயரத்தில் மேகமாகத் தோன்றுகின்றது. இம்மேகங்கள் காற்றி

ணலே தள்ளப்பட்டுப் பல இடங்களுக்கும் செல்லுகின்றன. அப்பொழுது அவை குளிர்ந்து மழையாகப் பூமியிலே பொழி கின்றன. இம்மழையே உயிர்களை நிலைபெறச் செய்கின்றது. இதனாலே தான் மழை சாவா மருந்தாகும் அமிர்தத்துக்கு ஒப் பாகச் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. இம் மழைக்கும் முதற் காரணம் நிலப்பரப்பிலுள்ள நீராயின் அதன் பெருமை சாலச் சிறந்ததே யாகும்.

---

## 15. நீர்வீழ்ச்சி.

முந்திய பாடத்தின் இறுதியிலே சொல்லப்பட்டுள்ள மழை மலைமேலும் பூமியிலும் விழுகின்றது. மலைமேல் விழும் மழைத்துளிகள் 'பலதுளி பெருவெள்ளம்' என்றபடி ஒன்று சேர்ந்து பெருநீராகி உயரத்திலிருந்து தாழ்ந்த இடமாகிய பூமிக்கு வந்து சேருகின்றன. இவை சில இடங்களிலே செங் குத்தாயும் சில இடங்களிலே சாய்ந்துங் காணப்படும். இவ்வாறு விழும் நீருக்கு நீர்வீழ்ச்சி அல்லது அருவி என்பது பெயரா கும்.

அருவி பார்ப்பவர் கண்ணுக்கு அழகாய்த் தோன்றுவது டன் அவரது மனத்தையும் இன்புறச் செய்வது; இயற்கையின் அழகுக்குச் செய்யப்பட்ட வேறொரு அழகுபோல விளங்கு வது. அந்த அருவியினிடம் உண்டாகும் இடைவிடா ஆரவார மும், அதிலிருந்தும்தெளிக்கும் தூவானமும், அதன் வெண்மை நிறத் தோற்றமும் எவர் மனத்தையும் கொள்ளை கொள்ளும் சிறப்பு வாய்ந்தன. கொல்லனது கூர்மையான உளிக்கும் இலகுவில் மாறுபாடடையாத பெரிய பாறைகளையும் அருவி யின் வேகமானது துளைத்துக் குழிசெய்து பெரும் பெரும் பள்ளங்களை உண்டாக்கி விடுகின்றது. நவீன முறையில் இப்

பெரும் வேகத்தை இயந்திரங்களில் இணைத்து அவைகளின் உதவியைக்கொண்டு கிடைப்பதற்கு அருமையான பலவகைப் பொருள்கள் இயந்திர இரசாயன வினைவல்லோர்களால் உண்டாக்கப்பட்டு வருகின்றன. முக்கியமாக இத்தொழில் கானடா தேசத்திலுள்ள பெயர் பெற்ற நியாகரா என்ற அருவிக்கரையிலே ஓங்கி வளர்ந்து வருகின்றது.

நமதுநாட்டிலே முற்காலத்திலே கபிலர் என்ற ஒரு பெரும்புலவர் இருந்தார். அவர் குறிஞ்சி நிலத்தைப்பற்றிப் பாடுவதிலே பெயர்பெற்றவர். அவர் பாடிய பாடல் ஒன்று பத்துபாட்டில் ஒன்முன குறிஞ்சிப்பாட்டாக அமைந்துள்ளது. அப் பாட்டில் அவர் மலையையும், அங்கே விழும் அருவிகளையும், ஆண்டுள்ள பிற இயற்கை வளங்களையும் பற்றிப் பலபடக் கூறியுள்ளார். அக்கால் அவர் அருவியைக் கீழ்க்காணுமாறு சிறப்பித்துக் கூறுகின்றனர். அது "மேகங்கள் நீர் நிறைந்த பெரியகடலிலிருந்து அக் கடல் குறைவுறும் வண்ணம் நீரினை முகந்துகொள்கின்றன; இடமகன்ற வானத்தே பறந்து செல்லுகின்றன. முரசம் ஒலித்தாற்போன்ற இனிய குரலுடன் இடியேற்றுடன் கூடி மலையின் மேலே மழையாகப் பொழிகின்றன. அந்த நெடிய மலைச்சிகரத்தினின்றும் விழுகின்ற வெண்ணிறமான துகிலை ஒக்கும் தெண்ணீர் அருவியிலே நீங்காவிருப்பத்துடன் விளையாடினோம்.'' என்பது. இதனால் பண்டைக்காலத்தில் நம்மவர் அருவியாடலில் பெரிதும் விருப்பம் கொண்டிருந்தனர் என்பதும் விளங்கும்.

இக்காலத்திலும் நமது நாட்டிலே பல புகழ்பெற்ற அருவிகள் இருக்கின்றன. காவிரி என்ற பொன்னி நதியானது ஸஹ்யபர்வதம் என்று புகழப்படும் குடகுமலைகளிலே உற்பத்தியாகின்றது; மைசூர் இராஜ்யத்தின் வழியாக ஓடிவந்து

சிவசமுத்திரம் என்ற இடத்தில் இருநூற்றைம்பது அடி உய ரத்தினின்று ஓர் அருவியாக விழுகின்றது. மைசூர் அர காங்கத்தினர் அவ்விடத்திலே (1902) பல பட்டடைகளைக் கட்டி அந்த அருவியின் வேகத்தை மின்மயமாகமாற்றி அங்கிருந்து தொண்ணூற்று மூன்று மைல்களுக்கு அப் பாலுள்ள கோலார்ப் பிரதேசத்திலுள்ள மணலைக்கொழித்துத் தங்கத்தை எடுக்கும் தொழிலாளர்களுக்கு உதவியாக வேண்டி மின்சக்தியினை அளித்து வருகின்றனர்; இஃதன்றியும் மைசூர், பங்களூர் என்ற இரண்டு பட்டணங்களிலுமுள்ள வீதிவிளக்கு களை இந்த மின்சக்தியைக்கொண்டே ஒளிவீசுமாறு செய்து வருகின்றனர். இந்தக் காவிரி அருவியை யல்லாமல் அந்த ராஜ்யத்தின் வடமேற்கு மூலையிலே சராவதி என்ற நதி 'ஜெர் ஸப்' என்ற பெயருடன் தொள்ளாயிரத்து அறுபது அடி உய ரத்தினின்று மாந்தரது மனத்தை மயக்கும் வண்ணம் ஒரு பேரருவியாக விழுகின்றது இது காளிதாச மகாகவியாலும் இரகுவம்சம் என்ற காவியத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டுள் ளது.

திருநெல்வேலி ஜில்லாவிலே திருக்குற்றாலம் என்ற புண் ணிய பூமியிலே சிற்றாறு என்ற பெயருடன் ஒரு நதி இரு நூறு அடி உயரத்திலிருந்து ஓர் அரிய அருவியாக விழுகின் றது. அதன் கம்பீரமான தோற்றம் காண்போர் மனத்தில் என்றும் அளவில்லாத உற்சாகத்தை விளைவிக்கக் கூடிய தாக இருக்கின்றது. அது செங்குத்தாய் உள்ள மிகவும் உயரமான இடத்திலிருந்து பொங்குமாங்கடல் என்ற பள்ளத்தில் விழுந்து, அங்கிருந்து மெல்லிய அருவியாய் வெண்ணிறத் துகிலை விரித்தாற்போலப் பூமியில் விழுகின்றது. அனந்தசயனத்தில் 'இடபப்பாதி' என்று அழைக்கப்படும்

மழை ஆரம்பமானவுடன் இக் குற்றாலஅருவியும் விளங்கித் தோன்றும். இதன் அடியிலே சற்றேறக்குறைய முப்பதின்மர் ஒரு வரிசையில் நின்று ஸ்நானம் செய்யும்படியான வசதி இக் காலத்தில் செய்யப்பட்டுள்ளது. "இந்த அருவியின் கரையில் ஆண்டுதோறும் இரண்டு மூன்று வாரங்கள் தங்கி நாள் ஒன்றுக்கு இருமுறைக்குக் குறையாமல் ஒருவர் அருவியில் நீராடி



குற்றால நீர்வீழ்ச்சி.

வருவாராயின், அவருக்கு ஆரோக்கியமும் சித்திக்கும்; ஆயுளும் நீளும் என்பது பலரது அனுபவமாகும். அருவியின் பாரம் தேகத்தில் உறைக்கவே அதனால் புதியதோர் உணர்ச்சியும் உற்சாகமும் ஊக்கமும் உண்டாகின்றன; பசித்தீ பெரிதும் மூண்டு எரியத் தொடங்குகின்றது; வழக்கத்திலும் அதிகமான உணவு உட்கொள்ளப்பட்டு இனிது ஜீரணமுமாகின்றது; அதனால் இரத்தம் சுத்தமாகி ஓட்டம் தடையின்றி அமைய உடல்

உரம் பெறுகின்றது.'' இது வைத்திய நிபுணர்கள் (1811) வெளியிட்ட அறிக்கையின்சாரமாகும். இந்த அருவிக்குமேலே ஒருமைல் உயரத்தில் "செண்பகாதேவி" என்ற ஓர் அருவியும், அதிலிருந்து இரண்டுமைல் உயரத்திலே "தேன் அருவி"என்ற ஓர் அழகிய அருவியும் உள. இதன் மேற்கே மூன்று மைல் தூரத்தில் 'ஐயருவி' என்ற ஒரு சிற்றருவியும் இருக்கின்றது. இந்த அருவி திருஞானசம்பந்தராலும் மிக அழகாகச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

இம்மாதிரியான சிறப்பினையுடைய பிறிதொரு அருவியும் இந்த ஜில்லாவில் இருக்கின்றது. அது, தாமிரவர்ணி நதியின் உற்பத்திஸ்தானமாகியபொதிய மலையிலிருந்துவிழும் பாபநாசம் அருவி என்ற பெயரினையுடையது. இதற்குப் "பாணதீர்த்தம்'' என்ற வேறொரு பெயரும் உண்டு. இதில் நீராடிப் பயன்பெற வேண்டி ஒவ்வொரு வருஷமும் ஆடிமாத அமாவாசை யன்று பலஇடங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான யாத்திரீகர்கள் வந்து போவார்கள். இதன் தொடர்பான ஒரு சிற்றருவியின் துணைக் கொண்டு ஒரு பஞ்சாலையும் நடைபெற்று வருகின்றது. இத்தகைய அருவிகளினின்று துளிக்கும் தூவானங்கள் ஆராய்ச்சியாளர்க்குப் பலதிறப்பட்ட வர்ணங்களின்காரணங்களை ஆராய்ந்தறிவதற்குத் துணையாகின்றனவாம். இவையனைத்தும் இயற்கையின் பெருமைகளல்லவா? இயற்கையின் வன்மையே வன்மை.

---

## 16. திருநாவுக்கரசர்.

திருநாவுக்கரசர் சைவசமயாசாரியார் நால்வருள் ஒருவர். இவர் திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வேளாளர் குலத்திலே குறுக்கையர் குடியிலே தோன்றியவர். இவரது

தந்தையாரின் பெயர் புகழனார் என்பது. தாயாரின் பெயர் மாதினியார் என்பது. இவ்விருவரும் இவரது இளமையிலேயே இறந்துவிட்டனர். திருநாவுக்கரசரது பிள்ளைத் திருநாமம் மருள்நீக்கியார் என்பது. இவருக்குத் திலகவதியார் என்ற ஒரு மூத்த சகோதரியார் உண்டு. அத் திலகவதியார் தமது மணாளராகக் குறிக்கப்பட்ட கலிப்பகையார் இறந்துவிட்டமையின் தாம் கலியாணத்தை விரும்பாமலேயே துறவுபூண்டிருந்தனர். மருள்நீக்கியார் திலகவதியாரால் பெரிதும் போற்றி வளர்க்கப்பட்டார். திலகவதியார் மருள்நீக்கியாரைக் காப்பதற்கென்றே உயிர்தாங்கி இருந்தார்.

இங்ஙனமாக மருள்நீக்கியார் உரியகாலத்தில் சகல கலைகளையுங் கற்றார்; பலவகைத் தருமங்களையும் செய்துவந்தார்; உலக வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை உணர்ந்தார்; சமண மதத்தை உயர்வாகக் கருதினார்; அந்த மத நூல்களைக் கற்றார்; தகுந்த காலத்தில் அந்த மதத்தலைவராகவும் ஆனார்; தருமசேனர் என்ற சிறப்புப் பெயரினையும் பெற்றார்.

மருள்நீக்கியார் இவ்வாறு சமணரானமையைக் கண்ட திலகவதியார் தமது வழிபடுகடவுளாகிய திருவதிகை வீரட்டேசரை வணங்கி "ஈசா, எனது தம்பியை உமது அடியானாக்கிக் கொள்ளலாகாதா?" என்று வேண்டினர். வீரட்டேசர் திலகவதியாரின் கனவிலேதோன்றி "நங்காய், உனது தம்பி முன்னைத் தீவினையின் பயனை அனுபவிக்கின்றான்; அவனைச் சூலைநோய்க்கு உள்ளாக்கி ஆட்கொள்வோம்" என்று கூறி மறைந்தனர். திலகவதியாரும் மகிழ்ந்தனர்.

அங்ஙனமே தருமசேனருக்குச் சூலைநோய் தோன்றிற்று. இது 'பிறந்த நற்சமயத்தைவிட்டு வேற்று மதத்திற் புகுந்ததன் பயன்' என்பதை உணர்ந்தார்; திலகவதியாரை அடைந்தார்; அவ

ருடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினர். திலகவதியார் தம்பியைப்பார்த்து “ இது சிவபிரானுடைய திருவருளே ; அவரையே பற்றுக்கோடாகக்கொண்டு வணங்குவீராக. எல்லாம் நன்ருக முடியும் ” என்று கூறிப் பஞ்சாட்சரத்தை ஓதி விபூதியைக் கொடுத்தார். மருள்நீக்கியார் பெருமகிழ்ச்சியுடன் வணங்கி வாங்கி அணிந்துகொண்டார்; தமக்கையாருடன் ஆலயத்துக்குப் போனர்; வீரட்டானேசரை வலமாகவந்து வணங்கினர். ஆண்டவனது அருளால் தமிழ்ப்பாக்கள் தோன்றின. தமது சூலைநோய் நீங்கும்பொருட்டும், சொல்லுகின்றவர்களுடைய துன்பங்கள் நீங்கும்பொருட்டும் “ கூற்ருயினவாறு விலக்ககிலீர் ” என்ற தொடக்கத்தினையுடைய திருப்பதிகத்தைப் பாடியருளினர். சூலைநோயும் நீங்கிற்று. வீரட்டானேசரைப் போற்றிப் புகழ்ந்தார். “ எம்மீது மதுரமான தேவாரப்பதிகத்தைப் பாடினமையின் உனக்குத் ‘திருநாவுக்கரசு’ என்னும் பெயர் வழங்குக ” என்ற ஓர் அசரீரி தோன்றிற்று. அனைவரும்கேட்டுமகிழ்ந்தனர். திருநாவுக்கரசர் மனம்,மொழி, மெய்களால் அன்புடன் திருத்தொண்டினைச் செய்யலுற்ருர்.

இவ்வாறு தருமசேனர் திருநாவுக்கரசரானமையை அறிந்தனர் சமணர் ; ‘ தமது பெருமைக்குக் குறைவுவருமே ’ என எண்ணினர் ; தங்களது அரசனிடத்திலே சொல்லிக் கொண்டனர். கேட்ட பல்லவ அரசனுகிய மகேந்திரவர்மன் திருநாவுக்கரசரை அழைத்து வருமாறு மந்திரிமார்களை ஏவினன். நாவுக்கரசர் “ நாமார்க்குங்குடியல்லோம் ” என்ற திருத்தாண்டகத்தைப் பாடி மறுத்தனர். கடைசியில் அவர்கள் வணங்கி வேண்ட அரசனிடத்திற்குச் சென்றனர். செல்லலும், அரசன் சமண குருமார்களது உத்தரவின்படி அவரை நீற்றறையில் இடுவித்தான். நாவுக்கரசர் அங்கே இருந்து “ மாசில் வீணையும் மாலை

மதியமும்'' என்ற திருக்குறுந்தொகையைப் பாடினர். அந்த நீற்றறை ஆண்டவனது திருவருளால் அவர்க்கு வீணுகானமும் சந்திரனும் தென்றலும் இளவேனிலும் பொய்கையும் போலக் குளிர்ந்திருந்தது. ஏழு நாட்களுக்குப்பிறகு அந்த நீற்றறையைப் பார்க்க அங்கே திருநாவுக்கரசர் இனிது களிப்புற்றிருந்தனர். பின்னர்ச் சமணர்கள் நஞ்சுகலந்த பாற்சோற்றை உண்ணுமாறு கொடுத்தார்கள். அது நாவுக்கரசருக்கு நல்ல அமுதமாயிற்று. அப்பால், சமணர்கள் அரசனது யானையை ஏவினர்கள். ஏவலும், திருநாவுக்கரசர் "சுண்ணவெண் சந்தனச்சாந்தும்'' என்ற தொடக்கத்தையுடைய திருப்பதிகத்தைத் தொடங்கி ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் "நாம் அஞ்சுவதியாதொன்றுமில்லை; அஞ்சவருவதுமில்லை'' என்று அமைத்துப் பாடியருளினர். யானை நாவுக்கரசரை வலமாக வந்து பாகர்களைக் கொன்று சென்றது. கடைசிபாகக் கல்லோடு சேர்த்துக் கயிற்றினலே கட்டிக் கடலிலே தள்ளச்செய்தார்கள்.



அக்கால் திருநாவுக்கரசர் "சொற்றுணை வேதியன்" என்னும் தொடக்கத்தினையுடைய நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடியருளினர். சிவபிரானது திருவருளால் அக் கல்லே தெப்பமாகியது. கரையை அடைந்தார்; திருப்பாதிரிப்புலியூருக்குப் பக்கத்திலே சேர்ந்தார்; அவ்வூர்ச் சிவாலயத்துட் சென்றார்; "ஈன்றாளுமாய்" என்று தொடங்கும் திருப்பதிகத்தைப்பாடி அங்கேயே தங்கியிருந்தார்.

இங்ஙனம் சிலநாட்கள் இருந்து பின்னர்த் திருநாவுக்கரசர் திருவதிகைப்பதிக்குச் செல்ல எண்ணினர்; சில தலங்களை வணங்கிக் கெடிலநதியைக் கடந்தார்; அதிகைப்பதி வாழ்நர் எதிர்கொண்டு வணங்கி அழைக்க ஊருட்சென்று ஆலயத்தை அடைந்தார்; "ஏழையேன் நான்பண் டிகழ்ந்தவாறே" என முடியும் ஏழைத் திருத்தாண்டகத்தைப் பாடினர். சமணர்களது துர்ப்போதனைகளுக்கு உள்ளான பல்லவராசன் அதிகைப் பதிக்குவந்தான்; திருநாவுக்கரசருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினன்; தான் அறியாது செய்த பிழைகளைப் பொறுத்தருளுமாறு வேண்டினன்; சைவசமயத்தைத் தழுவினன்; திருவதிகையிலே குணதரேச்சரம் என்னும் கோயிலைக்கட்டினன்.

அப்பால் திருநாவுக்கரசர் பலதலங்களையும் வணங்கவேண்டும் என்னும் விருப்பிற் சென்றார்; பெண்ணாகடத்திற்குப் போனர்; ஆங்குள்ள திருத்தூங்கானைமாடம் என்னும் ஆலயத்துட்சென்றார்; கடவுளை வணங்கினர்; "எனது உடலிலே சூலம், இடபம் ஆகியவற்றின் குறியை அமைக்கவேண்டும்" என்னும் குறிப்பால் "பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினர். கடவுளும் தம்முடைய பூதகணங்களைக்கொண்டு அங்ஙனமே செய்வித்தார். பல தலங்களுக்கும் சென்று கடவுளை வணங்கிச் சிதம்பரத்

துக்கு வந்தார் ; அங்கேயே தங்கி "அரியானை அந்தணர் தம் சிந்தை யானை" என்னும் பெரிய திருத்தாண்டகம் முதலிய பாடல் திருத்தொண்டும், உழவாரத் திருத்தொண்டும் செய்து வருவாராயினர். அக்கால் அடியார்கள் சொல்லத் திருஞான சம்பந்தரது பெருமையை உணர்ந்தார் ; சீர்காழிக்குச் சென்று திருஞானசம்பந்தரை வணங்க எண்ணினர் ; சிதம்பரத்தை நீங்கிச் சீர்காழியின் எல்லையை நெருங்கினர். நெருங்கவும், திருஞானசம்பந்தர் பேரன்புடன் அவரை எதிர்கொண்டனர் ; திருநாவுக்கரசருடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினர். நாவுக்கரசரும் திருஞானசம்பந்தருடைய திருவடிகளிலே வணங்கினர். தம்மை வணங்கிய திருநாவுக்கரசரைத் தாமும் வணங்கி "அப்பரே" என்று அழைத்துக் கரங்களைப் பிடித்து எடுத்தார். அன்று முதல் திருநாவுக்கரசருக்கு 'அப்பர்' என்ற பெயர் உண்டாயிற்று.

பின்னர்த் திருநாவுக்கரசருக்குப் பலதலங்களுக்கும் செல்ல வேண்டும் என்ற விருப்புத் தோன்றிற்று. சம்பந்தரிடம் விடை பெற்றார்; பலதலங்களுக்கும் சென்றார்; திருச் சத்தி முற்றத்தை அடைந்தார்; "அடுதிறற் கூற்றங் குமைப்பதன் முன்பு பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை" என்று பாடினர். சத்திமுற்றப் பெருமான் "நல்லூருக்கு வா" என்று அழைத்தார். அங்ஙனமே சென்றார். நல்லூராண்டவர் "வாகீச, உனது கருத்தை நிறைவேற்றுகின்றோம்" என்று கூறித் தம்முடைய திருவடிகளை அப்பரது சிரசின் மேலே சூட்டியருளினர். உடனே அப்பர் "நினைந்துருகு மடியாரை" என்னும் தாண்டகத்தைத் தொடங்கிப் பாட்டடி தோறும் "திருவடி என் தலைமேல் வைத்தார் எம்பெருமானர் நல்லவாறே" என்று பாடினர்; பலதலங்களுக்கும் சென்று திருப்பழனத்தை

அடைந்தார்; அங்கிருந்து திங்களூர் வழியாகச் செல்வாராயினர்.

செல்லலும் வழியில் குளம், சத்திரம், தண்ணீர்ப்பந்தல் முதலிய காணப்பட்டன. உள்ளே சென்றார்; "இது திருநாவுக்கரசரது" என்று யாண்டும் அழகாக எழுதப்பட்டிருப்பதைக் கண்டார்; வியப்புற்றார்; அதன் வரலாற்றை அறிய எண்ணி உசாவினர். "தம்முடைய பிள்ளைகளுக்கும், தாவரம் சங்கமம் ஆகிய பொருள்களுக்கும் 'திருநாவுக்கரசு' என்று பெயரிட்டழைக்கும் அன்பராகிய அப்பூதி அடிகள் செய்யும் திருத்தொண்டு" என்பதைத் தெரிந்து கொண்டார்; அவரைக் காணவேண்டித் திங்களூருக்குச்சென்றார். இருவரும் பார்த்துக் கொண்டனர். அப்பூதி அடிகளது வேண்டுகோட்கிணங்கி அங்கே திருவமுது செய்ய உடன்பட்டார். அப்பூதி அடிகளும், அவரது மனைவியாரும் உணவினைச் சமைத்து மூத்த திருநாவுக்கரசைத் "தோட்டத்திற்குப்போய் வாழைக்குருத்து ஒன்றை அரிந்துகொண்டுவா" என்று அனுப்பினர். அவனும் சென்று அரிந்தான். ஓர் அரவம் அவனது கையிலே தீண்டிற்று. தீண்டியும் அவன் அதனைப் பொருட்படுத்தாது ஓடிவந்து இலைக்குருத்தைத் தாயாரிடம் கொடுத்து இறந்தான். மகன் இறந்ததையும் பொருட்படுத்தாது அவர்கள் திருநாவுக்கரசருக்கு உணவுசெய்விக்க முயன்றார்கள். தெய்வத் தவக்குறிப்பால் வாகீசரது உள்ளத்தே தடுமாற்றந் தோன்ற உண்மையை உணர்ந்தார்; ஆலயத்துக்குச் சவத்துடன் சென்று "ஒன்றுகொலாம் அவர் சிந்தை" என்ற திருப்பதிகத்தைப் பாடினர். இறந்த குமாரன் உயிர்பெற் றெழுந்தான். திருநாவுக்கரசர் திரு அமுது செய்தார்; "சொன்மாலை பயில்கின்ற" என்ற பதிகத்திலே "அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி" என்று

அப்பூதி அடிகளைச் சிறப்பித்தார்; திருப்புகலூரிலே முருகனு ரது மடத்திலே சில நாட்கள் தங்கினூர்; ஞானசம்பந்தர், திரு நீலநக்கர், சிறுத்தொண்டர், குங்கிலியக்கலயர் முதலாயினருடன் மகிழ்ந்தார்; திருவீழிமிழலையை அடைந்தார்; வீழிநாதரால் வட்டம் வேண்டாதபடிக்காசு தந்தருளப் பெற்றூர்; பஞ்சத்தால் வருந்தியவர்களுக்கு உணவளித்தார்.

அவ்வூரிலே இருந்த பஞ்சம் நீங்கவும், திருஞானசம்பந்தருடன் வேதாரணியத்திற்குச் சென்றூர்; அங்கே அடைபட்டுக் கிடந்த கதவு திறக்குமாறு "பண்ணினேர் மொழியாள்" என்றும், "இரக்கமொன்றிலீர்" என்றும் வரும் திருப்பதிகங்களைப் பாடினூர். கதவுதிறக்கப்பட இருவரும் கடவுளை வணங்கினர். திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டிற்குச் சென்றூர். இவர் கடவுள் அழைக்கத்திருவாய்மூருக்குச் சென்று வணங்கினூர்; திருவாவடுதுறைக்குப்போய் "மாயிருஞாலமெல்லாம்" என்ற திருப்பதிகத்தால் திருஞானசம்பந்தருக்கு அருளிய திறத்தை வியந்து பாடினூர்; பழையாறைக்குச் சென்றூர்; சமணரால் மறைக்கப்பட்ட கடவுளை அருள்வழிச் சென்று அரசனது துணையால் வணங்கினூர்; பலதலங்களுக்கும் போய்த் திருக்காளத்தி மலையை அடைந்தார்; கண்ணப்பரை வணங்கி அங்கேயே சிலநாட்கள் தங்கினூர்.

பின்னர், உத்தர கைலாசத்திற்குச் செல்ல எண்ணினூர்; திருப்பருப்பதத்தை அடைந்தார்; உணவு முதலாயின இன்றி நடந்தார். கால்கள் தேய்ந்தன. கைகளின் உதவியால் தாவிச் சென்றூர். கைகளும் சிதைந்தன. என்றூலும் ஆசை குறையவில்லை. மார்பாலே நகர்ந்தார். அதன் தசையும் நைந்தது. எலும்புகளும் முரியலுற்றன. புரண்டு போவாராயினர். அப்பால் அதற்கும் இயலாதுபோக வழியிலே ஓரிடத்திலே கிடந்தார்

அக்கால் ஆண்டவன்தோன்றி இவரது உறுதியைப் பலவாறு சோதனை செய்தார்; மகிழ்ந்தார்; "நாவுக்கரச, எழுந்திரு" என்ருர். உடனே ஆண்டவனது திருவருளால் அங்கமெல்லாம் முன்போலாயின "நாவுக்கரச, இந்தத் தடாகத்திலே முழுகு; திருவையாற்றை அடைவாய்; அங்கே நம்மை வணங்கு" என்று கூறி மறைந்தார்.

திருநாவுக்கரசர் அங்ஙனமே பஞ்சாட்சரத்தை ஓதி அந்தத் தடாகத்திலே மூழ்கினர்; திருவையாற்றிலுள்ள ஒரு குளத்திலே தோன்றிக் கரையேறினர். ஆலயந்தோன்றிற்று. கைலாஸநாதரைக்கண்டு வணங்கச்சென்ருர். ஆலயமும் ஆண்டுள்ள சராசரங்களும் முறையே கைலாஸமலையாகவும் சிவகணங்களாகவும் தோன்றின. உள்ளே சென்ருர்; கடவுள்அளித்த காட்சியைக்கண்டு களித்தார்; தாண்டகம் பாடினர்; சின்னாள் அங்கேயே இருந்து பல தலங்களையும் வணங்கிக்கொண்டு திருப்பூந்துருத்தியை அடைந்தார்; அங்கே ஒரு திருமடத்தைக் கட்டுவித்தார். அக்கால் திருமறைக்காட்டிலிருந்து பிரிந்து பாண்டிநாட்டிற்குச் சென்ற திருஞான சம்பந்தர், அப்பர் இருப்பதை அறிந்து பூந்துருத்திக்கு அருகில் வந்தருளினர். அதையறிந்த அப்பர் எவரும் அறியாவண்ணம் எதிர்கொண்டு ஞானசம்பந்தரது முத்துச்சிவிகையைத் தாங்கிவருவாராயினர். வாகீசரைப் பார்க்க விரும்பிய சம்பந்தர் "அப்பர் எங்குற்ருர்?" என்று வினவ 'அடியேன் தேவரீரைத் தாங்கும் பெருவாழ்வைப்பெற்று இங்குற்றேன்' என்றனர் அப்பர். உடனே சம்பந்தர் சிவிகையினின்றும் இறங்கினர். ஒருவரையொருவர் வணங்கிக்கொண்டனர். திருஞானசம்பந்தரால் பாண்டிநாட்டின் பெருமைகளைக்கேட்டு இன்புற்ருர்.

அப்பால், வாகீசர் பாண்டிநாட்டை யடைந்து பலதலங்

களையும் வணங்கிச் சோழமண்டலத்திற்குத் திரும்பினார்; திருப் புகலூரை அடைந்தார் ; அங்கேயே உழவாரத்திருத்தொண்டு முதலிய தொண்டுகளைச் செய்துகொண்டும், பல பதிகங்களைப் பாடிக்கொண்டும் இருந்தார். அங்கே, அப்பர் உழுங்கால் ஆண்டவனருளால் கற்களெல்லாம் பொன்னாகவும், நவரத்தி னங்களாகவும் தோன்றின. அவற்றை அப்பர் பருக்கைக்கற் களோடு சமமாக எண்ணி எறிந்துவிடுவார். இங்ஙனமே வேறு சோதனைகளையும் ஆண்டவன் செய்தார். சித்தத்தைச் சிவன் பாலே வைத்த வாகீசர் அவற்றிற்கு மயங்கவில்லை. பின்னர் வாகீசர் பல திருவிருத்தங்களைப்பாடிச் சித்திரைமாதமும் சதய நக்ஷத்திரமுங்கூடிய நன்னாளிலே "எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ" என்று தொடங்கிய திருத்தாண்டகத்தைப் பாடத்தொடங்கித் தாண்டகந்தோறும் கடைசிப் பகுதியில் "உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணி யனே." என்று அமைத்துப் பாடியருளினார்; சிவபெருமா னுடைய திருவடி நிழலையடைந்தார். இவர் பாடிய பதிகங்கள் 49000. கிடைத்த பதிகங்கள் 312.

---

## 17. நீலகிரி.

சென்னை இராஜதானி இப்பொழுது இருபத்தாறு ஜில் லாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் நீலகிரியும் ஒன் றாகும். அதன் பரப்பு சற்றேறக்குறைய ஆயிரத்து ஒன்பது சதுரமைல்களாகும் அந்த ஜில்லாவின் வடக்கு எல்லையாக மைசூரும் ; கிழக்கு எல்லையாகக் கோயம்புத்தூரும் ; தெற்கு எல்லையாகக் கோயம்புத்தூர், பாலக்காடு என்பனவும் ; மேற்கு எல்லையாக மலையாளமும் அமைந்திருக்கின்றன. அது மேற் குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த பல குன்றுகள் அடங்கிய

ஒரு பகுதியாகும்; மேற்குத் தொடர்ச்சி மலைகளும், கிழக்குத் தொடர்ச்சி மலைகளும், அகத்திய மலைகளும் கூடுகின்ற ஒரு முச்சந்தியான மலைப்பாங்கருமாம். அது மிக உயரத்தில் இருக்கின்றது. அதன் சராசரி உயரம் கடல் மட்டத்துக்கு மேலே ஆறாயிரம் அடியாகும். அதன் மிக உயர்ந்த சிகரமாகிய தொட்டபெட்டா என்பது எண்ணாயிரத்து எழுநூற்று இருபத்தெட்டு அடி உயரத்திலிருக்கின்றது. அதன் மேற்பரப்புக்களில் உதகமண்டலம், லவ்டேல் என்ற நகரங்களும்; அடிவாரங்களில் கூனூர் (குன்றூர்), கொத்தகிரி, வெல்லிங்டன் என்ற பட்டணங்களும் உள.

இந்த ஜில்லாவிலே பண்டைக்காலத்து மனித பரம்பரையில் வந்தவர்களாகிய தோடர், படகர், கோட்டர் என்ற வகுப்பினர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் முறையே தோட பாஷை, படகபாஷை, கோட்டபாஷை என்ற பாஷைகளைப் பேசி வருகின்றார்கள்; மலைவாசிகள் ஆதலின் திடகாத்திரம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள்; ஆனால், அழுக்குப்படிந்த உடல், உடைகளுடன் நாகரிக வாழ்வே தெரியாதவர்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்களுள் தோடர்களின் தொகை அறுநூற்று நாற்பது, படகர்களின் தொகை நாற்பதினாயிரத்து முந்நூற்றுஇருபத்தொன்பது, கோட்டர்களின் தொகைஆயிரத்து இருநூற்று நான்கு என்பது துரைத்தன (1921) ஜன கணிதக் கணக்கினால் அறியப்படுவது. இந்த ஜில்லாவிலே வாசம் செய்யும் ஜனங்களின் மொத்தத் தொகை ஒருலட்சத்துப் பதினெண்ணாயிரத்து அறுநூற்றுப் பதினெட்டாகும்.

இந்த ஜில்லாவில் அநேக இடங்களில் மலைமேலிருந்து நீர் வீழ்ச்சியாகப் பல சிறு நதிகள் விழுகின்றன. அவை அவ்வடர்ந்த மலைக்காடுகளின் நடுவே இனிய தோற்றத்தையும், அழ

கிய காட்சியையும் தருகின்றன. அவற்றின் அருகிலே பற்பல தோட்டங்களும், பூங்காவனங்களும் அழகுபெற அமைந்துள்ளன. வாழை, கமுகு, பலா, கிராம்பு, ஜாதிக்காய், குங்கிலியம், மூங்கில், யூகிலிப்ட்ஸ் முதலியன நிரை நிரையாக எங்கும் வளர்ந்து நிற்கும். பூந்தோட்டங்களின் அடிப்பரப்புக்களோ பச்சைக் கம்பளம் விரித்தாற் போலப் புற்கள் செறிந்து விளங்கும். தோட்டங்களின் நுழைவாயில்தோறும் பற்பல வர்ணங்களோடு கூடிய பலதிறப்பட்ட கீரைகள் பலப்பல பாத்திகளாய்ப் பொலிவுபெற வளர்க்கப்படுகின்றன. உள்ளிடங்களில் விரும்பிப் போற்றி வளர்க்கப்படும் நூற்றுக்கணக்கான சிறு செடிகளில் எண்ணிறந்த மலர்கள் பல நிறங்களுடனே அலர்ந்து இலங்கும். பலதிறப்பட்ட குத்துச் செடிகளிலே மலரும் பன்னிற மலர்கள், தொடுத்த பூச்செண்டுகள்போல அழகுடன் விளங்கித்தோன்றும். வேலிகளை அழகுபடுத்தக்கூடிய இளந்தளிர்கள் நிறைந்த பலதிறக்கொடிகளையும் அங்கே காணலாகும். பேரி, ஆரஞ்சு, கொய்யா, வாழை முதலிய பழவர்க்கங்களும்; பீன்ஸ், பீட்ரூட், உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ் முதலிய ஆங்கிலக் கறிவகைகளும் அங்கே நன்றாய் விளைகின்றன. இவையல்லாமலும் தேயிலை, காப்பிக்கொட்டை முதலியனவும் பயிராகின்றன. ஆனால், இவ்விடங்களிலே நெல் விளைவதில்லை.

இவை இயற்கையிலேயே உயர்வான இடங்களாதலின் கோடைக்காலங்களில் வெப்பம் பெரிதும் குறைவுற்று இனிது வாசம் பண்ணுதற்குத் தகுதியான ஆரோக்கிய நிலைமையைக் கொடுக்கின்றன. அதனாலேதான் நமது நாட்டுத் துரைத்தனக் கூட்டத்தினரும், சிற்றரசர்களும், பொருளாளர்களும் அவ்விடங்களுக்குப் போய்ப் பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய மாதங்களிலே சுகவாசத்திற்கெனத் தங்குகின்

ரூர்கள். கூனூரில் நம்மவர்களுக்குச் சொந்தமான இல்லங்களும், பங்களாக்களும் பலஉள. உதகமண்டலத்தில் ஐரோப்பியத் தோட்டக்காரர்களுக்கும், குறுநில மன்னர்களுக்கும், அரண்மனைபோன்ற மாளிகைகள் பல இருக்கின்றன வெல்லிங்டன் என்ற நகரிலே சேனைத்தலைவர்களும், இராணுவ வீரர்களும் வசித்து வருகின்றூர்கள். இவ்விடங்களிலே குளிர் அதிகமாதலால் இரவிலே ஜனங்கள் நல்ல கம்பளிகளைப் போர்த்துக்கொண்டு உயர்ந்த கட்டில்களில் உறங்குவது அவசியமாகின்றது. நடுப்பகலிலே எரிக்கிற வெய்யிலும் சந்திரகிரணம் போல இருக்கும். சௌக்கியத்தின் பொருட்டாக மாத்திரமே ஜனங்கள் அங்கேபோய் வருகின்றூர்கள் என்பதில்லை. மலை வளங்களைக்கண்டு இன்புறுதற்காகவும் போவதுண்டு. இப்பகுதிகளிலே காலை, மாலைகளில் உலாவி வருபவர் எத்தகைக் கவலைகளுக்கு உட்பட்டிருந்தாராயினும் அங்குள்ள இயற்கையின் சிறப்பு அவரது மனத்தைக் கவர்ந்து அவரை மகிழ்ச்சிக்கு உள்ளாக்கும் என்பது மிகையாகாது.

இந்த மலைநாடு உயர்ந்த குன்றுகளும், தாழ்ந்த பள்ளத்தாக்குகளும் நிறைந்த காடுகள் பலவற்றுடன் கூடியதாதலின் மாறி மாறித்தோன்றும் அவற்றின்ஊடே செல்லுகின்ற ரயில் வண்டிகளிலே செல்வது மிக்க இன்பத்தை விளைவிக்கின்றது. ஒருமலைக்கும் மற்றொருமலைக்கும் இடையில் உள்ள பாதாளம்போன்ற பள்ளத்தாக்குகளை உயர்ந்த கற்பாலங்களாலாகிய ரயில் பாதைகளால் தாண்டிச் செல்வது அச்சத்தையும், வியப்பையும் விளைப்பதாகும் சில இடங்களிலே மலைப்பாறைகள் குடையப்பட்டும் ரயில் பாதைகள் போடப்பட்டுள்ளன. இவைகளின் வழியாகப் பூமிமட்டத்திலிருந்து உயரச்செல்வது இயற்கைத் தேவியின் எழிலைக் கண்ணுற் பருகுவது போலக்

களிப்பினைக் கொடுப்பதாகும். கண்ணுக்கினிய காட்சிகளும், செவிக்கினிய இன்னோசைகளும், நாசிக்கினிய நறுமணமும்,



நீலகிரி மலை.

உடலுக்கினிய மென்காற்றும், பிறவும் ஒருங்கே அமையப் பெற்ற நீலகிரியின் வனப்பு பெரிதும் வியக்கற்பாலதேயாகும் இவ்வளவு சிறப்பு வாய்ந்த நீலகிரித் தொகுதியைத் தென்னாட்டின் 'இயற்கைப் பெருவளப் பண்டகசாலை' என்று கூறுவது முற்றும் பொருத்தமானதேயாகும்.

---

## 18. பாரி.

பாரி தமிழ்நாட்டிலிருந்த கடையெழு வள்ளல்களில் ஒருவன்; முந்நூறு ஊர்களை ஆண்டவன்; பறம்புமலையைத் தலைமை இடமாகக் கொண்டவன்; தமிழ் நாட்டு முடியுடை

மூவேந்தரும் பொறுமை கொள்ளத் தக்கவாறு வேண்டியார் வேண்டியாங்குக் கொடுத்து உதவும் பெருங் கொடையாளன்; பேரருளாளன்; கோல் கோணுமல் குடிகளைக் காத்து வந்த வன்; நட்பிலக்கணத்தை நன்கு உணர்ந்தவன்; பகைத்தவர் களை அடியோடு அழிக்கும் ஆற்றலை உடையவன்; நெருங்கி வந்து 'கொடு' என்று கேட்டவர்க்கு உயிரையுங் கொடுக்கப் பின் வாங்காதவன்; மன்னுயிர்களைத் தன்னுயிரினும் மேலாகப் பார்க்கும் பெற்றியினை உடையவன்; பொய்யா நாவினை உடைய வாய்மையாளரும், புலனழுக்கற்றவரும் ஆகிய அந்தணர் பெரு மானுன கபிலர் என்னும் பெரும் புலவரது நட்பினன்; "கொடுக் கிலா தானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்று சுந்தரரால் போற்றப்பட்டவன்; தன்னுடைய முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்குக் கொடுத்துவிட்டுப் பறம்பு மலையிலே தங்கியிருந்தவன்.

இவனிடம் பரிசில்பெற்று இன்புற்றவர் பெரும் புலவ ரான கபிலர் முதலிய பலராவர். இவனது நாடு உலகம் பஞ் சத்தால் வருந்துங் கொடிய துன்பக் காலத்திலும் பெரிதும் செழிப்புற்றிருந்தது. இதனுல் இவனுடைய குடிமக்கள் எக் காலத்திலும் பெரிதும் மகிழ்வுற்று வாழ்ந்து வந்தார்கள்.

இவன் ஒருகால் தனது தேரிலே ஏறிக்கொண்டு வேற் றூருக்குச் சென்றுன்; தனது வேலையை முடித்துக் கொண்டு ஊருக்குத் திரும்பி வரலானுன். வருங்கால் நடுவழியில் ஒரு முல்லைக் கொடி கொளு கொம்பு இல்லாமல் நின்றது; காற்றுல் அலைப்புண்டது; பாரியின் தேரைத் தடவலுற்றது. பார்த்த னன் பாரி; "இஃது ஓரறிவினையுடையது; ஆயினும், தான் படர்ந்து ஏறுவதற்கு உற்ற ஒரு கொளு கொம்பை விரும்பு வதுபோலக் காணப்படுகின்றது" என்று எண்ணினுன்;

அந்த முல்லைக் கொடி படர்ந்தேறும் வண்ணம் தனது தேரை அவ்விடத்திலேயே நிறுத்தினன்; கால் நடையாக நடந்து தனது ஊரை அடைந்தான்

ஒருகால் ஔவையார் பாரியிடம் பரிசில்பெறச் சென்றார். பாரி ஔவையாரின் புலமையை அறிந்தான்; அவரை விட்டுப் பிரிய மனமில்லாதவனானன்; அதனைக் கருதியே பரிசிலும் கொடாதிருந்தான். இங்ஙனமாக, ஔவையார் ஒருநாள் தாம் வேறு பல இடங்களுக்குச் செல்லக் கருதியிருப்பதைத் தெரிவித்தார். 'பரிசிலைக் கொடுத்தால் ஔவையார் பிரிந்து போவார்; கொடாவிடில் மனம் வருந்துவார்; ஒருகால் சாபம் கொடுத்தாலும் கொடுப்பர்; என் செய்வது?' என்று தனக்குள்ளே எண்ணினன் பாரி; இரண்டனையும் செய்ய இயலாது 'இருதலைக் கொள்ளி எறும்பு' போல இடர்ப்பட்டான்; கடைசியில் வேறு வழியைக் காணாது பரிசிலைக் கொடுத்தான்; ஔவையாரைப் பின்சென்று வழியனுப்பினன். ஔவையாரும் வேற்று நாட்டிற்குச் செல்வாராயினர். பார்த்தனன் பாரி; ஔவையாரைப் பிரிய மனமில்லாது வருந்தினன்; சில ஏவலாளர்களை ஔவையார்க்கு முன்னே அனுப்பினன்; ஔவையாரிடம் இருக்கும் பொருள்களைப் பறித்து வருமாறு செய்தனன். அந்த ஏவலாளர்களும் அங்ஙனமே சென்றார்கள்; ஔவையாரிடமிருந்த பொருள்களைப் பறித்து வந்தார்கள். ஔவையார் திரும்பிப் பாரியிடம் வந்தனர். பாரி தனது எண்ணம் பலித்தமையைக் கண்டு மகிழ்ந்தான்; சமயம் பார்த்துத் தான்செய்த சூழ்ச்சியைக் கூறி மன்னித்தருளுமாறு வேண்டிக் கொண்டான். பாரி தம்மிடத்திலே வைத்திருக்கும் பேரன்பை உணர்ந்த ஔவையார் பின்னர்ச் சில நாட்கள் வரையில் பாரியிடத்திலேயே தங்கியிருந்தார்; அவனது அநுமதியைப் பெற்று நீங்கினர்.

இச் செயல்களால் இவனது கொடைப்புகழ் எங்கும் பரவியது. அதனைக் கேட்ட சேர, சோழ, பாண்டியர்களாகிய தமிழ் வேந்தர் மூவரும் 'எப்படியாவது பாரியை அடக்கவேண்டும்' என எண்ணினர்; தங்களுடைய சேனைகளை ஒன்றுநச் சேர்த்துக் கொண்டனர்; பாரி தங்கியிருந்த பறம்புமலையைச் சுற்றி வளைத்துக் கொண்டு முற்றுகை போட்டனர்; மலைக்கோட்டைக்குள் இருப்பவர்களுக்கு வெளியிலிருந்து உணவுப் பொருள்கள் முதலியன போகா வண்ணம் தடுத்தனர்.

இவர்கள் எவ்வளவு தடை செய்தும் அவற்றால் பறம்பு மலையில் இருப்பவர் சிறிதும் துன்புறவில்லை. தங்களது பலத்



பறம்பு மலை.

தின் சிறுமையையும், மூவேந்தர்களது பலத்தின் பெருமையையும் கண்டு அஞ்சவில்லை. அந்தப் பறம்பு மலையோ இயற்கையி

லேயே பலவளங்களும் பெரிதும் நிரம்பியது; உழவர்கள் வருந்திப் பாடுபடாமலேயே தன்னிடமிருக்கும் அனைவரையும் உண்பிக்கும் ஆற்றலினைப் பெற்றுள்ளது. மூங்கில் நெல்லும் பலாப்பழமும் வள்ளிக்கிழங்கும் தேனும் வேண்டிய அளவு அங்குள்ளார்க்குக் கிடைத்து வந்தன. இவற்றோடு புலவர் பெருமானான கபிலரால் பழக்கப்பட்ட கிளிகள் வெளியே பறந்து சென்று ஆங்காங்குள்ள தானியமணிகளையும் கொண்டு வந்து நிரப்பின.

இங்ஙனமாக மலையினுள் அடைபட்டார் சிறிதும் கவலையின்றி இனிது வாழ்ந்துவந்தார். ஆதலின் மூவேந்தர்கள் எண்ணிய எண்ணம் விழலுக் கிறைத்த நீர்போலாயிற்று. தமிழ்நாடு முழுவதையும் தங்களுடைய குடைகளின் கீழ்ப்படுத்தி ஆண்டு வரும் அந்த மூன்று வேந்தர்களும் மிகக் குறுகிய இடப் பரப்பினையுடைய பறம்பு மலையையும், அதன் தலைவனாகிய பாரியையும் அடக்க இயலாது தத்தம் நாடுகளுக்குச் சென்றார்கள். 'தன்னூர் யானை அயலூர்ப் பூனை' என்பர் உலகோர். இப் பழமொழி இங்கே உண்மையாயிற்று. 'தன்னிடத்திலே எல்லா வளங்களையும் பெற்றுள்ள நாடே சிறந்த நாடாவது' என்ற வள்ளுவர் கருத்தை உறுதிப் படுத்துவது போன்றது பறம்பு மலை. பறம்புமலை தன்னிடத்தி லுள்ளவர்களுக்கு உணவினை அளிக்கும் ஆற்றலினையும், வளப்பத்தையும் பெற்றிராதிருப்பின் அங்குள்ளார் அனைவரும் பட்டினியினால் உயிரிழந்தே இருப்பர். மூவேந்தர்களும் வெற்றிபெற் றிருப்பார்கள்.

மூவேந்தர்கள் பாரியின் பறம்புமலையை முற்றுகை போட்டதற்கு வேறு சில காரணங்களையும் கூறலாம். இவ்வாறு தங்களாற் பாரியை வெல்ல இயலாமற் போகவே அந்த மூவேந்தர்

களும் வஞ்சனையால் சமயம் பார்த்து அப்பாரியைக் கொன்று விட்டார்கள்.

பாரி இறந்ததும் தமது உற்ற நட்பாளனை இழந்ததால் உண்டான துக்கத்தைத் தாங்கமாட்டாத கபிலர் தாமும் உயிர் துறக்கத் துணிந்தார்; ஆயினும், பாரியின் மகளிர் இருவர் வேறு கதியற்று இருப்பதை உணர்ந்தார்; அவர்களுக்குத் திருமணத்தை நிறைவேற்றி வைத்துப்பின்னர்த் தமது கருத்தை முடித்துக் கொள்ளக் கருதினர்; பாரியின் பெண்களை மணந்துகொள்ளுமாறு மூவேந்தரையும் வேண்டினர். அவர்கள் பகைமை காரணமாக மறுத்துரைத்தமையின் அப்பெண்மணிகளைப் பார்ப்பார் சிலரிடத்தே ஒப்படைத்தார்; பாரியைக் குறித்துப் பலவாக இரங்கிப்பாடி வடக்கிருப்பாராயினர். பாரியின் மகளிர்களும் பாரியைக் குறித்துப் பலவாக இரங்கிப் பாடியுள்ளார்கள்.

---

## 19. அலெக்ஸாண்டரும், கொள்ளைக்காரனும்.

இடம்:—அரண்மனையில் கொலுமண்டபம்.
காலம்:—காலை ஒன்பது மணி.
பாத்திரங்கள்:—அலெக்ஸாண்டர், மந்திரிமார் முதலாயினர்.

அலெக்ஸாண்டர்:—மந்திரித் தலைவரே, நமது நாட்டிலே குடிகள் அனைவரும் இன்புற்று வாழ்ந்து வருகின்றார்களா? குறைகள் நேரா வண்ணம் காக்கப்படுகின்றார்களா? தத்தம் தொழில்களைச் செவ்வனே செய்து ரைத்தக்க வசதிகள் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்படுகின்றனவா?

மந்திரி:—மகாராஜரே, கடவுளது திருவருளாலும், தங்களது பராக்கிரமச் செயல்களாலும் நம்முடைய குடிகள்

இனிது வாழ்ந்து வருகின்றார்கள்; நமது சிறந்த காவலர் தலைவரது தலைமையின் கீழ்ச் செவ்வனே குறைவின்றிக் காக்கப் படுகின்றார்கள். புதியதாக நியமனம் பண்ணப்பட்ட தொழில் இலாகாத் தலைவர் தமது முதிர்ந்த அநுபவத்தால் பல நல்ல தொழிற் சாலைகளையும் வைத்து நடத்தி வருகிறார்; தனிமையில் நடத்துவோர்க்கும் போதிய உதவிகளைச் செய்து வருகின்றார். அங்ஙனமே இன்றியமையாத கல்வியும் ஒவ்வொருவருக்கும் இலவசமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. சுருக்கமாகச் சொன்னால் தங்களது உலக அனுபவம் அனைத்தும் ஓர் உருக் கொண்டு நம்முடைய குடிகளைப் பல துறைகளிலும் முன்னேற்றி இன்புறச் செய்து வருகின்றன என்பது புகழ்ச்சியுரை ஆகாது; உண்மையே ஆகும்.

[சபையோர்களும், ஏனைய மந்திரி சபையினரும் முதன்மந்திரி கூறிய வற்றை ஆமோதிப்பவர் போலக் கைகொட்டி மகிழ்ச்சிக் குறியைத் தெரிவிக்கின்றார்கள். அரசனும் சிறிது புன்சிரிப்புடன் அகமகிழ்ந்துசபையோரைக் கவனிக்கின்றான். சபை சிறிதுபோழ்து அரவம் இன்றி அமைதியாக இருக்கின்றது.]

(குடிகளிற் சிலர் ஒரு கூட்டமாக வருகின்றனர்.)

அரசர் :—மந்திரி, தாம் கூறியவற்றைக் கேட்கச் சிறிது உள்ளம் பூரிக்கின்றது. ஓர் அரசன் தன்னுடைய குடிகளுக்குச் செய்துகொடுக்க வேண்டியது இன்னும் பல உள என பதே எனது கருத்து. தம்மை ஒத்த மதிவல்லமை வாய்ந்த பெரியார் முதன் மந்திரியாகக் கிடைத்திருப்பதும் எனது நற் காலக் குறியே.

[மந்திரியார் தலைவணங்கி நிற்கிறார்.]

அரசர்:—(மந்திரியைப் பார்த்து) நமது சபையை நோக்கிப் பலர் கூட்டமாக வருகின்றனரே; காரணம் யாதாக இருக்கலாம்?

மந்திரி:—அரசே, ஏதோ சொல்லிக் கொள்ள வருகிறவர்கள் போலவே காணப்படுகிறார்கள். கேட்போம்.

குடிகள்:—(எல்லோரும் ஒரே காலத்தில் பூமியில் விழுந்து வணங்கி எழுந்து நின்று கண்ணீரும், கம்பலையுமாகத் துக்கக் குறியுடன் அரசனை நோக்கி) மகாராஜாவே, இதுவரையிலே நாங்கள் சிறிதும் கவலையின்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தோம். இனித் தாங்க மாட்டோம். இப்பொழுதே நாட்டைவிட்டு ஓடிப் போகின்றோம்.

அரசர்:—(படபடப்பை மாற்றிக்கொண்டு) ஒவ்வொருவராகச் சொல்லுங்கள். நடந்தது யாது?

முதலாமவன்:—அரசே, நேற்று இரவு எங்களுக்கு நேர்ந்த சம்பவத்தைத் தெரிவிக்க வந்தோம்.

இரண்டாமவன்:—என்னுடைய குடும்பமே அழிந்து விட்டது. (மேலேசொல்ல இயலாமல் நிற்கின்றான்.)

மூன்றாமவன்:—ஒரு கொள்ளைக்காரரது கூட்டம் எங்களை அலங்கோலம் பண்ணிவிட்டது. (அனைவரும் மீட்டும் கீழே விழுந்து கதறுகின்றனர்.)

மந்திரி:—(சேவகர்களைப் பார்த்து) இவர்களை அழைத்துப் போய் உணவு முதலிய கொடுத்து வேண்டிய உபசாரங்களைச் செய்து சமாதானம் பண்ணுங்கள். (குடிகளைப் பார்த்து) நீங்கள் இந்தச் சிறிய விஷயத்திற்கு இவ்வளவு தூரம் அஞ்சி நலியவேண்டாம். உங்களுடைய குறைகள் மிக விரைவில் நீக்கப்படும்.

(எல்லோரையும் சேவகர்கள் அழைத்துப் போகிறார்கள்.)

அரசர் :—(கோபத்துடன்) மந்திரீ, சற்றுமுன்னர்த்தானே நீங்கள் நமது ஆட்சியைப் பிரமாதமாகப் புகழ்ந்தீர்கள். புகழ்ந்த வாய் மூடுமுன் பழிச்சொல் கேட்கப்படுகின்றதே. இஃதென்ன விபரீதம்!

“மாநிலம் காவலன் ஆவான் மன்னுயிர் காக்குங்காலைத்
தான்அதனுக் கிடையூறு தன்னால்தன் பரிச னத்தால்
ஊனம்மிகு பகைத் திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறம்காப்பான் அல்லனோ?”

மந்திரி:—ஆம். அரசே, அதில் ஏதும் ஐயம் இல்லை. தங்களது ஆட்சியும் அம்முறைப்படியேதான் நடந்து வருகின்றது. சற்றுமுன் நான் புகழ்ந்து கூறியது வீண் அன்று.

அரசர் :—மந்திரீ, அஃது எங்ஙனம்? இதோ குறை கூறப் படுகிறதே.

மந்திரி:—ஆம். உண்மைதான். அரசே, ஆயினும் அவ்வாறு நம்முடைய குடிகளுக்குத் தீங்கு செய்த கூட்டத்தினரும், அவர்களது தலைவனும் நமது காவலர் தலைவரது சமர்த்தினால் பிடிக்கப்பட்டுச் சிறையில் இருக்கின்றனராம். துன்புற்ற குடிகள் மகிழ்வுற வேண்டி எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டனவாம். நாம் பேசிக்கொண்டிருக்கையில் வந்த இரண்டு கடிதங்கள் அவற்றைத் தெரிவிக்கின்றன. இவையே அக்கடிதங்கள்.

அரசர் :—(பெருமகிழ்வுற்று) மந்திரீ, உமது நிர்வாகத்திறம் மெச்சத் தக்கது. அன்புள்ள அரசனுக்குக் குடிகள் படும் துன்பம் துன்பத்தைக் கொடுக்குமல்லவா? நல்லது. இனிமேலே செய்யக் கூடியது யாது?

மந்திரி :—அரசே, அந்தக் கள்வர் தலைவனைத் தங்கள் முன்னாகவே விசாரணை செய்து தண்டிக்க வேண்டியதுதான்.

அரசர் :—ஆம். அதுவே சரி. இப்பொழுதே அவனை அழைத்து வருதல் நலமல்லவா ?

(மந்திரி 'அப்படியே' என்று கூறிக் காவலர் தலைவரை நோக்குகின்றார். சில காவலர்கள் சென்று கைதியாக்கப் பட்டிருக்கும் ராபர்ட் என்னும் கொள்ளைக்காரர் தலைவனை அழைத்துக் கொண்டு வருகிறார்கள்.)

மந்திரி:—(கள்வர் தலைவனைப் பார்த்து) நீ யாவன் ? யாது காரணம்பற்றி எம்முடைய குடிமக்களைத் துன்புறுத்துகின்றாய் ?

கள்வர் தலைவன்:—மந்திரீ, என்னைக் கேட்கும் தகுதி அரசருக்கே உண்டு. அவர் கேட்பின் நான் பதில் அளிக்க முடியும்.

மந்திரி:—அப்படியா. அது நியாயமற்றதாயிற்றே.

க-த:—இல்லை ; இல்லை. நானும் ஒரு தலைவன். அரசரும் தலைவர். ஆதலின் அது நியாயமானதே.

அரசர்:—ஐயா, கள்வர்தலைவரே, மந்திரியார் உம்மைக் கேட்கவேண்டாம். நானே கேட்கின்றேன்.

க-த:—அரசே, சந்தோஷமாக விடை தருவேன்.

அரசர்:—ஐயா, 'பொல்லாத கொள்ளைக்காரன்' என்று ஜனங்களால் சொல்லப்படும் 'ராபர்ட்' என்பவரா தாம் ?

க-த:—அரசே, எனது பெயர் 'ராபர்ட்' என்பதுதான். நான் பொல்லாத கொள்ளைக்காரன் ஆகமாட்டேன்; ஒரு போர் வீரனே ஆவேன்.

அரசர்:—ராபர்ட், என்ன ! போர்வீரனா ? வழிப்பறிசெய்வோன், கொலை செய்பவன், ஊரை அழிப்பவன்—இத்தகையினன் எவ்வாறு போர் வீரன் ஆவது ? இவையே உனது தொழிலாயின் உன்னைத் தண்டிப்பது எமது கடமையே.

க-த:—இறைவ, இவை என்னிடத்தில் இருக்கலாம். என்றாலும், நீர் எப்படி என்னைத் தண்டிப்பது? நான் ஒரு கைதி என்ற முறையில் இதைவிட அதிகமாகக் கூறவிரும்பவில்லை.

அரசர்:—ராபர்ட், அப்படியா. அங்ஙனமாயின் நீ கைதியில்லை; அனைத்தையும் அஞ்சாமற் சொல்.

[அரசன் காவலரைப் பார்க்கின்றான். காவலர் ராபர்ட்டின் விலங்குகளை அவிழ்க்கின்றனர். அவனும் ஓர் ஆசனத்தில் அமர்கின்றான்.]

க-த:—அரசே, தங்களது பெருந்தன்மைக்கு வந்தனம். தாங்களும் என்னிடத்திலே சாட்டப்படுகிற குற்றங்கள் அனைத்தையும் செய்திருக்கிறீர்கள்.

அரசர்:—ராபர்ட், எப்படி? நீ கூறுவது விளங்கவில்லை. விளக்கமாய்ச் சொல்.

க-த:—அரசே, 'தங்களது வெற்றி' என்று சொல்லப்படுவன எல்லாம் பல கொள்ளைகள், பல கொலைகள், பல ஊர் நாசம் இவற்றால் நிரம்பினவையே.

அரசர்:—ராபர்ட். ஆம். ஆனல், நான் மீட்டும் அக்குறைகளை நிவர்த்தி பண்ணி யிருக்கின்றேன்; எண்ணிறந்த நன்மைகளைச் செய்திருக்கின்றேன். நீ இன்று பிடிபட்டு வந்திருப்பதே அதற்குப் போதிய சான்று பகரும்.

க-த:—அரசே, நானும் பல ஏழைகளுக்கு உதவி யிருக்கின்றேன். என்னை அண்டினவர்களைக் காத்தும் வருகின்றேன்.

அரசர்:—(புன்னகை செய்து) ராபர்ட், உனது புத்திக் கூர்மையையும், உடல் வன்மையையும் நீ ஒரு வரம்புக்குட் பட்ட வழியில் செலவழிப்பாயானல் அவை பெரும் பயனைத் தருமே. உன்னுடைய செயல்கள் குற்றமானவை என்பதை நீ இன்னும் உணரவில்லையா?

க-த:—அரசே, அதிகம் கூறுவானேன். நம் இருவருடைய செயல்களும் குற்றம் நிரம்பியவையே. இதிற் சிறிதும் ஐயமின்று.

அரசர்:—ராபர்ட், நானும் குற்றவாளியா? உனது வியாக்கியானத்தின்படி சரிதான் போலிருக்கிறதே.

க-த:—அரசே, எனது மனத்திலே தோன்றியதை ஒளிக்காமற் சொன்னேன். நம்மை ஆண்டவனே காத்தருளல் வேண்டும்.

[அலெக்ஸாண்டரது மனம் மாறுகின்றது. ராபர்ட்டும் தனது நிலைமையை உணருகின்றான்.]

அரசர்:—ராபர்ட், இன்று முதல் நீர் நமது சேனைத் தலைவருள் ஒருவரானீர்.

[அன்று முதல் ராபர்ட் தன்னுடைய கூட்டத்தினருடன் அரசனது சேனையில் அமர்ந்து இன்புற்றான்.]

---

# 2. செய்யுட் பகுதி.

## 1. கடவுள் வாழ்த்து.

(பலசான்றோர்கள்.)

சிந்தா குலந்தீருஞ் செய்கருமங் கைகூடுஞ்
சந்தான மென்றுந் தழைத்தேறும்—பைந்தாமத்
தாணவயத் தாணமலைப் பாவையளித் தாணமகத்
தாணமுகத் தாணநினைத் தால். (1)

நானென் செயும்வினை தானென்
செயும்மெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன்
னேவந்து தோன்றிடினே. (2)

கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை
யுலாவு சடமே லுறையு—நிலாவை
வழியவார்த் தாலன்ன மாநீற்றூர் நாகங்
கழியவார்த் தார்நமக்கோர் காப்பு. (3)

ஆதித் தனிக்கோல மாஞ னடியவற்காச்
சோதித் தனித்தூணிற் றேன்றினுன்—வேதத்தின்
முன்னின்ருன் வேழ முதலே யெனவழைப்ப
வென்னென்ரு னெங்கட் கிறை. (4)

ஆய கலேக ளறுபத்து நான்கினேயு
மேய வுணர்விக்கு மென்னம்மை—தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர். (5)

வெள்ளேக் கலேயுடுத்து வெள்ளேப் பணிபூண்டு
வெள்ளேக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளே
யரியா சனத்தி லரசரோ டென்னேச்
சரியா சனத்துவைத்த தாய். (6)

மறைமுதற் கிளந்த வாயான்
மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி
யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாஷை
யனேத்தும்வென் ருரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை
யுண்ணினேந் தேத்தல் செய்வாம். (7)

---

## II. நீதிநெறி விளக்கம்.

(குமரகுருபரர்.)

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைக—ணீரி

லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று. (1)

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. (2)

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லா
ரவையஞ்சா வாகுலச் சொல்லு—நவையஞ்சி
யீத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. (3)

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினு
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. (4)

வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல். (5)

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க—சிற்றுளியாற்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். (6)

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
யம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா
மெற்றே யிவர்க்குநா மென்று. (7)

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப—தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலேக்கு. (8)

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டு
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல். (9)

கண்ணிற் சொலிச்செவியி னேக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினுந்—தண்ணளியான்
மன்பதை யோம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு. (10)

நட்புப் பிரித்தல் பகைநட்ட லொற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையு மையுறுத—றக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி. (11)

கண்ணேக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
வின்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு. (12)

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்
றூங்குங் களிறோ தயருறு—வாங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமா
லாருங் கிளேயோ டயின்று. (13)

உறுதி பயப்ப கடைபோகா வேனு
மிறுவரை காறு முயல்ப—விறுமுயிர்க்கு

மாயுண் மருந்தளித்த றீதன்று வல்லனபோ
லாவனவு முண்டு சில. (14)

உலையா முயற்சி களைகணு வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே—யுலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி. (15)

கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து—மேலுந்தாஞ்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை யாளப் படும். (16)

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சா
ரெவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
யருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். (17)

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும்—கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து. (18)

இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார்
கனியு மொழியுங் கடுவே—யனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும். (19)

பொய்குறளை வன்சொல் பயனிலவென் றிந்நான்கு
மெய்தாமை சொல்லின் வழுக்காது—மெய்யிற்
புலமைந்துங் காத்து மனமா சகற்று
நலமன்றே நல்லா றெனல். (20)

வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோ
னல்குரவே போலு நனிநல்ல—கொன்னே
யருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான். (21)

தெய்வ முளதென்பார் தீய செயப்புகிற்
றெய்வமே கண்ணின்று நின்றொறுக்குந்—தெய்வ
மிலதென்பார்க் கில்லைத்த மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன். (22)

வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின்—வஞ்சித்த
வெங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
யங்கங் குலைவ தறிவு. (23)

கற்றாங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப்—பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச்சென் றார். (24)

## III. தமயந்தியின் சுயம்வரம்.

(புகழேந்திப் புலவர்.)

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் றளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு. (1)

கோதை மடவார் குலவுமெய் யிற்றிமிர்ந்த
சீத களபச் செழுஞ்சேற்றால்—வீதிவாய்

மானக் கரிவழுக்கு மாவிந்த மென்றுளதோர்
ஞானக் கலைவாழ் நகர். (2)

ஓடாத தானை நளனென் றுளனெருவன்
பீடாருஞ் செல்வப் பெடைவண்டோ—டோ
முருகுடைய மாந்தர் முகநானைக்குந் தண்டா
ரருகுடையான் வெண்குடையா னங்கு. (3)

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் றனிக்காத்தான்—மாத
ரருகூட்டும் பைங்கிளியு மாடற் பருந்து
மொருகூட்டில் வாழ வுலகு. (4)

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—றேங்குவளைத்
தேனுடி வண்டு சிறகுலர்த்து நீர்நாடன்
பூநாடிச் சோலை புக. (5)

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
றூணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப—மாணிறத்தான்
முன்னப்புட் டோன்று முளரித் தலைவைகு
மன்னப்புட் டோன்றிற்றே யாங்கு. (6)

பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமன்
மேதிக் குலமேறி மென்கரும்பைக்—கோதிக்
கடித்துத்தான் முத்துமிழுங் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா வென்றான் பெயர்ந்து. (7)

அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் றிருமுன்னர் வைத்தலுமே—யன்ன
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு. (8)

அஞ்சன் மடவனமே யுன்ற னணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகா ணென்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். (9)

செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனியன்னம்—வெய்ய
வடுமாற்ற மில்லா வரசன்சொற் கேட்டுத்
தடுமாற்றந் தீர்ந்ததே தான். (10)

திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே யுன்ற
னிசைமுகந்த தோளுக் கிசைவாள்—வசையி
றமையந்தி யென்றோதுந் தையலாண் மென்றோ
ளமையந்தி யென்றோ ரணங்கு. (11)

எழுவடுதோண் மன்ன விலங்கிழையோர் தூண்டக்
கொழுநதியிற் சாய்ந்த குவளை—யுழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயு மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு. (12)

நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
வார்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீ
ழாளுமே பெண்மை யரசு. (13)

வீமன் றிருமகளின் மென்மாலை யுன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்—சேம
நெடுங்குடையா யென்றுரைத்து நீங்கியதே யன்ன
மொடுங்கிடையா டன்பா லுயர்ந்து. (14)

இவ்வளவிற் செல்லுங்கொ லிவ்வளவிற் காணுங்கொ
லிவ்வளவிற் காத லியம்புங்கொ—லிவ்வளவின்

மீளுங்கொ லென்றுரையா விம்மினான் மும்மதநின்
றாளுங்கோல் யானை யரசு. (15)

மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
வன்னம்போய்க் கன்னி யருகணைய—நன்னுதலுந்
தன்னுடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
யென்னுடல் சொல்லென்றா ளீங்கு. (16)

செம்மனத்தான் றண்ணளியான் செங்கோலான் மங்கையர்க
டம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கா
னுளனென்பான் வேந்த னுனக்கு. (17)

அறங்கிடந்த நெஞ்சு மருளொழுகு கண்ணு
மறங்கிடந்த திண்டோள் வலியுந்—திறங்கிடந்த
செங்கண்மா லல்லனேற் றேர்வேந்த ரொப்பரோ
வங்கண்மா ஞாலத் தவற்கு. (18)

வாவி யுறையு மடவனமே யென்னுடைய
வாவி யுவந்தளித்தா யாதியால்—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி யென்
பார்வேந்தன் பாவை பதைத்து. [றுரைத்தாள் (19)

பேரழகு சோர்கின்ற தென்னப் பிறைநுதன்மே
னீரரும்பத் தன்பேதை நின்றாளைப்—பாராக்
குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தர் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளு மணம். (20)

மங்கை சுயம்வரநா ளேழென்று வார்முரச
மெங்கு மறைகென் றியம்பினான்—பைங்கமுகின்
கூந்தன்மேற் கங்கைக் கொழுந்தோடு நன்னாடன்
வேந்தர்மேற் றூதோட விட்டு. (21)

புள்ளுறைஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளு
முள்ளும் புறமு மினிதுறைந்தார்—தெள்ளரிக்கட்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்றன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு. (22)

சடைச்செந்நெல் பொன்விளைக்குந் தன்னுடு பின்னுக்
கடற்றுனை முன்னுகக் கண்டா—னடற்கமைந்த
வில்லியரும் பொற்றும வீமன் றிருமகளா
நல்லுயிரும் வாழு நகர். (23)

நெற்றித் தனிக்கண் ணெருப்பைக் குளிர்விக்குங்
கொற்றத் தனியாழ்க் குலமுனிவ—னுற்றடைந்தான்
றேனுடுந் தெய்வத் தருவுந் திருமணியும்
வானுடுங் காத்தான் மருங்கு. (24)

வீமன் மடந்தை மணத்தின் விரைதொடுத்த
தாமம் புனைவான் சயம்வரத்து—மாமன்னர்
போயினு ரென்றுன் புரந்தரற்குப் பொய்யாத
வாயினுன் மாதவத்தோர் மன். (25)

மால்வரையை வச்சிரத்தா லீர்ந்தானும் வானவருங்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்—சால்புடைய
விண்ணுடு நீங்கி விதர்ப்பன் றிருநகர்க்கு
மண்ணுடு நோக்கி மகிழ்ந்து. (26)

பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபாற் போயினதன்
சிந்தை கெடுத்ததனைத் தேடுவான்—முந்தி
வருவான்போற் றேர்மேல் வருவானைக் கண்டார்
பெருவானிற் றேவர் பெரிது. (27)

காவற் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்கோ
னேவற் றெழிலுக் கிசையென்று—னேவற்கு

மன்னவனு நேர்ந்தான் மனத்தினுன் மற்றதனை
யின்னதென வோரா திசைந்து. (28)

செங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
யெங்களிலே சூட்ட வியல்வீமன்—மங்கைபாற்
றாதாக வென்றனைத் தோகையைத்த னுகத்தாற்
கோதாக வென்றனக் கோ. (29)

இசைமுகந்த வாயு மியநெரிந்த நாவுந்
திசைமுகந்தா லன்ன தெருவும்—வசையிறந்த
பொன்னுடு போந்திருந்தாற் போன்றதே போர்விதர்ப்ப
நன்னுடர் கோமா னகர். (30)

காவல் கடந்தெங்கள் கன்னிமா டம்புகுந்தா
யாவனே விஞ்சைக் கிறைவனே—தேவனே
உள்ளவா சொல்லென்று ளுசற் குழைமீது
வெள்ளவா னீர்சோர விட்டு. (31)

தீராத வாசைப் பெருக்கைத்தன் செம்மையெனு
நீரா லவித்துக் கொடுநின்று—வாராத
பொன்னுட ரேவலுடன் போந்தவா சொல்லித்த
னன்னுடுஞ் சொன்னு னளன். (32)

இயமரநின் றூர்ப்ப வினவளைநின் றேங்க
வயமருதோண் மன்னு வகுத்த—சுயம்வரந்தா
னின்பொருட்டா லென்று நினைகென்று னீள்குடையான்
றன்பொருட்டா னைவா டளர்ந்து. (33)

வானவர்கோ னேவல் வழிச்சென்று வாணுதலைத்
தானணுகி மீண்டபடி சாற்றவே—தேன்முரலும்
வண்டார் நளன்போந்து வச்சிராயு தற்றொழுதான்
கண்டா ருவப்பக் கலந்து. (34)

விண்ணவர்த மேவனுடன் வீமன் றிருமகள்பா
னண்ணு புகழ்நளனு நன்குரைத்த—பெண்ணணங்கின்
வன்மொழியுந் தேவர் மனமகிழத் தான்மொழிந்த
மென்மொழியுஞ் சென்றுரைத்தான் மீண்டு. (35)

அங்கி யமுதநீ ரம்பூ வணியாடை
யெங்குநீ வேண்டினைமற் றவ்விடத்தே—சங்கையறப்
பெற்று யெனவருண னுகண் டலன்றருமன்
மற்றேனு மீந்தார் வரம். (36)

அங்கவர்கள் வேண்டும் வரங்கொடுக்கப் பெற்றவர்க
டங்களொடுந் தார்வேந்தன் சார்ந்தனன்மேன்—மங்கை
வயமருவு கின்ற மனக்கா வலர்க்குச்
சயமரந்தான் கண்டதோர் சார்பு. (37)

முரசெறிந்த நாளேழு முற்றியபின் கொற்ற
வரைசெறிந்த தோண்மன்னர் வந்தார்—விரைசெறிந்த
மாலை துவள முடிதயங்க வால்வளையுங்
காலை முரசுங் கலந்து. (38)

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காண்—மின்னிறத்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப் [துச்
பொய்கைவாய்ப் போவதே போன்று. (39)

மன்னர் குலமும் பெயரும் வளநாடு
மின்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினு
டேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. (40)

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த

மாசிலாப் பூங்குழலாண் மற்றவரைக் காணுநின்
றாசலா டுற்று ளுளம். (41)

மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியா ளுகிற் கடிமாலை—யன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட வருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. (42)

கண்ணிமைத்த லாலடிகள் காசினியிற் றோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலா—லெண்ணி
நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே யன்னு
ளறிந்தா ளான்றன்னை யாங்கு. (43)

விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினுள் பொன் (44)

திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே—யொண்டாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணுள்
பூமாலை பெற்றிருந்த போது. (45)

கனிமொழிந்த நாளிற் கடிமணமுஞ் செய்தா
ரணிமொழிக்கு மண்ண லவற்கும்—பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் னறைப்புக்கார்
மற்றேவ ரொவ்வார் மகிழ்ந்து. (46)

---

## IV. பணிதற் பெருமை.

---

(குருபாததாசர்.)

வேங்கைகள் பதுங்குதலு மாமுகி லொதுங்குதலும்
விரிசிலை குனிந்தி டுதலும்

மேடம தகன்றிடலும் யானைக ளொடுங்குதலும்
வெள்விடைக டுள்ளி விழலும்
மூங்கில்கள் வணங்குதலு மேலவ ரிணங்குதலு
முனிவர்க ணயந்து கொளலும்
முதிர்படை யொதுங்குதலும் வினைஞர்க ளடங்குதலு
முதலினர் பயந்தி டுதலும்
ஆங்கரவு சாய்குதலு மகிழ்மல ருலர்ந்திடலு
மாயர்குழல் சூடி படலு
மம்புவியி லிவைகாரி யங்களுக் கல்லாம
லதனு லிளைப்பு வருமோ
மாங்கனிக் காவரனை வலமது புரிந்துவளர்
மதகரிக் கிளைய முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே.

---

## V. தனிப் பாக்கள்.

காணுப் மனனே கடவுணமக் கிப்பிறப்பு
மேணு ரிடம்பொருண்மற் றெல்லாமுங்—கோணுமே
தக்கவா றீந்தளித்தான் றண்ணளிபூண் டாதலினுன்
மிக்கவறஞ் செய்ய விரும்பு. (1)

உயர்வாம் நிலத்தொடு நீரே வுயிர்ப்பே
செயிர்தீர் மனனே செயலே— பயந்தீர்
நிலையே வுடனுேப் நிகழா வுணவே
நலமார் சுகவழியாம் நாடு. (2)

உள்ளப் பகைவிலக்கு மோயாக் கவனீக்குங்
கள்ளத் தனமனைத்துங் கட்டழிக்கும்—வெள்ளப்

பெருக்கொத்து நல்லிணக்கம் பேரருளைச் சேர்க்குந்
தருக்ககற்றுந் தக்கவெலாந் தந்து. (3)

நல்லன நாட னலம்புரித றுணூரு
மல்லன நீக்கி யருள்புரிதல்—செல்லிடத்துக்
கேளல் லவர்க்குறாஉங் கேட்டிலுநன் ருற்றலிவை
யாளின் னறிவுடைமை யாம். (4)

உற்றதனை யுண்டிங் குறுதவைக் கூறரு
தற்றமறிந் தண்ண லடிபோற்றி—யற்றவரோ
டின்பமா யிவ்வுலகத் திண்டி யிருத்தலே
துன்பந் துடைக்குந் துறை. (5)

சொல்லாதே யஞ்சாதே துன்பிலுளங் கன்றுதே
தள்ளாதிஃ தென்று தவருதே—வல்லனபின்
மாற்றுதே தட்டாதே மண்டி வெகுளாதே
யாற்றலிடை யூறில் லதர். (6)

உண்மை கடைப்பிடித் துண்மைக் குதவிமனத்
திண்மை செறிந்து சிவத்தொன்றி—வண்மைத்
திறனுற்று நன்றே செகத்தாக்கு முள்ளத்
துறவிக்கு வேந்தன் றருப்பு. (7)

அழியாப் பொருளை யடைதலுய ராசான்
வழியாய்ந் தடங்கி மகிழ்தல்—பழியாத்
தருமத்தை யாய்த றரன்மா ணவர்தம்
பருவத்தின் மாண்பாகும் பார். (8)

ஊரா முதலிலெழுத் தோரிரண்டு முன்னிலையேற்
சீராரும் போர்வையாஞ் செந்தமிழ்சேர்—பேராருஞ்
சிந்தா பணியே திகழ்தொழுவ நான்கின்றே
லெந்தா யிதன்பே ரெது. —(விருதுப்பட்டி.) (9)

# VI. பாரதத் தாய்.

(ஒருவகைக் கும்மி.)

177801
-600 008.
B 031,6(6) N27

பாரதத் தாயின் மலர்ப்பதங்கள் தம்மைப்
பன்னிப் பாவிப் பணியப் பதம்
பாடக் கணபதி யான பரம்பொருள்
பாதம் நமக்கொரு பற்றுமே (1)

வடக்கில் உயர்ந்த இமய மலையையும்
மற்றைக் கிழக்கில் தெற்கில் மேற்கில்
வளைகடல் தம்மையுங் கொண்டுயர் மாபுகழ்
வாய்த்தனை பாரதத் தாய் நீயே. (2)

அத்தகை யோய்உன் அருள்நிலை யாமென்ன
ஆன்ற பெருமைக் கங்கை பொருநை
ஆதிய ஆறுகள் தம்மைப்பெற் றோங்கி
அழகு நிறைந்தனை அன்னாய்நீ. (3)

கதிரவ னார்தம் கிரணங்கள் செல்லும்
கவினுல கோர்கண் களிக்கப் பல
காட்சிகள் தம்மை இயற்கையிற் பெற்றுக்
கனிந்துயர்ந் தாய்சிறந் தாய்அனைநீ. (4)

வேதம்தந் தாய்பல வேறு வகைப்பட்ட
வித்தைதந் தாய்நல்ல சுத்தம் தந்தாய்
வேதனை நீங்கி விடுதலை பெற்றுய்ய
வேண்டிய மாக்கம்தந் தாய்அனைநீ. (5)

குழந்தைகள் முப்பது கோடிபெற் றுப்உயர்
கொள்கைகள் தம்மைக் குவலயத்தோர்

கொள்ளக் கொடுக்கும் படிஅளித் தாய்பல
குணநிதி யாகும் குருமாரை. (6)

மனுமுத லாம்பல மன்னவரை மெச்சும்
மந்திரி மார்தமைத் தந்திரரை
மாபுகழ்க் கற்புடை மங்கைய ரைத்திகழ்
மாநிலம் போற்றத்தந் தாய்அன்னையே. (7)

பிரபுல்ல சந்திர ராய்ஓர் அறிவுயிர்
போற்றும் ஜகதீச சந்திர போஸ்
புலமை சிறந்த ரவீந்திர நாதர்கோ
பாலகிருஷ்ணன் முதற் புண்ணியர்கள். (8)

தம்மையும் தந்தனை எம்மை வளர்த்தனை
தாம் வருந்திப் பிறர்க்கே உதவும்
சால்பின் மிகுத்த தலைவர்கள் தம்மையும்
தந்தனை பாரதத் தாய்வாழி. (9)

# (3) இலக்கணப் பகுதி.

## (1) எழுத்தியல்.

### 1. எழுத்து.

மொழிக்கு முதற் காரணமும், அணுத்திரளின் காரியமும் ஆகிய ஒலி எழுத்து எனப்படும். இது, செவிப்புலனால் உணரப்படுவது. இதனைக் கட்புலனால் அறிதற்குத் துணையாக எழுதப்படும் அடையாளம் வரிவடிவு எழுத்தாம்.

முதலெழுத்து, சார்பெழுத்து என எழுத்து இருவகைப் படும். உயிரெழுத்து, மெய்யெழுத்து என்ற இரண்டும் முதலெழுத்துக்களாம். உயிர்மெய், ஆய்தம், குற்றியலுகரம், முற்றியலுகரம் முதலியன சார்பெழுத்துக்களாம்.

#### உயிரெழுத்து.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பன்னிரண்டும் உயிரெழுத்துக்களாம். குற்றெழுத்து, நெட்டெழுத்து என இருவகைப்படும் உயிரெழுத்துக்கள்.

அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குற்றெழுத்துக்களாம். குறுகிய ஓசையை உடைய எழுத்து குற்றெழுத்தாம்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழும் நெட்டெழுத்துக்களாம். நீண்ட ஓசையை உடைய எழுத்து நெட்டெழுத்தாம்.

#### சுட்டெழுத்து.

அ, இ, உ என்ற மூன்று எழுத்துக்களும் சொல்லுக்கு முதலில் அகத்துறுப்பாகவேனும் புறத்துறுப்பாகவேனும் நின்று சுட்டுப் பொருளைத் தருமாயின் சுட்டெழுத்துக்களாம். சுட்டுதல்—குறித்துக் காட்டுதல்.

சொல்லின் உள்ளாகவே ஓர் எழுத்தாக நின்று சுட்டுப்பொருளைத் தருவது அகச்சுட்டு. சொல்லுக்கு வெளியே நின்று சுட்டுப் பொருளைத் தருவது புறச்சுட்டு. அவன், இவன், உவன்-அகச்சுட்டு. அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன்-புறச்சுட்டு.

அகரம் தூரத்திலுள்ள பொருளையும், இகரம் சமீபத்திலுள்ள பொருளையும், உகரம் நடுவிலுள்ள பொருளையும் குறித்துக் காட்டும்.

## வினவெழுத்து.

ஆ, எ, ஏ, ஓ, யா என்னும் ஐந்து எழுத்துக்களும் வினப் பொருளை அறிவித்து நிற்கும்பொழுது வினவெழுத்துக்களாம். வினவுதல்—கேள்வி கேட்டல்.

எ, யா என்பன மொழிக்கு முதலிலே அகத்துறுப்பாகவும், புறத்துறுப்பாகவும் நின்று வினப்பொருளைத் தரும்.

எவன், யாவன்—அகவின. எவ்வீடு, யாங்ஙனம்—புறவின.

ஆ, ஓ என்பன மொழிக்கு ஈற்றிலே புறத்துறுப்பாக நின்று வினப்பொருளைத் தரும்.

முருகனா, முருகனோ—புறவின.

ஏ என்பது சொல்லுக்கு முதலில் அகத்துறுப்பாகவும், சொல்லுக்கு ஈற்றில் புறத்துறுப்பாகவும் நின்று வினப்பொருளைத் தரும்.

ஏவன்—அகவின. முருகனே—புறவின.

## மெய்யெழுத்து.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் பதினெட்டும் மெய்யெழுத்துக்களாம்.

வல்லெழுத்து மெல்லெழுத்து, இடையெழுத்து என மூன்று வகைப்படும் மெய்யெழுத்துக்கள்.

வலிய ஓசையுடன் உச்சரிக்கப்படுவது வல்லெழுத்து. மெல்லிய ஓசையுடன் உச்சரிக்கப்படுவது மெல்லெழுத்து. நடுத்தரமான ஓசையுடன் உச்சரிக்கப்படுவது இடையெழுத்து.

க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறு எழுத்துங்களும் வல்லெழுத்துக்களாம்.

ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறு எழுத்துக்களும் மெல்லெழுத்துக்களாம்.

ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறு எழுத்துக்களும் இடையெழுத்துக்களாம்.

### இனவெழுத்து.

அகரத்துக்கு ஆகாரமும், இகரத்துக்கு ஈகாரமும், உகரத்துக்கு ஊகாரமும், எகரத்துக்கு ஏகாரமும், ஐகாரத்துக்கு இகரமும், ஒகரத்துக்கு ஓகாரமும், ஔகாரத்துக்கு உகரமும்; ககரத்துக்கு ஙகரமும், சகரத்துக்கு ஞகரமும், டகரத்துக்கு ணகரமும், தகரத்துக்கு நகரமும், பகரத்துக்கு மகரமும், றகரத்துக்கு னகரமும் இனவெழுத்துக்களாம். இடையெழுத்துக்கள் ஆறும் ஓரினமாம்.

### உயிர்மெய்யெழுத்து.

பதினெட்டு மெய்யெழுத்துக்களின் மேலும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் ஏறுதலால் உண்டாகும் இருநூற்றுப் பதினாறு எழுத்துக்களும் உயிர்மெய்யெழுத்துக்களாம்.

க்+அ=க. ன்+ஔ=னௌ. இவற்றுள் க, னௌ என்பன உயிர்மெய்யெழுத்துக்கள். இவ்வாறே பாக்கியான உயிர்மெய்யெழுத்துக்களையும் அறிந்துகொள்க.

### ஆய்தவெழுத்து.

உயிர்க் குற்றெழுத்து உயிர்மெய்க் குற்றெழுத்து ஆகிய குற்றெழுத்துக்களுக்கும்; உயிர்மெய் வல்லெழுத்துக்கும் நடுவில் வரும் மூன்று புள்ளி வடிவினை உடையதாகிய ஓர் எழுத்து ஆய்தவெழுத்தாம்.

அஃது, கஃசு என்பன போன்றவற்றுள் நடுவில் இருப்பன ஆய்தவெழுத்துக்கள்.

## குற்றியலுகரம்.

உகரம் மாத்திரையின் சுருக்கத்தாலும், இயல்பாலும் குற்றியலுகரம், முற்றியலுகரம் என இருவகைப்படும்

ஒரு குறிலிலைலும் இணைந்துவரும் இரண்டு குறில்களிஞலும் ஆக்கப்படாத மொழியீற்று வல்லின மெய்யின் மேல் ஏறிய உகரம் குற்றியலுகரம் எனப்படும்.

அஃது ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தை நோக்கி நெடிற்ருெடர், உயிர்த்தொடர், வன்ருெடர், மென்ருெடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர் என அறுவகையாம்.

ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து உயிரும் உயிர்மெய்யுமாகிய நெடில்களுள் ஒன்ருகவரின் அது நெடிற்ருெடராம்.

ஆகு, காசு, பாடு, ஓது, காபு, ஏறு.

ஒரு மொழியின் ஈற்றயலெழுத்துத் தனிநெடி லாகாமல் உயிரும் உயிர் மெய்யுமாகிய குறில்நெடில்களுள் ஒன்ருகவரின் அஃது உயிர்த்தொடராம்.

அலகு, அரைசு, குருடு, தனது, மரபு, களிறு.

ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து வல்லினமாக வரின் அது வன்ருெடராம்.

சுக்கு, கச்சு, பாட்டு, போத்து, பார்ப்பு, பற்று.

ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து மெல்லினமாக வரின் அது மென்ருெடராம்.

சங்கு, நெஞ்சு, வண்டு, வந்து, நம்பு, கன்று.

ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து இடையினமாக வரின் அஃது இடைத்தொடராம்.

செய்து, பல்கு, சார்பு, தெள்கு, போழ்து.

ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து ஆய்தமாக வரின் அஃது ஆய்தத்தொடராம்.

எஃகு, கஃசு, பஃது, கஃறு.

நெடிற்றொடர்க் குற்றியலுகர மொழிகளெல்லாம் ஈரெழுத்துக்களை உடையன. மற்றையாவும் இரண்டுக்குமேற்பட்ட எழுத்துக்களை உடையன.

### முற்றியலுகரம்.

தனித்தும், தனிக்குறிலைச் சேர்ந்தும் வரும் வல்லின மெய்களின்மேலும், மெல்லின இடையின மெய்களின்மேலும் வரும் உகரம் முற்றியலுகரமாம்.

கு, து; நடு, பசு; தாணு, கதவு.

### மாத்திரை.

கண்ணிமைப் பொழுதும் கைநொடிப்பொழுதும் மாத்திரைக்கு அளவாம்.

நெட்டெழுத்துக்கு மாத்திரை இரண்டு; குற்றெழுத்துக்கு மாத்திரை ஒன்று; மெய்யெழுத்துக்கும், குற்றியலுகரத்துக்கும், ஆய்தத்துக்கும் தனித்தனி மாத்திரை அரையாம்.

உயிர் மெய்க்கு மெய்ம்மாத்திரை ஒழிய ஏறிய உயிர் மாத்திரையே மாத்திரையாம்.

பண்டமாற்றிலும், விளியிலும், இசையிலும், புலம்பலிலும் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் தமக்குச் சொன்ன அளவைக் கடந்து நீண்டொலிக்கும்.

### மொழிமுதல் எழுத்துக்கள்.

உயிரெழுத்துப் பன்னிரண்டும்; க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ என்னும் ஒன்பது உயிர்மெய்யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

உயிர்மெய் யெழுத்துக்களில் ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாக வருதலின் மெய்யெழுத்துக்கள் மொழிக்கு முதலில் வருமாறு காண்க.

ஒன்பது மெய்களிலே க, ச, த, ந, ப, ம என்னும் இவ்வாறு மெய்களும் பன்னிரண்டு உயிர்களோடுங்கூடி மொழிக்கு முதலாகும்.

வகரமெய் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்கிற எட்டு உயிரெழுத்துக்களோடும் மொழிக்கு முதலில் வரும்.

யகரமெய் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்கிற ஆறு உயிரெழுத்துக்களோடும் மொழிக்கு முதலில் வரும்.

ஞகரமெய் அ, ஆ, இ, எ, ஒ என்கிற ஐந்துஉயிரெழுத்துக்களோடும் மொழிக்கு முதலில் வரும்.

### மொழியிறுதி எழுத்துக்கள்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பதினோருயிரும்; ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்கிற பதினொரு மெய்களுமாகிய இருபத்திரண்டெழுத்துக்களும் மொழிக்கு இறுதியில் வரும்.

### போலி.

சில சொற்களில் ஒரெழுத்து இருக்குமிடத்து வேறோரெழுத்து வருதலுமுண்டு. அவை போலி யெனப்படும்.

அவற்றுள் இரண்டு குறில்களை அடுத்த அஃறிணைப் பெயரின் இறுதியிலிருக்கிற மகரத்துக்கு னகரம் வரும்.

பலம், பலன்; முகம், முகன்.

அகரத்திற்கு முன் இகரமும், யகரமும் தனித்தனி வந்தால் ஐகாரத்தை ஒத்தொலிக்கும்

வைத்தியன், வயித்தியன் ; வையம், வய்யம்.

அகரத்துக்கு முன் உகரமும் வகரமும் தனித்தனி வந்தால் ஔகாரத்தை ஒத்து ஒலிக்கும்.

ஔவை, அவ்வை.

சில சொற்களின் முதலில் நகரத்துக்கு ஞகரம் போலியாக வரும்.

நாயிறு, ஞாயிறு; நயம், ஞயம்.

சில சொற்களின் இடையில் உள்ள தகரத்துக்குச் சகரம் போலியாக வரும்.

பித்து, பிச்சு ; வைத்த, வைச்ச.

சில சொற்களின் இடையில் நகர தகரங்களுக்கு ஞகர சகரங்கள் முறையே போலியாகும். அச்சொற்களின் முதலில் ஐகாரம் இருக்கின் அதற்கு அகரம் போலியாக வரும்.

உய்ந்தனன், உய்ஞ்சனன்; நீந்தினன், நீஞ்சினன். ஐந்து, அஞ்சு; மைந்தன், மஞ்சன்.

தொடர்மொழி ஐகாரத்தின்கீழ் நின்ற நகரத்துக்கு ஞகரம் போலியாம்.

ஐந்நூறு, ஐஞ்ஞூறு.

சில சொற்களின் ஈற்று லகரத்துக்கு ரகரமும், சில குற்றியலுகரங்களுக்கு அர் என்பதும் போலியாம்.

பந்தல், பந்தர்; சாம்பல், சாம்பர். சுரும்பு, சுரும்பர்; வண்டு, வண்டர்; சிறகு, சிறகர்; இடக்கு, இடக்கர்.

## (2) பதம்.

எழுத்துக்கள் தனிமையாகவாவது, இரண்டு முதலாகத் தொடர்ந்தாவது ஒரு பொருளைத் தந்தால் பதமாகும். பதம்—மொழி-சொல்.

அப்பதம் பகாப்பதம், பகுபதம் என இரண்டு வகைப்படும்.

### பகாப்பதம்.

பகுப்பதால் பகுதி, விகுதி முதலிய பயன் இல்லாமல் ஒரு பொருளைத் தருவது பகாப்பதமாம்.

அது பெயர்ப்பகாப்பதம், வினைப்பகாப்பதம், இடைப் பகாப்பதம், உரிப்பகாப்பதம் என நான்கு வகைப்படும்.

மண் பெயர்ப்பகாப்பதம்; உண் வினைப்பகாப்பதம்; மற்று இடைப்பகாப்பதம்; நனி உரிப்பகாப்பதம்.

## பகுபதம்.

பகுதி, விகுதி முதலாகப் பகுக்கப்படும் இயல்பினை யுடைய சொல் பகுபதமாம்.

பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் எனப் பகுபதம் இரண்டு வகைப்படும். அவற்றுள், வினைப்பகுபதம் தெரிநிலை வினைப்பகுபதம், குறிப்புவினைப் பகுபதம் என இருவகைப் படும்.

பொன்னன்-பெயர்ப்பகுபதம். நடந்தான்-தெரிநிலை வினைப்பகு பதம். பெரியன்-குறிப்பு வினைப் பகுபதம்.

## பகுபத உறுப்புக்கள்.

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனப் பகுபத உறுப்புக்கள் ஆறாகும். என்றாலும் பகுதி, விகுதி என்ற இரண்டு முதலிய உறுப்புக்களினாலும் பகுபதம் முடிவு பெறும்.

கூன் + அன் = கூனன். அறி + ஞ் + அன் = அறிஞன். குழை + ய் + அன் = குழையன். குழை + ய் + இன் + அன் = குழையினன் என்பன பெயர்ப் பகுபதங்களாம்.

கேள் + ஆய் = கேளாய். உண் + ட் + ஆன் = உண்டான். உண் + ட் + அன் + அன் — உண்டனன். படி + த் + த் + அன் + அன் = படித்தனன். நட + த் + த் + அன் + அன் = நடத்தனன் — நடந்தனன். (இது முதலில் ஐந்து உறுப்புக்களால் ஆகிச் சந்தியால் வந்த தகரவொற்று நகரவொற்றாகி மெலித்தல் விகாரத்தைப் பெற்று நடந்தனன் என்று ஆகும்.) இவை வினைப்பகுபதங்களாம்.

## பகுதி.

பகுபதங்களின் முதலில் நிற்கும் பகாப்பதங்கள் பகுதிகளாம்.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறுவகைப் பெயர்ச் சொற்களும்; சிறுபான்மை சுட்டிடைச் சொற்களும்; வினாவிடைச் சொற்களும்; பிற, மற்று முதலிய வேறு இடைச்சொற்களும் பெயர்ப் பகுபதங்களுக்குப் பகுதிகளாகவரும்.

பொன்னன், ஊரன், வேனிலான், கண்ணன், கரியன், கொல்லன்; அவன்; எது; மற்றவன் எனவரும்.

நட, வா, மடி, சீ, விடு, கூ, வை, நொ, போ, வௌ, உரிஞ், உண், தின், தேய், பார், செல், வாழ், கேள் இப்பத்தொன்பது ஈற்றினை யுடையனவும், பிறவும் தெரிநிலைத் தன்வினைப் பகுதிகளாம்.

மேற்சொன்ன பகுதிகளின்மேல் வி, பி, து, சு என்கிற நான்கு விகுதிகளும் வந்தாற் பிறவினைப் பகுதிகளாம்.

கொல்வி, நடப்பி, நடத்து, பாய்ச்சு எனவரும்.

சில பகுதிகளின் இடையிலிருக்கும் மெல்லொற்று வல்லொற்றாகத் திரிதலானும், நடுவில் ஓரொற்றுத் தோன்றுதலானும் பிறவினையாவதும் உண்டு.

எழும்பு—எழுப்பு; உருகு—உருக்கு எனவரும்.

## விகுதி.

பகுபதங்களின் ஈற்றிலே நிற்கும் இடைப்பகாப்பதங்கள் விகுதிகளாம்.

அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், அ, ஆ, ஐ, ஏன், அல், அம், ஆம், எம், ஏம், ஓம், க, இய, உம், இ, உ, தல், கை, பு, வி, உள், தி, சி, ஆய், இர், ஈர், மான், கள், தை, பி, ய், ள்,

ன், ஆல், மல், மே, கால், றி, ற, வை, பாடு, கு, மை, காடு இவ் வைம்பதும், பிறவும் விகுதிகளாம்.

அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, அ, ஆ, ஐ, ஆய், இர், ஈர், என், அம், ஆம், எம், ஓம், உம், க இவ்விருபதும் பிறவும் வினைமுற்று விகுதிகளாம்.

நடந்தனன், நடந்தான், நடந்தனள், நடந்தாள், நடந்தனர், நடந்தார், நடந்தது, நடந்தன, நடவா, நடந்தனை, நடந்தாய், நடந் தனிர், நடந்தீர், நடந்தேன், நடந்தனம், நடந்தாம், நடந்தேம், நடந் தோம், நடக்கும், நடக்க எனவரும்.

அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, து, இ, மார் மன், மான், கள், வை, கை, பி, ன், ள், ர் இப்பத்தொன்பதும் பெயர் விகுதிகளாம்.

குழையன், வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், குழையன, யாது, பொன்னி, தேவிமார், வடமன், கோமான், கோக்கள், அவை, தங்கை, தம்பி, பிறன், மகள், பிறர் எனவரும்.

அ, உம் என்ற இரண்டும் பெயரெச்ச விகுதிகளாம்.

வந்த, வருகின்ற; வரும்.

உ, இ, ய், அ, கு, ன், ஆல், கால், மல், மே, து, றி இப் பன்னிரண்டும், பிறவும் வினையெச்ச விகுதிகளாம்.

நடந்து, ஓடி, போய், நடக்க, உண்ணற்கு, நடக்கின், நடந் தால், நடந்தக்கால், உண்ணாமல், உண்ணாமே, அல்லது, அன்றி என வரும்.

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, மை, து இவை பதினேழும், பிறவும் தொழிற் பெயர் விகுதிகளாம்.

நடத்தல், ஆடல், வாட்டம், கொலே, வருகை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, உணர்ச்சி, கல்வி, விக்குள், சாக்காடு, கோட்பாடு, நடவாமை, வருவது எனவரும்.

மை, ஐ, பு, கு, றி, று, அம், பம், நர் இவை ஒன்பதும் பண்புப் பெயர் விகுதிகளாம்.

நன்மை, தொல்லே, நண்பு, நன்கு, நன்றி, நன்று, நலம், ஒட்பம், நன்னர் என வரும்.

இ, ஐ, அம் ஆகிய இம்மூன்றும் அலரி, பறவை, எச்சம் என வினைமுதற் பொருளையும்; ஊருணி, தொடை, தொல் காப்பியம் எனச் செய்யப்படு பொருளையும்; மண்வெட்டி, பார்வை, நோக்கம் எனக் கருவிப் பொருளையும் உணர்த்தும்.

கொள் தற்செயலில் வரும் விகுதியாம்.

அடித்துக்கொள்.

## இடை நிலே.

பெயர்ப் பகுபதத்தைப் பகுதி விகுதியாகப் பிரிக்கும் போது நடுவில் யாதேனும் ஒரெழுத்திருந்தால் அது பெயர்ப் பகுபத இடைநிலே யென்று சொல்லப்படும்.

வலேச்சி, வலேஞன் இவைகளில் சகரமும், ஞகரமும் இடைநிலே யாக வந்தன.

இவற்றைப் பெயரிடைநிலே யென்றலும் உண்டு.

வினைப்பகுபத இடைநிலேகள் ஒன்பதாம்.

த், ட், ற், இன் இந் நான்கும் இறந்த காலத்தைக் காட்டும் இடைநிலேகளாம்.

படித்தான், உண்டான், சென்றான், போயினான் எனவரும்.

ஆநின்று, கின்று, கிறு இம்மூன்றும் நிகழ்காலத்தைக் காட்டும் இடைநிலேகளாம்.

உண்ணாநின்றான், உண்கின்றான், உண்கிறான் எனவரும்.

ப், வ் இவ்விரண்டும் எதிர்காலத்தைக் காட்டும் இடைநிலேகளாம்.

நடப்பான், வருவான் எனவரும்.

### சாரியை.

பதத்தோடு பதமும் விகுதியும் வேற்றுமை உருபுகளும் புணரும்போது அவைகளைச் சார்ந்துவரும் இடைச்சொற்கள் சாரியைகளாம்.

### சந்தி.

தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூன்று புணர்ச்சி விகாரங்களும் சந்திகளாம்.

### விகாரம்.

வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என்பன விகாரங்கள் எனப்படும். இவை செய்யுள் வழக்கில் வருவன.

---

## (2) சொல்லியல்.

---

## 1. பொது.

இருதிணை ஐம்பாற் பொருள்களை மூன்றிடத்தும் வெளிப்படையாகவேனும் குறிப்பாகவேனும் உணர்த்துவது சொல் எனப்படும்.

### திணை.

உயர்திணை அஃறிணை எனத் திணை இரண்டு வகைப்படும்.

*திணை=குலம்; ஜாதி. உயர்வாகிய திணை உயர்திணை. உயர்வல்லாத திணை அஃறிணை; அல்+திணை=அஃறிணை.*

மக்கள் தேவர் நரகர் உயர்திணை; மற்ற உயிருள்ளனவும் இல்லாதனவுமான எல்லாம் அஃறிணை.

*மனிதன், இந்திரன், நரகன்; விலங்கு, பறவை, மரம், கல்.*

உயர்திணைக்குரிய இம்மூவகையாருடைய உடம்பையும்

உயிரையும் வெவ்வேருகக் கூறுமிடத்து அவையும் அஃறிணையாம்.

உடம்பு பருத்தது, உயிர் வந்தது.

கடவுளை உயர்திணையாகவும் அஃறிணையாகவும் சொல்லலாம்.

கடவுள் எங்கும் இருக்கிருர் ; கடவுள் எங்கும் இருக்கிறது.

## பால்.

பால் என்பது பகுப்பு அல்லது பிரிவு எனப் பொருள்படும். அஃது இங்கே திணையின் பகுப்பாகும். அஃது ஆண்பால் பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து வகைப்படும்.

இராமன், சீதை, அரசர், அது, அவை.

ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற இம் மூன்றும் உயர்திணைக்குரியன. ஒன்றன்பால், பலவின்பால் இவ்விரண்டும் அஃறிணைக் குரியன.

ஆணும் பெண்ணும் அல்லாத பேட்டை ஆண் தன்மை மிகுந்திருந்தால் ஆணுகவும், பெண் தன்மை மிகுந்திருந்தால் பெண்ணுகவும் சொல்லலாம். இவ்விருவகைப் பேட்டையும் அஃறிணையாக வழங்குவதும் உண்டு.

பேடி இவன் ; பேடி இவள். பேடி இது.

## எண்.

எண் என்பது பொருளின் அளவாம். அஃது ஒருமை, பன்மை என இரண்டு வகைப்படும்.

ஒன்றைக் குறிப்பது ஒருமை.

மனிதன், மங்கை, அது.

ஒன்றுக்கு மேற்பட்டவைகளைக் குறிப்பது பன்மை.

மனிதர், அவை.

ஆண்பாலும் பெண்பாலும் ஒன்றன்பாலும் ஒருமைக்குரியன ; பலர்பாலும் பலவின்பாலும் பன்மைக்குரியன.

ஒருவர் என்ற சொல் உயர்திணை ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவில் பன்மை வினையைக் கொள்ளும்.

ஆடவருள் ஒருவர் அறத்தின் வழி நிற்பர். பெண்டிருள் ஒருவர் கொழுநன் வழி நிற்பர்.

ஒருமையைக் காட்டும் 'து' விகுதியையாவது, பன்மையைக் காட்டும் 'வை' விகுதியையாவது பெறாத அஃறிணைப் பெயர்கள் அத்திணைக்குரிய இரண்டு பால்களுக்கும் பொதுவாம். இவைகள் பால்பகா அஃறிணைப் பெயர் என்றும் அஃறிணை இயற்பெயர் என்றும் சொல்லப்படும்.

மரம் வளர்ந்தது ; மரம் வளர்ந்தன. குதிரை வந்தது ; குதிரை வந்தன.

## இடம்.

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்று வகைப்படும்.

பேசுவோன் தன்மை. முன்னிற்போன் முன்னிலை. பேசப்படுவோன் படர்க்கை. தன்மை, முன்னிலைப் பெயர்கள் ஒருமை, பன்மைகளைமட்டுங் காட்டும். படர்க்கைப் பெயர்கள் திணை, பால் முதலிய அனைத்தையும் காட்டும்.

தன்மை யொருமை-நான், யான். தன்மைப் பன்மை—நாம், யாம், நாங்கள், யாங்கள். முன்னிலை யொருமை—நீ. முன்னிலைப் பன்மை—நீர், நீங்கள். படர்க்கை யொருமை—அவன், அவள், அது. படர்க்கைப் பன்மை—அவர், அவர்கள், அவை, அவைகள்.

தன்மைப் பெயரும் ; முன்னிலைப் பெயரும் ; எல்லாம், தான், தாம் என்னும் பெயர்களும் இருதிணைக்கும் பொதுவாம்.

எல்லாம் என்னும் பன்மைப்பெயர் இருதிணைக்கும், மூன்று இடங்களுக்கும் பொதுவாய் வரும்.

நாமெல்லாம் ; நீரெல்லாம். அவரெல்லாம் ; அவையெல்லாம்.

## சொல்லின் வகை.

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனச் சொல் நான்கு வகைப்படும்.

தமிழுக்குரிய இந்நால்வகைச் சொற்கள் தவிரத் திசைச்சொல், வடச்சொல் எனத் தமிழில் வந்து வழங்கும் சொற்கள் இருவகையாம்.

## திசைச்சொல்.

செந்தமிழ் வழங்காத பிறநாடுகளிலிருந்து வந்து செந்தமிழ் நாட்டில் வழங்கும் சொல் திசைச்சொல்லாம்.

தாயைத் தள்ளை என்பது குட்டநாட்டுச்சொல். தந்தையை அச்சன் என்பது குடநாட்டுச்சொல். மாமரத்தைக் கொக்கு என்பது துளுவநாட்டுச்செல். சொல்லுதலைச் செப்புதல் என்பது தெலுங்க நாட்டுச்சொல். ரோட்டு, டிக்கெட்டு, பெஞ்சு, பீரோ, ஷாப் முதலாகப் பிறபாஷைகளிலிருந்து வந்து வழங்குவன எல்லாம் திசைச்சொற்களே.

## வடசோல்.

ஆரியச்சொல் தமிழ் உச்சாரணம்பெற்றுத் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுத் தமிழில் வந்து வழங்கும்போது வடசொல் எனப்படும்.

அவ்வடசொல் தற்சமம், தற்பவம் என இரண்டு வகைப்படும்.

ஆரியச்சொல்லும் வடசொல்லும் உச்சாரணத்தினுற் சமமாயிருப்பின் அது தற்சமமாம்.

கமலம், காரணம்.

ஆரியச்சொல் வடசொல்லாகும்போது ஏதேனும் விகாரங்கள் எய்தின் அது தற்பவமாம்.

அவற்றுள் ஜகாரம் மொழிக்கு முதலிற் சகரமாகவும், நடுவிற் சகரமாகவும் யகரமாகவும் திரியும்.

ஜலம்=சலம்; விஜயம்=விசயம்; புஜம்=புயம்.

ஷகாரம் மொழிக்கு முதலிற் சகரமாகவும், இடையில் டகரமாகவும் திரியும்.

ஷஷ்டி=சட்டி; விஷயம்=விடயம்.

க்ஷகாரம் இரண்டு ககரமாகவும், டகர சகரங்களாகவும், இரண்டு சகரமாகவும் திரியும்.

சாக்ஷி=சாக்கி, சாட்சி; பிக்ஷை=பிச்சை.

ஸகாரம் சகரமாகவும், தகரமாகவும் திரியும்.

மாஸம்=மாசம், மாதம்.

ஹ மொழிக்கு முதலில் அகரமாகவும், நடுவிற் சகரமாகவும் திரியும்.

ஹரன்=அரன்; மோஹம்=மோகம்.

ஆகாரவீறு ஐகாரமாகத்திரிந்தும் சிறுபான்மை திரியாதும் வரும்.

மாலா=மாலை; தயா.

---

## 2. பெயர்ச் சொல்.

### பொது.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப்பொருளையுணர்த்திக் காலத்தைக் காட்டாமல் வேற்றுமை உருபுகளை ஏற்கும் சொல் பெயர்ச் சொல்லாம்.

அவை பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர் எனப் பெயர்பெறும். மனிதன், மாடு, பலகை, கல்; சிதம்பரம், ஆகாயம், வழி; வேனில், ஐப்பசி, இரவு, பகல்; கை, வேர், கிளை, கண்; செம்மை, சிறுமை, அன்பு, அழகு; நடத்தல், உண்ணல்.

வினைமுற்று பெயர்த் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றுவருமாயின் வினையாலணையும் பெயராம்.

வந்தானை, வந்தவனை.

நடமுதலிய பகுதிகள் தல், அல் முதலிய விகுதிகளைப் பெற்றுத் தொழிலின் பெயரை உணர்த்தினால் தொழிற்பெயராம்.

வினையாலணையும் பெயர்களும், சில தொழிற்பெயர்களும் காலத்தைக் காட்டும்.

இடுகுறி என்றும் காரணம் என்றும் பெயர்கள் இரு வகைப்படும். இவை பொது, சிறப்பு என்றும் வரும்.

ஒரு காரணமும் பற்ருது ஒருபொருளை உணர்த்தும் பெயர் இடுகுறிப்பெயராம்.

மரம், பனை.

யாதேனும் ஒரு காரணம்பற்றி ஒரு பொருளை உணர்த்தும் பெயர் காரணப்பெயராம்.

அணி, வளை.

காரணங் கருதிய பொழுது அக்காரணத்தையுடைய பல பொருள்களுக்கும் செல்வதாயும், காரணங் கருதாதபொழுது இடுகுறியளவாய் நின்று ஒவ்வொரு பொருளுக்கே செல்வதாயும் உள்ளபெயர் காரணவிடுகுறிப் பெயராம்.

முக்கண்ணன், அந்தணன், முள்ளி, கறங்கு.

அப்பெயர்கள் இயற்பெயர் என்றும் ஆகுபெயர் என்றும் இருவகைப்படும்.

ஒருபொருளுக்கு இயல்பாயுள்ள பெயர் இயற்பெயராம்.

பனை, புலி.

ஒருபொருளின் இயற்பெயர், அப்பொருளோடு சம்பந்தமுடைய வேறொரு பொருளுக்கு ஆகிவருவது ஆகுபெயராம்.

ஒன்றன்பெயர் மற்றொன்றுக்கு ஆகிவருதலால் அஃது ஆகுபெயர் எனப்பட்டது.

பொருளாகுபெயர், இடவாகுபெயர், காலவாகுபெயர், சினையாகுபெயர், குணவாகுபெயர், தொழிலாகுபெயர், அளவையாகுபெயர், சொல்லாகுபெயர், தானியாகுபெயர், கருவியாகுபெயர், காரியவாகுபெயர், கர்த்தாவாகுபெயர், உவமையாகுபெயர் என ஆகுபெயர் பலவகைப்படும்.

பொருளாகுபெயர் முதலாகுபெயர் என்றும், கருவியாகுபெயர் காரணவாகுபெயர் என்றும், குணவாகுபெயர் பண்பாகுபெயர் என்றும் சொல்லவும்படும்.

அளவை ஆகு பெயர் எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல், என நான்கு வகைப்படும்.

தாமரை போலும் முகம்; ஊரடங்கிற்று; காரறுத்தது; வெற்றிலை நட்டான்; நீலஞ் சூடினன்; வற்றலோடுண்டான்; காலாலே நடந்தான்; இரண்டு வீசைதந்தான்; நாழி யுடைந்தது; கீழைத் தடி விளைந்தது; இந் நூற்குரை செய்தான்; விளக்கு முரிந்தது; திருவாசகம் படித்தான்; அலங்காரங் கற்றான்; திருவள்ளுவர் படித்தான்; பாவை வந்தாள்.

## வேற்றுமை.

பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாம்.

முதல்வேற்றுமை, இரண்டாம்வேற்றுமை, மூன்றாம்வேற்றுமை, நான்காம்வேற்றுமை, ஐந்தாம்வேற்றுமை, ஆறாம்வேற்றுமை, ஏழாம்வேற்றுமை, எட்டாம்வேற்றுமை என அஃது எட்டுவகைப்படும்.

முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் தனித் தனி உருபுகள் இல்லை. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையிலுமுள்ள ஆறு வேற்றுமைகளுக்கும் தனித் தனி உருபுகள் உண்டு.

முதல்வேற்றுமையின் உருபு திரிபில்லாமலிருக்கிறபெயரேயாம். இஃது எழுவாய்வேற்றுமை எனவும் சொல்லப்படும். வினையையும் பெயரையும் வினாவையும் கொள்ளவருதல் இதன் பொருளாம்.

கந்தன் வந்தான். இராமன் அரசன். இவன் யார்?

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பதாம். அதன் பொருள் ஆக்கல், அழித்தல், அடைதல், நீக்கல், ஒத்தல், உடைமை முதலியனவாம். இதனைச் செயப்படுபொருள் வேற்றுமை என்றும் சொல்வதுண்டு.

வீட்டைக் கட்டினன், கோட்டையை இடித்தான், செல்வத்தைப்பெற்ருன், சினத்தை விட்டான், யானையைப்போன்ருன், பொன்னை உடையான்.

மூன்ரும் வேற்றுமையின் உருபு ஆல், ஆன், ஒடு, ஓடு என்பனவாம். அவைகளின் பொருள் கருவிப்பொருளும் கருத்தாப்பொருளும் உடனிகழ்ச்சிப் பொருளுமாம். ஆல், ஆன் உருபுகள் கருவி கருத்தாப்பொருள்களிலும்; ஒடு, ஓடு உருபுகள் உடனிகழ்ச்சிப்பொருளிலும் வரும். இது கருவி வேற்றுமை என்றும் சொல்லப்படும்.

கருவி எனினும் காரணம் எனினும் ஒக்கும். கருத்தா எனினும் செய்பவன் எனினும் வினைமுதல் எனினும் ஒக்கும்.

முதற்கருவி, துணைக்கருவி எனக் கருவி இருவகைப்படும்.

முதற்கருவியாவது செயப்படுபொருளோடு ஒற்றுமையுடையது. அது தானே செயப்படுபொருளாகி அதினின்றும் வேறுபடாதது.

மண்ணாற்செய்தகுடம்.

துணைக்கருவியாவது முதற்கருவி காரியப்படுமளவும் அதற்குத் துணையாய் உடன் நிகழ்வது.

தண்டசக்கரங்களால் ஆகிய குடம்.

இயற்றுதற்கருத்தா, ஏவுதற்கருத்தா எனக் கருத்தா இருவகைப்படும்.

இயற்றுதற்கருத்தாவாவது கருவியைத் தொழிற் படுத்துவது.

தச்சனாலாகிய கோயில்.

ஏவுதற்கருத்தாவாவது இயற்றுதற்கருத்தாவின் தொழிலை உண்டாக்கும் தொழிலையுடையது.

அரசனாலாகிய கோயில்.

முதல்வேற்றுமைக்கருத்தா செய்வினையிலும் மூன்றாம் வேற்றுமைக்கருத்தா செயப்பாட்டுவினையிலும் வரும்.

உடனிகழ்ச்சிப்பொருளாவது வினைகொண்டு முடியும் பொருளின் தொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாக உடைய பொருளாம்.

தகப்பனோடு மகன் வந்தான். இதற்குத் தகப்பனும் வந்தான்; மகனும் வந்தான் என்பதுபொருள்.

நான்காம் வேற்றுமையின் உருபு கு என்பதாம். அதன் பொருள் கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை முதலியவற்றில் இதற்கு இதுவென்பதாம்.

யாசகருக்குப் பொருள் கொடுத்தான்; பாம்புக்குப் பகை கருடன்; பாண்டவர்க்கு நண்பன் கண்ணன்; அரசனுக்குரியது செங்கோல்; கடுக்கனுக்குப் பொன்; கூலிக்கு வேலை செய்தான்; இராமனுக்குத் தம்பி பரதன்.

ஐந்தாம் வேற்றுமையின் உருபு இன், இல் என்பனவாம். அவை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்னும் பொருள்களில் வரும்.

மலையின்வீழருவி; தாயிற் சிறந்த தெய்வமில்லை; சீகாழியின் வடக்குச் சிதம்பரம்; கல்வியிற் பெரியன் கம்பன்.

ஆறாம் வேற்றுமையின் உருபு அது, உடைய என்பனவாம். அவற்றின்பொருள் கிழமைப் பொருளாம்.

கிழமை = சம்பந்தம்.

தற்கிழமை, பிறிதின்கிழமை எனக் கிழமை இரண்டு வகைப்படும்.

தற்கிழமையாவது தன்னோடு ஒற்றுமையுடைய பொருளின் சம்பந்தம்.

பிறதின்கிழமையாவது தன்னின் வேறாகிய பொருளின் சம்பந்தம்.

ஆறும்வேற்றுமைத்தற்கிழமை பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவினீட்டம், திரிபினுக்கம் என ஐந்துவகைப்படும்.

பாலினது வெண்மை; அரசனது வரவு; தனது கை; மனிதரது கூட்டம்; படைகளினது தொகுதி ; நெல்லினது பொரி.

ஆறும் வேற்றுமைப்பிறிதின்கிழமை பொருள், இடம், காலம் என மூன்றுவகைப்படும்.

இராமனது பசு, கந்தனது வீடு, கண்ணனது திருநாள்.

எழாம் வேற்றுமையின் உருபு இல், கண், இடம் முதலியனவாம். அவற்றின்பொருள் இடப்பொருளாம். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறும் தற்கிழமையிலும், பிறிதின்கிழமையிலும் இடமாய் நிற்கும். இஃது இடவேற்றுமை என்றும் பெயர்பெறும்.

மணியில் ஒளி, மரத்தில் பறவை; ஊரில் வீடு, வீட்டில் நாய்; வாரத்தில் ஒருநாள், சித்திரையில் தேரோட்டம்; விரலில் நகம், விரலில் மோதிரம்; இளமையில் அழகு, இளமையிற் செல்வம்; ஆட்டத்தில் அபிநயம்; ஆட்டத்தில் பாட்டு.

எட்டாம்வேற்றுமையின் உருபுகள் ஈறுதிரிதல், ஈறுகெடுதல், ஈறுமிகுதல், ஈற்றயலெழுத்துத்திரிதல், இயல்பாதல் முதலியன. பொருள் படர்க்கைப்பொருளை முன்னிலையாக அழைத்தலாம். இதற்கு விளிவேற்றுமை என்றும் பெயர்.

அம்மை=அம்மா; அரசன்=அரச; மகன்=மகனே; மக்கள்=மக்காள்; தங்கை.

பொதுப்பெயரின் ஈற்றிலுள்ள ஐகாரம் ஆ என்றும், ஆய் என்றும் திரியும்.

அன்னை=அன்னா; அன்னாய்.

சில இடங்களில் இவ்வைகாரம் ஏகாரமாகவும் திரியும்.

அன்னை=அன்னே.

உயர்திணை அஃறிணைப்பெயர்களின் ஈற்று ஐகாரம் ஆய் எனத் திரியும்.

*நங்கை=நங்காய்; நாரை=நாராய்.*

னகரவீற்றுப்பெயரில் ஈறுகெடுதலும், ஈறுகெட்டு அயல் நீளுதலும், அதனோடு ஓகாரம் மிகுதலும், ஏகாரம் மிகுதலும், இயல்பாதலும், அதனோடு ஏகாரம் மிகுதலும், ஈறு கெட்டு அயலகரம் ஏகாரமாதலும் விளியுருபாம்.

*அப்ப, அப்பா, அப்பாவோ, ஐயாவே, அப்பன், அப்பனே, ஐயே.*

அண்மைவிளியில் இயல்பும், ஈறுகெடுதலும்; சேய்மை விளியில் ஈறுநீளுதலும், ஈறுகெட்டு அயல்நீளுதலும் ஆகும்.

*அண்மை = சமீபம்; சேய்மை = தூரம்.*

*தம்பி; ஐய. தம்பீ; அப்பா.*

தன்மைப் பெயரும் முன்னிலைப் பெயரும் சுட்டுப்பெயரும் வினுப் பெயரும் தான், தாம் என்னும் பெயர்களும் விளி ஏலாவாம்.

நான் என்னும் சொல் முதல் வேற்றுமையில் மட்டும் வரும்.

வேற்றுமை உருபு ஏற்கும்போது யான், யாம், நாம் என்னும் தன்மைப் பெயர்கள் என், எம், நம் எனவும்; நீ, நீர் என்னும் முன்னிலைப் பெயர்கள் நின், உன், நும், உம் எனவும்; தான், தாம் என்னும் படர்க்கைப் பெயர்கள் தன், தம் எனவும் திரிந்து வரும். இவை நான்காம் வேற்றுமை உருபு ஏற்கும் போது அகரச்சாரியைப் பெறும். இவற்றிலுள்ள ஒற்று நான்காம்வேற்றுமையிலும் ஆறும்வேற்றுமையிலும் இரட்டாவாம்.

*யான்-என்னை, என்னுல், எனக்கு, என்னின், எனது, என்னில். யாம்-எம்மை, எம்மால், எமக்கு, எம்மின், எமது, எம்மில். நாம்-நம்மை, நம்மால், நமக்கு, நம்மின், நமது, நம்மில்.*

நீ-உன்னை, நின்னை; உன்னால், நின்னால்; உனக்கு, நினக்கு; உன்னின், நின்னின்; உனது, நினது; உன்னில், நின்னில்.

நீர்-உம்மை, நும்மை; உம்மால், நும்மால்; உமக்கு, நுமக்கு; உம்மின், நும்மின்; உமது, நுமது; உம்மில், நும்மில்.

தான்-தன்னை, தன்னால், தனக்கு, தன்னின், தனது, தன்னில். தாம்-தம்மை, தம்மால், தமக்கு, தம்மின், தமது, தம்மில்.

மகரவீற்றுப் பெயர்கள் உருபு ஏற்கும்போது மகரம் கெட, அத்து என்னும் சாரியைபெறும். பெறுமிடத்துச் சாரியை முதல் அகரம் கெடும்.

மரம் + ஐ = மர + அத்து + ஐ = மரத்தை.

எல்லாம் என்னும் பெயர் வேற்றுமைஉருபுகளை ஏற்றால் ஈற்றிலுள்ள மகரங்கெட, அற்று என்னும் சாரியையும், உருபும், மேல் உம்மும் பெறும்.

எல்லாம் + ஐ = எல்லா + அற்று + ஐ + உம் = எல்லாவற்றையும்.

பல சில என்பவை வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது அற்றுச்சாரியை பெறும்.

பலவற்றை; சிலவற்றை.

டகர றகர ஈறுகளையுடைய நெடிற்றொடர்க்குற்றியலுகரமும், உயிர்த்தொடர்க்குற்றியலுகரமும் வேற்றுமை உருபு ஏற்கும்போது அக் குற்றியலுகரம் ஏறியமெய்கள் இரட்டும்.

நாடு + ஐ = நாட்டை. ஆறு + ஐ = ஆற்றை.

உதடு + ஐ = உதட்டை. வயிறு + ஐ = வயிற்றை.

எல்லைப் பொருளில் வரும் இன் என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபும், ஆறும் வேற்றுமை உருபும் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும்.

சென்னையின் வடக்குத் திருவொற்றியூர்; மரத்தினது கிளை.

மற்ற வேற்றுமை உருபுகள் வினைச்சொல்லைக் கொண்டு முடியும். விளிப்பெயர் ஏவல் வினையைக் கொண்டு முடியும்.

குதிரை ஓடிற்று, பழத்தைத் தின்றான், பிரம்பால் அடித்தான், அவனுக்குக் கொடுத்தான், பட்டினத்தினின்று வந்தான், வீட்டில் இருக்கிறான், அண்ணா வா.

நான்காம் வேற்றுமை உருபும், ஏழாம் வேற்றுமை உருபும் வினையோடு கூடிவரும் பெயர்ச்சொல்லைக் கொண்டும் முடியும்.

நோய்க்குக் கொடுக்கும் மருந்து ; பள்ளிக் கூடத்தில் இருக்கிற பிள்ளைகள்.

### காரகம்.

ஆறும் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் ஒழிந்த மற்றை வேற்றுமைகள் வினைகொண்டு முடியிற் காரகம் எனப் படும்.

அரசன் வந்தான், வீட்டைக்கட்டினான், வாளால் வெட்டினான், அரசனுக்குக் கொடுத்தான், மலையினின் றிறங்கினான், நாட்டின்கட் சென்றான்.

---

## 3. வினைச்சொல்.

### பொது.

ஒரு பொருளின் தொழிலை உணர்த்தும் சொல் வினைச் சொல்லாம்.

அது செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப் படுபொருள் என்னும் ஆறு பொருள்களையும் உணர்த்தும்.

செயப்படுபொருள் குன்றாவினை மாத்திரம் இந்த ஆறுபொருள் களையும் உணர்த்தும்.

வனைந்தான் என்றபோது குயவனாகிய செய்பவனும், மண்ணாகிய முதற்கருவியும், தண்டமும் திரிகையுமாகிய துணைக்கருவிகளும், வனைதற்கு ஆதாரமான இடமும், வனைதலாகிய செயலும், இறந்த

காலமும், குடமாகிய செயப்படுபொருளும் என்ற அவ்வாறினையும் காட்டியது உணர்க.

செயப்படுபொருள் குன்றியவினையாயின் செயப்படுபொருள் ஒழிந்த மற்ற ஐந்தையும் காட்டும்.

வந்தான்—இது செயப்படுபொருள் ஒழிந்த மற்ற ஐந்தினையும் தருதல் காண்க.

முற்றுவினைச்சொல்லில் பகுதியாற் செயலும், இடைநிலை முதலியவற்றால் காலமும், விகுதியாற் செய்பவனும்; எச்சவினைச்சொல்லில் பகுதியால் செயலும், இடைநிலை முதலியவற்றால் காலமும் வெளிப்படையாகவும், மற்றவை குறிப்பாகவும் வரும்.

உண்டான், உண்ட, உண்டு.

'இடை நிலை முதலியவற்றால்' என்றமையால் சில வினைச்சொற்களில் வேறு இடை நிலைகள் காலங்காட்டுதலும், பகுதிஇரட்டித்துக் காலங்காட்டுதலும், விகுதி காலங்காட்டுதலும் கொள்க.

## வினைப் பாகுபாடு.

தெரிநிலை, குறிப்பு என வினை இரண்டு வகைப்படும்.

செயலும் காலமும் வெளிப்படையாகத் தெரியநிற்பது தெரிநிலை வினையாம்.

வந்தான்.

பெயர்ப்பகுபதங்கள் வினைத்தன்மைப்பட்டுக் காலத்தைக் குறிப்பாக உணர்த்துவது குறிப்புவினையாம்.

அரசன் பெரியன்.

தன்வினை பிறவினையென்றும், செயப்படுபொருள் குன்றிய வினை செயப்படுபொருள் குன்றாவினையென்றும், செய்வினை செயப்பாட்டுவினையென்றும் தெரிநிலைவினை பகுக்கப்படும்.

மேற்கூறிய தன்வினை முதலியவற்றில் ஒவ்வொன்றும் முதனிலை, தொழிற்பெயர், வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என ஐந்து வகைப்படும்.

முதனிலை முதலாக மேற்சொல்லிய வினையின் பகுப்பு ஐந்தனுள் முதனிலை ஒழிந்த மற்றை நான்கும் தனித்தனியே உடன்பாடு எதிர்மறை என இரண்டிரண்டு வகைப்படும்.

உடன்பாட்டுத்தெரிநிலை இருபத்துநான்கும், எதிர்மறைத்தெரிநிலை இருபத்துநான்குமாக நாற்பத்தெட்டாதல் காண்க.

தொழில் நிகழ்ச்சியை உணர்த்தும் வினை உடன்பாட்டு வினையாம்.

தொழில் நிகழாமையை உணர்த்தும் வினை எதிர்மறை வினையாம்.

தன்வினை பிறவினையும், செயப்படுபொருள் குன்றியவினை செயப்படுபொருள் குன்றாவினையும் செய்வினையேயாம்.

செயப்படுபொருள் குன்றியவினை ஒழிந்த மற்றை வினைப் பகுதிகளோடு இடையே அகரச்சாரியை வந்து படு என்னும் விகுதிசேர்ந்தால் செயப்பாட்டுவினையாம்.

காண் + அ + படு = காணப்படு.

சில பகுதிகள் குச்சாரியையோடு அகரம் பெறுதலும் உண்டு.

அழை + கு + அ + படு = அழைக்கப்படு.

தன் வினைக்கும் பிறவினைக்கும் பொதுவினை; உடன்பாட்டு வினைக்கும் எதிர்மறைவினைக்கும் பொது வினை; செயப்படுபொருள் குன்றியவினைக்கும் செயப்படுபொருள் குன்றாவினைக்கும் பொது வினை; செய்வினைக்கும் செயப்பாட்டு வினைக்கும் பொதுவினை என்று சில வினைச்சொற்கள் பொது வினையாகவரும்.

வெளுத்தான்; செய்யாய்; வெளுத்தான்; புலிகொன்றயானை.

## வினைச்சொற்களின் பகுப்பு.

தெரிநிலையும், குறிப்பும் ஆகிய வினைச்சொற்கள் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என மூவகைப்படும்.

### வினைமுற்று.

(உடன்பாடு.)

பால்காட்டும் விகுதியோடுகூடி முற்றிநின்று பெயரைக் கொண்டு முடியும்வினை வினைமுற்றாம்.

### படர்க்கை வினைமுற்றுக்கள்.

அன், ஆன் என்னும் இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய வினைகள் ஆண்பாற்படர்க்கை வினைமுற்றுக்களாம்.

நடந்தனன், நடந்தான்; குழையன், குழையான்.

அள், ஆள் என்னும் இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய வினைகள் பெண்பாற்படர்க்கை வினைமுற்றுக்களாம்.

நடந்தனள், நடந்தாள்; குழையள், குழையாள்.

அர், ஆர் என்னும் இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய வினைகள் பலர்பாற்படர்க்கை வினைமுற்றுக்களாம்.

நடந்தனர், நடந்தார்; குழையர், குழையார்.

து, று என்னும் இருவிகுதிகளையும் இறுதியிலுடைய வினைகள் ஒன்றன்பாற்படர்க்கை வினைமுற்றுக்களாம்.

வந்தது, ஆயிற்று; குழையது, அற்று.

அ என்னும் விகுதியையுடைய வினைகள் பலவின்பாற்படர்க்கை வினைமுற்றுக்களாம்.

வந்தன, புதியன.

### இருதிணைப் பொது வினைகள்.

தன்மை வினைமுற்றும், முன்னிலை வினைமுற்றும், ஏவல் வினைமுற்றும், வியங்கோள் வினைமுற்றும், வேறு இல்லை உண்டு

என்னும் குறிப்பு வினைமுற்றுக்களும், பெயரெச்சமும், வினையெச்சமும் இருதிணைக்கும் பொதுவாம்.

## தன்மை வினைமுற்றுக்கள்.

ஏன் என்னும் விகுதியை இறுதியிலுடைய வினைகள் தன்மை ஒருமை வினைமுற்றுக்களாம்.

நடந்தேன், குழையேன்.

ஓம் என்னும் விகுதியை இறுதியிலுடைய வினைகள் தன்மைப்பன்மை வினைமுற்றுக்களாம்.

நடந்தோம், குழையோம்.

அம், ஆம், ஏம் என்னும் மூன்று விகுதிகளும் செய்யுளில் தன்மைப்பன்மை வினைமுற்றில் வரும்.

வந்தனம், வந்தாம், வந்தேம்; தாரினம், தாரிணும், தாரினேம்.

## முன்னிலை வினைமுற்றுக்கள்.

ஐ, ஆய் என்னும் இருவிகுதிகளை இறுதியிலுடைய வினைகள் முன்னிலை ஒருமை வினைமுற்றுக்களாம்.

நடந்தனை, நடந்தாய்; பெரியை, பெரியாய்.

இர், ஈர் என்னும் விகுதிகளை இறுதியிலுடைய வினைமுற்றுக்கள் முன்னிலைப்பன்மை வினைமுற்றுக்களாம்.

வந்தனிர், வந்தீர்; குழையினிர், குழையீர்.

## ஏவல்வினை முற்று.

ஏவல்வினைமுற்றாவது முன் நின்றானை 'இது செய்' என்று கட்டளையிடுவது. அஃது எதிர்காலத்தில்மட்டும் வரும்.

ஆய், இ என்னும் விகுதிகளை இறுதியிலுடைய வினைகள் ஏவல் ஒருமை வினைமுற்றுக்களாம்.

உண்ணாய்; செய்தி.

உம், ஈர், மின் என்னும் விகுதிகளை இறுதியிலுடைய வினைகள் ஏவற்பன்மை வினைமுற்றுக்களாம்.

உண்ணும்; உண்ணீர்; உண்மின்.

ஏவல் ஒருமையில் விகுதி குன்றியும் வரும்.

நட, படி, பார்.

முன்னிலைவினைமுற்று முன்னின்றானது தொழிலையுணர்த்துவது; அது முக்காலத்தும் வரும். ஏவல்வினைமுற்று முன்னின்றானைக் கட்டளையிடுவது; அஃது எதிர்காலத்தில்மட்டும் வரும். ஏவலெல்லாம் முன்னிலை; முன்னிலையெல்லாம் ஏவல் அல்ல.

## வியங்கோள்வினைமுற்று.

க, இ என்னும் எதிர்காலங்காட்டும் இவ்விருவிகுதிகளை ஈற்றிலுடைய வினைமுற்றுக்கள் வியங்கோள் வினைமுற்றுக்களாம். அவை மூவிடத்தும் ஐம்பாலிலும் எதிர்காலத்தை உணர்த்திவரும்.

யான், யாம்; நீ, நீர்; அவன், அவள், அவர், அது, அவை என்றவற்றோடு வாழ்க, வாழி என்றவற்றைக்கூட்டி யான்வாழ்க; யான் வாழி என்பனபோல அறிந்து கொள்க.

ஏவல் கட்டளைப்பொருளில் முன்னிலையில் மட்டும் வரும்; வியங்கோள் வாழ்த்து முதலிய பல பொருள்களில் ஐம்பாலிலும், மூவிடத்திலும் வரும்.

தன்மை எழுவாயோடு முன்னிலை எழுவாயாவது படர்க்கை எழுவாயாவது அல்லது அவ்விரண்டுமாவது சேர்ந்து ஒரு வினையைக் கொண்டுமுடியுமானால் அவை தன்மைக்குரிய ஓம் என்னும் விகுதியைக் கொண்டுமுடியும்.

நானும் நீயும் போனோம். நானும் அவனும் போனோம். நானும் நீயும் அவனும் போனோம். நானும் குதிரையும் போனோம்.

முன்னிலை எழுவாயோடு படர்க்கை எழுவாய்சேர்ந்து ஒரு

வினையைக்கொண்டு முடியுமாஞல் அவை முன்னிலைக்குரிய ஈர் என்னும் விகுதியைக்கொண்டு முடியும்.

நீயும் அவனும் போனீர். நீயும் குதிரையும் போனீர்.

உயர்திணை எழுவாயோடு அஃறிணை எழுவாய் ஒரு வினையைக்கொண்டு முடியும்போது உயர்திணைப் பலர்பால் வினைமுற்றைக் கொண்டு முடியும்.

அவனும் குதிரையும் போனுர்கள்.

வேறு, இல்லை, உண்டு என்பன இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகிய குறிப்புவினை முற்றுக்களாம்.

நான், நாம்; நீ, நீர்; அவன், அவள், அவர், அது, அவை என்றவற்ளுேடு வேறு, இல்லை, உண்டு என்றவற்றைக் கூட்டி நான் வேறு; நான் இல்லை; நான் உண்டு என்பனபோல அறிந்து கொள்க.

## தெரிநிலைப்பெயரெச்சம்.

பால்காட்டும் முற்றுவிகுதி பெருத குறைச்சொல்லாய்ப் பெயரைக்கொண்டு முடியும் வினைச்சொல் பெயரெச்சமாம்.

இறந்தகாலப்பெயரெச்சங்கள் செய்த என்னும் வாய்பாடு என்றும், நிகழ்காலப்பெயரெச்சங்கள் செய்கின்ற என்னும் வாய்பாடு என்றும், எதிர்காலப்பெயரெச்சங்கள் செய்யும் என்னும் வாய்பாடு என்றும் சொல்லப்படும்.

உண்ட; உண்கின்ற; உண்ணும்.

செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் வினைமுற்ருகவும் வரும். அது படர்க்கையில் ஆண்பாலினும் பெண்பாலினும் ஒன்றன்பாலினும் பலவின்பாலினும்வரும்.

அவன் வரும். அவள் வரும். அது வரும். அவை வரும்.

செய்யும் என்னும் பெயரெச்சத்திலும் செய்யும் என்னும் வினைமுற்றிலும் இறுதியிலுள்ள உயிர்மெய் கெடுதலும் உண்டு.

ஆகும்பொருள் = ஆம்பொருள். குணம்ஆகும் = குணமாம்.

செய்யும் என்னும் ஏவற்பன்மை வினைமுற்றிலும் இறுதி உயிர்மெய் கெடுதலும் உண்டு.

போகும் + பெரியோரே = போம்பெரியோரே.

### குறிப்புப்பெயரெச்சம்.

அ, இய என்னும் விகுதிகள் பண்படி புணர்ந்து முடிவது குறிப்புப்பெயரெச்சமாம்.

செய்ய தாமரை; புதிய மனிதன்.

### தெரிநிலை வினையெச்சம்.

பால்காட்டும் விகுதியின்றி வினையைக்கொண்டு முடியும் வினைச்சொல் வினையெச்சமாம்.

உண்டு; உண்ண; உண்ணின்.

இறந்தகால வினையெச்சங்கள் செய்து என்னும் வாய்பாடு என்றும், நிகழ்கால வினையெச்சங்கள் செய என்னும் வாய்பாடு என்றும், எதிர்கால வினையெச்சங்கள் செயின் என்னும் வாய்பாடு என்றும் சொல்லப்படும்.

இறந்தகால வினையெச்சவிகுதிகள் உ, இ, ய் என்பனவாம்.

செய்து, ஓடி, போய்.

நிகழ்கால வினையெச்சவிகுதி அ என்பதாம்.

செய்ய, படிக்க.

எதிர்கால வினையெச்சவிகுதிகள் இன், ஆல், கால் முதலியன.

உண்ணின், உண்டால், உண்டக்கால்.

செய்து என்னும் வினையெச்சம் தன் வினைமுதலின் வினையையே கொண்டு முடியும்.

உண்டு வந்தான்.

செய என்னும் வினையெச்சமும், செயின் என்னும் வினையெச்சமும் தன் வினைமுதலின் வினையையும், வேறு வினைமுதலின் வினையையும் கொண்டு முடியும்.

அவன் உண்ண வந்தான், அவன் உண்டால் போவான், கண்ணன் வரப் பார்த்தேன், கண்ணன் வந்தாற் போவேன்.

செய என்னும் எச்சம், செய்து என்னும் எச்சமாகத் திரிந்தாலும் அதன் பொருள் வேறுபடாது.

கண்ணன் வந்து இராமன் போனான் என்பதற்குக் கண்ணன் வர இராமன் போனான் என்பதே பொருள்.

## குறிப்புவினையெச்சம்.

பண்படியாகத் தோன்றி அகர ஈறாக நின்று வினையைக் கொண்டு முடிவது குறிப்புவினையெச்சமாம்.

மெல்லச்சென்றான், வலியச்சொன்னான்.

## எதிர் மறை.

### எதிர்மறைத்தெரிநிலைவினைமுற்று.

நட முதலிய வினைப்பகுதிகள் எதிர்மறை ஆகார விகுதி புணர்ந்து அனைத்தும் ஒரு பகுதியாகி அதன்மேல் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் உரிய விகுதிகள் புணர்ந்து வந்தால் எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றுக்களாம். இந்த ஆகார விகுதி உயிர்வரின் கெடும்; மெய்வரின் கெடாது.

நான் உண்ணேன்; நாம் உண்ணோம்; நீ உண்ணாய்; நீர் உண்ணீர்; அவன் உண்ணான்; அவள் உண்ணாள்; அவர் உண்ணார்; அது உண்ணாது; அவை உண்ணா.

எதிர்மறை ஆகாரவிகுதி முக்காலத்துக்கும் உரியது.

### எதிர்மறைக் குறிப்புவினை முற்று.

எதிர்மறைக்குறிப்புவினைகள் அல், இல் என்னும் பண்படிகள் காரணமாகவே பிறக்கும்.

அல், இல் என்னும் எதிர்மறைப் பண்டிகளோடு இரு திணை ஐம்பால்களுக்கும் உரிய விகுதிகள் புணர்ந்தால் எதிர் மறைக்குறிப்புச் சிறப்பு வினைமுற்றுக்களாம்.

நான் அல்லேன், நான் இலேன்; நாம் அல்லோம், நாம் இலோம்; நீ அல்லை, நீ இலாய்; நீர் அல்லீர், நீர் இலீர்; அவன் அல்லன், அவன் இலன்; அவள் அல்லள், அவள் இலள்; அவர் அல்லர், அவர் இலர்; அது அன்று, அது இன்று; அவை அல்ல, அவை இல எனவரும்.

இல் என்னும் எதிர்மறைப் பண்படியோடு ஐ என்னும் விகுதி புணர்ந்தால் எதிர்மறைக் குறிப்புப் பொதுவினைமுற்றாம்.

நான் இல்லை, நீ இல்லை, அவன் இல்லை, அவள் இல்லை, அது இல்லை. நாம் இல்லை, நீர் இல்லை, அவர் இல்லை, அவை இல்லை.

அல் என்னும் எதிர்மறைப்பண்படியிலிருந்து எதிர்மறைக் குறிப்புப் பொதுவினை முற்றுக்கள் பிறவா.

## எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம்.

நட முதலிய பகுதிகள் எதிர்மறை ஆகாரவிகுதியைப் பெற்று இரண்டும் ஒரு பகுதியாகித் தகரவெழுத்துப் பேற்றோடு சேர்ந்த அகர விகுதியைப் புணர்ந்தால் எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சமாம்.

நடவாத குதிரை.

## எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்.

அல், இல் என்பவை இடையில் ஆகாரச்சாரியையும் தகர வொற்று எழுத்துப் பேறும் பெற்று அதன்மேல் அகர விகுதியைப் புணரின் எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சமாம்.

அல்லாத குதிரை; இல்லாத பொருள்.

## எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சம்.

நட முதலிய பகுதிகள் எதிர்மறை ஆகாரவிகுதி பெற்று

யாவும் ஒரு பகுதியாய் நின்று மல், மை, மே, து என்னும் விகுதிகளைப் புணர்ந்தால் எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சமாம்.

நடவாமல்; நடவாமை; நடவாமே; நடவாது—வந்தான்.

## எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம்.

அல், இல் என்னும் எதிர்மறைப் பண்படிகள் ஆகாரச் சாரியையினை இடையிற்பெற்று மல், மை, மே, து என்னும் விகுதிகளைப் புணர்ந்தும், சாரியையில்லாமல் றி விகுதியைப் புணர்ந்தும் வந்தால் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்களாம்.

அல்லாமல், இல்லாமல்; அல்லாமை, இல்லாமை; அல்லாமே, இல்லாமே; அல்லாது, இல்லாது; அன்றி, இன்றி—வநதான்.

எதிர்மறைப் பெயரெச்சமும், எதிர்மறை வினையெச்சமும் ஈறுகெட்டும் வரும். அவை முறையே ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்றும், ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம் என்றும் வழங்கப்பெறும். இவை தெரிநிலையாகவும் குறிப்பாகவும் வரும்.

உண்ணக் குதிரை; உண்ணக்கிடந்தது. இல்லாப் பொருள்; இல்லாக்கிடந்தது.

## முற்றெச்சம்.

ஓர் எழுவாயோடு இரண்டு வினைமுற்றுக்கள் இயைந்துவந்தால் முதலில் இருக்கும் வினைமுற்று வினையெச்சமாகக் கொள்ளப்படும். அதற்கு முற்றெச்சம் என்று பெயர்.

கண்டனன் வணங்கினன் என்பதற்குக் கண்டு வணங்கினன் என்பது பொருள்.

ஒரு பெயரோடு இரண்டு மூன்று பெயரெச்சங்கள் இயைந்து வந்தால் முதலிலுள்ள பெயரெச்சங்களை வினையெச்சங்களாகவும் கொள்ளலாம்.

வந்த கண்ட பேசிய இராமன் என்பதற்கு வந்து கண்டு பேசிய இராமன் என்பது பொருள்.

## 4. இடைச்சொல்.

பெயர் வினைகளைப்போலத் தனித்து வாராமல் அவைகளைச் சார்ந்து பொருளை உணர்த்தி வருஞ்சொல் இடைச்சொல்லாம்.

### இடைச்சொல்லின் வகை.

வேற்றுமைஉருபுகளும் விகுதிகளும் இடைநிலைகளும் சாரியைகளும் உவமைஉருபுகளும் சுட்டும் வினாவும் தத்தம் பொருளை உணர்த்தி வருவனவும் இடைச்சொற்களாம்.

வேற்றுமையுருபுகளும் விகுதிகளும் இடைநிலைகளும் சுட்டும் வினாவும் முன்னே கூறப்பட்டன.

### சாரியைகள்.

அன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், ஏ, ஐ, கு, ன், ஆம் இப்பன்னிரண்டும் பிறவும் சாரியைகளாம்.

நடந்தனன்; வண்டின் கால்; வளையல்; எல்லாவற்றையும்; பதிற்றுப்பத்து; மரத்துக்கிளை; புளியங்காய்; கலனே குறுணி; பண்டைநாள்; நடக்கும்; கோன்; மண்ணாங்கட்டி.

### உவமை உருபுகள்.

போல, ஒப்ப, நேர, நிகர, அன்ன, அனைய முதலிய இடைச்சொற்கள் உவமை உருபுகளாம்.

மாரிபோலக் கொடுத்தான்; மாரியொப்பக் கொடுத்தான்.

### தத்தம் பொருளையுணர்த்தும் இடைச்சொற்கள்.

ஏ, ஓ, உம், மற்று, கொல், முன், பின், இனி, சும்மா, தான், ஐயோ, சீ, சீசீ, ஆ, அம்ம முதலியவை தத்தம் பொருளை உணர்த்தும் இடைச்சொற்களாம்.

அவற்றுள் ஏகாரம் தேற்றத்திலும், பிரிநிலையிலும், வினாவிலும், ஈற்றசையிலும்; ஓகாரம் எதிர்மறையிலும்,

வினாவிலும், சிறப்பிலும், அசைநிலையிலும்; உம்மை எதிர்மறையிலும், சிறப்பிலும், ஐயத்திலும், எச்சத்திலும், முற்றிலும், எண்ணிலும்; மற்று என்பது பிறிதென்னும் பொருளிலும், அசை நிலையிலும்; கொல் என்பது ஐயப்பொருளிலும்; முன், பின் என்பன காலப்பொருளிலும், இடப்பொருளிலும்; இனி என்பது காலவெல்லைகளிலும், இடவெல்லைகளிலும்; சும்மா என்பது பயனின்மைப் பொருளிலும்; தான் என்பது தேற்றப் பொருளிலும்; ஐயோ என்பது இரக்கப் பொருளிலும்; சீ, சீசீ, என்பன இகழ்ச்சிப் பொருளிலும்; ஆ, அம்மா என்பன வியப்புப் பொருளிலும் வரும்.

---

## 5. உரிச்சொல்.

குணத்தை உணர்த்திப் பெயர்வினைகளுக்கு உரிமைபூண்டு வழங்குஞ் சொல் உரிச்சொல்லாம்.

நனிபேதை ; சாலக்கொடுத்தான்.

சால, உறு, தவ, நனி, கூர், கழி என்பன மிகுதி என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாம்

கடி என்பது காவல், கூர்மை, வாசனை, ஒளி, அச்சம், சிறப்பு, புதுமை, மிகுதி, விரைவு முதலிய பல குணங்களை உணர்த்தும் உரிச்சொல்லாம்.

---

## (3) போதுவியல்.

### வழக்கு.

சொற்கள் வழங்கும் விதம் வழக்காகும். அஃது இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என இரண்டு வகைப்படும்.

ஒரு பொருளுக்கு இயல்பாயமைந்த சொல்லால் அப்பொருளைக் கூறுவது இயல்பு வழக்கு. அஃது இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என்று மூவகைப்படும்.

இலக்கணத்திற்கு ஒத்து வருவது இலக்கண முடையது எனப்படும்.

நிலம் ; நீர்.

இலக்கணத்திற்கு ஒத்திராவிட்டாலும் இலக்கண முடையது போலக் கொள்ளப்படுவது இலக்கணப்போலி எனப்படும்.

முன்றில், புறநகர், கோயில்.

இல்முன் என்பது முன்றில் எனவும், நகர்ப்புறம் என்பது புறநகர் எனவும், கோவில் என்பது கோயில் எனவும் ஆனமை காண்க.

மரூஉ என்பது இலக்கணம் சிதைந்து மருவிவருவது.

அருமருந்தன்ன பிள்ளை - அருமந்தபிள்ளை, தஞ்சாவூர்-தஞ்சை, ஆயிற்று—ஆச்சு.

ஒரு பொருளுக்கு இயல்பாயுள்ள சொல்லை ஒழித்து அதற்குத் தகுதியாகிய வேறொரு சொல்லால் அப்பொருளைக் கூறுவது தகுதிவழக்காம். அஃது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூன்று வகைப்படும்.

சொல்லத்தகாததை மறைத்துச் சொல்வது இடக்கரடக்கல் எனப்படும்.

கால்கழுவி வந்தான்.

மங்கலமல்லாததை மங்கலமாகச் சொல்வது மங்கலம் எனப்படும்.

நன்காடு, தாலி பெருகிற்று.

ஒரு கூட்டத்தார் யாதேனும் ஒரு காரணத்தால் ஒரு பொருளின் இயல்பான பெயரை ஒழித்து வேறொரு பெயரால் அப்பொருளைக் கூறுவது குழூஉக்குறி எனப்படும்.

தட்டார் பொன்னைப் பறி என்பதும், வேடர் கள்ளைச் சொல்விளம்பி என்பதும் முதலியவையாம்.

## சொல் பொருளையுணர்த்தல்.

சொல் பொருளை உணர்த்துமிடத்து வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்தும்.

இருதிணை ஐம்பாற் பொருள்களை வெளிப்படையாகத் தெரிவிப்பது வெளிப்படைச் சொல்லாம்.

மண், மரம்; வந்தான், போனான்.

இருதிணை ஐம்பாற்பொருள்களைக் குறிப்பினால் தெரிவிப்பது குறிப்புச்சொல்லாம். அஃது ஒன்பது வகைப்படும். அவை ஒன்றொழிபொதுச்சொல், விகாரம், தகுதி, ஆகுபெயர், அன்மொழித்தொகை, வினைக்குறிப்பு, முதற்குறிப்பு, தொகைக் குறிப்பு, பிறகுறிப்பு என்பன.

ஆயிரம் மக்கள் போர்செய்தார்கள்; மரைமலர்; திருமுகம் படித்தான்; புத்தின்றான்; தேன்மொழிவந்தாள்; இவன் இப்போது பொன்னன்; ஆத்திசூடி படித்தான்; ஐவரோடு குந்தி வந்தாள்; பாயா வேங்கை எனவரும்.

பெயரிலும், வினையிலும், ரகர வீற்றுச்சொல்லின் ஈற்று அயலில் இருக்கும் ஆகாரம் ஓகாரமாம்.

நல்லார் = நல்லோர். கொண்டார் = கொண்டோர்.

செய்யுளில் ன, ள, ய ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாகும்.

வந்தான்=வந்தோன். செய்தாள்=செய்தோள். வந்தாய்= வந்தோய்.

## இடைப்பிறவரல்.

வேற்றுமை உருபுகளும் வினைமுற்றுக்களும் பெயரெச்ச வினையெச்சங்களுமாகிய இவைகளுக்கும், இவற்றை முடிக்குஞ் சொல்லாகிய பெயர் வினைகளுக்கும் நடுவில் அவ்விடத்துக்குப்

பொருந்துவனவாகிய வேறு சொற்கள் வருதலும் உண்டு. அவற்றிற்கு இடைப்பிறவரல் என்பது பெயர்.

தருமன் அறத்தை அழகுபெறச் செய்தான். பீமன் வயிறார உண்டான். இவற்றுள் அழகுபெற, வயிறார என்பன இடைப்பிற வரல்களாம்.

## தொகைநிலைத் தொடர்

இடையே உருபுகள் மறைந்து நிற்க இரண்டு முதலிய சொற்கள் ஒரு சொல்லைப்போலப் பிளவு படாமல் நின்று தொடரும் தொடர்மொழி தொகைநிலைத்தொடராம்.

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை எனத் தொகைநிலைத்தொடர் ஆறுவகைப்படும்.

ஐ முதலிய ஆறு வேற்றுமை உருபுகளும் வெளிப்படாமல் தொக்க தொடர்மொழிகள் வேற்றுமைத் தொகையாம்.

நிலங்கடந்தான், கல்லெறிந்தான், சாத்தன் மகன், ஊர் நீங்கினான், சாத்தன் கை, காட்டுப் புலி.

இவ் வேற்றுமைத்தொகைகளுள் உருபுகள் மாத்திரம் விரிந்த விடத்துப் பொருட்பொருத்தமுறாது நிற்குமாயின் மற்றுஞ் சில சொற்கள் சேர்த்துக் கொள்ளப்படும். அக்கால், அவ் வேற்றுமைத் தொகைகள் உருபும் பயனும் உடன்றொக்க தொகை எனப்படும். இஃது ஆறும் வேற்றுமையில் வாராது.

கைக்களிறு என்பதிற் கையைக்களிறு என ஐயுருபு விரிந்தும் பொருள் பொருந்தாமையினாலே 'உடைய' என ஒரு சொல் பயனாக வந்து தோன்ற முடிந்தது. மற்றையவும் இப்படியே.

காலங்காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் ஒழியப் பகுதியளவாய் நின்று பெயரைக் கொண்டு முடிவது வினைத்தொகையாம்.

கொல் யானை ; விடுகணை. இவை கொன்ற, கொல்கின்ற, கொல்லும் எனவும்; விட்ட, விடுகிற, விடும் எனவும் விரியும்.

பண்புக்கும் பண்பிக்கும் நடுவே அவற்றிற்குள்ள ஒற்றுமையை விளக்கும் ஆகியஎன்னும் பண்புருபு தொக்கது பண்புத்தொகையாம். இது வண்ணம், வடிவு, அளவு, சுவை என்பவைகளால் நான்கு வகைப்படும்.

செந்தாமரை, கருங்குவளை; வட்டக்கல், சதுரப் பலகை ; ஒரு பொருள், எழு கடல்; துவர்க்காய், இன்சொல்.

இவற்றில் முதலிலுள்ளன முறையே செம்மையாகிய, வட்டமாகிய, ஒன்ருகிய, துவராகிய என விரியும். மற்றவைகளுக்கும் இப்படியே.

ஒரு பொருளுக்குண்டாயிருக்கிற பொதுப் பெயருக்கும் சிறப்புப் பெயருக்கும் நடுவில் ஆகிய என்னும் உருபு தொக்க தொடர் இருபெயரொட்டுப் பண்புத் தொகையாம்.

சாரைப் பாம்பு; ஆயன் சாத்தன்.

உபமானத்துக்கும் உபமேயத்துக்கும் நடுவில் போல முதலிய உவமையுருபுகள் மறைந்து வருவது உவமைத் தொகையாம். இவ்வுவமை வினை, பயன், மெய், உரு என்பவற்றைப் பற்றி வரும்.

குருவி கூப்பிட்டான்; கற்பகக்கையான்; உடுக்கையிடை ; பவளவாய்.

இவை குருவிபோலக் கூப்பிட்டான், கற்பகம்போலும் கையான், உடுக்கைபோலும் இடை, பவளம்போலும் வாய் என விரியும்.

இடையிலும் கடையிலும் உம்மைதொக்க சொற்களின் தொடர் உம்மைத்தொகையாம். இஃது எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவை என நான்கு வகைப்படும்.

கபிலபரணர்; கழஞ்சேகால்; கலனேதூணி; சாணங்குலம். இவை முறையே கபிலனும் பரணனும், கழஞ்சும் காலும், கலனும் தூணியும், சாணும் அங்குலமும் என விரியும்.

வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகைக்கும் புறத்தில் வேறுமொழி தொக்குவருவது அன்மொழித் தொகையாம்.

பூங்குழல், தாழ்குழல், கருங்குழல், துடியிடை, உயிர்மெய் எனவரும்.

இவை முறையே பூவைமுடித்த குழலையுடையாள்; தாழ்ந்த குழலினையுடையாள்; கருமையாகிய குழலையுடையாள்; துடிபோலும் இடையையுடையாள்; உயிரும் மெய்யும் கூடிப்பிறந்த எழுத்து என விரியும்.

## தொகாநிலைத்தொடர்.

இடையே உருபுகள் கெடாமல் சொற்கள் பிளவுபட்டு நின்று தொடரும் தொடர்மொழி தொகாநிலைத் தொடராம்.

வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், எழுவாய், விளி, வேற்றுமைவிரி, இடைச்சொற்புணர்ச்சி, உரிச்சொற்புணர்ச்சி, அடுக்குப்புணர்ச்சி ஆகிய இவ்வொன்பதும் தொகாநிலைத் தொடர்மொழிகளாம்.

உண்டான் சாத்தன்; உண்ட சாத்தன்; உண்டு வந்தான்; சாத்தன் வந்தான்; கொற்றா கொள்; குடத்தைச் செய்தான்; மற்றொன்று; நனிபேதை; பாம்பு பாம்பு.

## வழாநிலை.

வழாநிலையாவது முடிக்கப்படும் சொற்களோடு முடிக்கும் சொற்கள் திணை பால் முதலியவைகளில் மாறுபடாமல் தொடர்ந்து நிற்பது. இது கொள்ளத்தக்கது.

நான் நேற்று வந்தேன். அவர் நாளை வருவர்.

### மரபு.

எப்பொருளை எச்சொல்லாற் பெரியோர்கள் சொன்னார்களோ அப்பொருளை அச்சொல்லாற் சொல்லுதல் மரபு ஆகும்.

பசுவின்கன்று; வாழைக்கன்று; குதிரைக்குட்டி; பாம்புக்குட்டி; அணிற்பிள்ளை; தென்னம்பிள்ளை; கிளிப்பிள்ளை; குருவிக்குஞ்சு என்பன மரபாம்.

---

## (4) புணரியல்.

### போது.

நிலைமொழிஈறும் வருமொழிமுதலும் ஒன்றுபடப் புணர்வது புணர்ச்சியாம். இதற்குச் சந்தி என்பதும் ஒரு பெயர்.

முதலில் நிற்கும் மொழி நிலைமொழியாம். நிலைமொழியை அடுத்துவந்து அதனோடு சேரும் மொழி வருமொழியாம்.

இராமன் வந்தான்—இதில் இராமன் நிலைமொழி; வந்தான் வருமொழி.

வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி எனப் புணர்ச்சி இரண்டு வகைப்படும்.

இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையிலுள்ள ஆறு வேற்றுமை உருபுகளும் மொழிகளுக்கு இடையே வெளிப்பட்டும் மறைந்தும் நிற்கப் பதங்கள் பொருந்தும் புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சியாம்.

வேற்றுமையுருபு வெளிப்பட்டு நிற்பது வேற்றுமை விரி என்றும், வேற்றுமையுருபு மறைந்து நிற்பது வேற்றுமைத் தொகை என்றும் பெயர் பெறும்.

நீர் குடித்தான், நீரைக் குடித்தான்; கல் எறிந்தான், கல்லால் எறிந்தான்; கூலி வேலை, கூலிக்குவேலை; மலைவீழ் அருவி, மலையின் வீழ் அருவி; கண்ணன் கோயில், கண்ணனது கோயில்; வீடு புகுந்தான், வீட்டிற் புகுந்தான்.

வேற்றுமையல்லாதவழியில் சொற்கள் புணர்வது அல்வழிப்புணர்ச்சியாம். அது தொகைநிலைத்தொடர், தொகாநிலைத் தொடர் என இருவகைப்படும் இவை முன்னே கூறப்பட்டன.

சொற்கள் வேற்றுமை வழியானும் அல்வழியானும் புணருமிடத்து இயல்பாகவேனும் விகாரமாகவேனும் புணரும்.

நிலைமொழியும் வருமொழியும் விகாரமின்றிப் புணர்வது இயல்புபுணர்ச்சியாம்.

வந்த + மனிதன் = வந்தமனிதன். பொன் + பெரிது = பொன் பெரிது.

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்களுள் ஒன்றையேனும் பலவற்றையேனும் பெற்றுப் புணர்வது விகாரப்புணர்ச்சியாம்.

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இடையில் எழுத்தாவது சாரியையாவது தோன்றுவது தோன்றல் விகாரமாம்.

வாழை + பழம் = வாழைப்பழம், புளி + காய் = புளியங்காய்.

நிலைமொழி ஈற்றெழுத்தாவது வருமொழி முதலெழுத்தாவது அல்லது இரண்டுமாவது திரிதல் திரிதல்விகாரமாம்.

கல் + பலகை = கற்பலகை, பொன் + தீது = பொன்றீது கல் + தீமை = கற்றீமை.

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது உள்ள எழுத்துக் கெடுதல் கெடுதல்விகாரமாம்.

மரம் + வேர் = மரவேர்.

நிலைமொழியும் வருமொழியும் புணர்தல் உயிரெழுத்தோடு உயிரெழுத்தும், உயிரெழுத்தோடு மெய்யெழுத்தும், மெய்யெழுத்தோடு உயிரெழுத்தும், மெய்யெழுத்தோடு மெய்யெழுத்தும் என நான்கு வகைப்படும்.

## உயிர்முன் உயிரேழுத்து

உயிரெழுத்தோடு உயிரெழுத்து இணங்கி நில்லாதாகையால் இடையே ஒரு மெய்யெழுத்துத் தோன்றும். அப்படித் தோன்றும் மெய்யெழுத்துக்கு உடம்படுமெய் என்று பெயர்.

இ, ஈ, ஐ என்னும் மூன்றுயிர்களுக்கு முன் உயிர் வந்தால் இடையே யகரம் உடம்படுமெய்யாக வரும்.

கிளி + அழகு = கிளியழகு, தீ + எரிந்தது = தீயெரிந்தது, மலை + உயர்ந்தது = மலையுயர்ந்தது.

அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஏழு உயிர்களுக்கு முன் உயிர் வந்தால் இடையே வகரம் உடம்படுமெய்யாக வரும்.

பல + அரசர் = பலவரசர், நிலா + எழுந்தது = நிலாவெழுந்தது, வடு + அகன்றது = வடுவகன்றது, பூ + அழகிது = பூவழகிது, நொ + அழகா = நொவ்வழகா, போ + என்றான் = போவென்றான், கௌ + அழகிது = கௌவழகிது.

ஓரெழுத்தொருமொழியாகிய ஏ, சே, தே என்னும் பெயர்ச்சொல் ஏகாரத்துக்குமுன் உயிர்வந்தால் வகரம் தோன்றும்.

ஏ + அழகு = ஏவழகு. சே + அழகு = சேவழகு, தே + அழகு = தேவழகு.

பண்புச்சொல்லின் விகாரமாகிய சே என்பதற்கு முன் உயிர்வந்தால் யகரமும் வகரமும் தோன்றும்.

சே + அடி = சேயடி; சேவடி.

இடைச்சொல் ஏகாரத்திற்குமுன் உயிர்வரின் யகரம் உடம்படுமெய்யாக வரும்.

அவனே + அழகன் = அவனேயழகன்.

எகர வினாமுன்னும், மூன்று சுட்டெழுத்துக்களின் முன்னும் உயிரும், யகரமும் வந்தால் வகரமும், மற்றைய மெய்வந்தால் வந்த மெய்யும் தோன்றும்.

எ + உயிர் = எவ்வுயிர், எ + யானை = எவ்யானை; எ + காலம் = எக்காலம், எ + நாள் = எந்நாள், எ + வலி = எவ்வலி. அ + உயிர் = அவ்வுயிர், அ + யானை = அவ்யானை; அ + காலம் = அக்காலம், அ + நாள் = அந்நாள், அ + வலி = அவ்வலி.

இவ்வாறே பிறமெய்களையும் கூட்டுக.

குறு, சிறு, நடு, புது, வெறு என்னும் பண்படிகளின் முன் உயிர் வந்தால் உகரமேறியமெய் இரட்டும்.

குறு + உடைவாள் = குற்றுடைவாள், சிறு + அப்பன் = சிற்றப்பன், நடு + ஆறு = நட்டாறு, புது + உருக்கு நெய் = புத்துருக்கு நெய், வெறு + இலை = வெற்றிலை.

அரு, கரு, பெரு என்பன உயிர்வரின் முதல் நீண்டே வரும்.

அரு + உயிர் = ஆருயிர், கரு + எருமை = காரெருமை, பெரு + ஆசை = பேராசை.

குற்றியலுகரத்தின் முன் உயிர் வந்தால் உகரம் கெட்டு அஃது ஏறிய மெய்யில் வந்தஉயிர் ஏறும்.

முரசு + அதிர்ந்தது = முரசதிர்ந்தது, நாடு + ஆண்டான் = நாடாண்டான்.

## உயிர்முன் வல்லெழுத்து.

உயிரெழுத்துக்களின்முன் வரும் க, ச, த, ப என்பவை பெரும்பாலும் இரட்டிக்கும்.

பெரும்பாலும் இரட்டிக்கும் என்றமையால் சிறுபான்மை இயல்பாதலும் உண்டு.

மெல்ல + சென்றான் = மெல்லச்சென்றான். பாக்கு + பை = பாக்குப் பை.

## மெய்ம்முன் உயிரெழுத்து.

மெய்யெழுத்தின் முன் உயிர் வந்தால் அவ்வுயிர் மெய்யெழுத்தோடு கூடும்.

மரம் + உயர்ந்தது = மரமுயர்ந்தது, பால் + அருந்தினான் = பாலருந்தினான்.

தனிக் குற்றெழுத்தைச் சேர்ந்த மெய்யின் முன் உயிர் வந்தால் அந்த மெய் இரட்டிக்கும்.

கல் + உயர்ந்தது = கல்லுயர்ந்தது, பொன் + ஓலை = பொன்னோலை.

## மெய்ம்முன் மெய்யெழுத்து.

மெய்யெழுத்துக்கு முன் மெய்யெழுத்து வரும்போது சிலவிடத்தில் நிலைமொழி யீற்று மெய்ம்மாத்திரம் திரிதலும், சிலவிடத்தில் வருமொழி முதலிலுள்ள மெய்ம்மாத்திரம் திரிதலும், சிலவிடத்தில் இரண்டும் திரிதலும் உண்டு.

பொன் + குடம் = பொற்குடம், பொன் + நகை = பொன்னகை, பொன் + தகடு = பொற்றகடு.

### ணகர னகர ஈறு.

ணகர னகரங்கள் வல்லினம் வந்தால் வேற்றுமையில் டகர றகரங்களாம்; அல்வழியில் இயல்பாம். மெல்லினமும் இடையினமும் வரின் இருவழியிலும் இயல்பாம்.

மண் + குடம் = மட்குடம், பொன் + குடம் = பொற்குடம்; மண் + பெரிது = மண்பெரிது, பொன் + பெரிது = பொன்பெரிது. மண் + மாட்சி = மண்மாட்சி, பொன் + மிகுதி = பொன்மிகுதி, மண் + மலிந்தது = மண்மலிந்தது, பொன் + மிக்கது = பொன்மிக்கது; மண் + வன்மை = மண்வன்மை, பொன் + வன்மை = பொன்வன்மை, மண் + வலிது = மண்வலிது, பொன் + வலிது = பொன்வலிது.

### மகர ஈறு

மொழியீற்றுமகரம் வேற்றுமையில் நாற்கணமும்வரக் கெடும்.

மரம் + அடி = மரவடி, மரம் + கிளை = மரக்கிளை, மரம் + நார் = மரநார், மரம் + வேர் = மரவேர்.

உயிர்க்கணம், வன்கணம், மென்கணம், இடைக்கணம் என்பன நாற்கணங்களாம்.

### ய, ர, ழ ஈறு.

ய, ர, ழ ஒற்றுக்களின் முன் வரும் வல்லெழுத்துக்கள் வேற்றுமையிலும், அல்வழியில் பண்புத்தொகை உவமைத் தொகைகளிலும் இரட்டிக்கும்.

நாய் + கால் = நாய்க்கால்; மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி, வேய் + தோள் = வேய்த்தோள் எனவரும்.

### லகர ளகர ஈறு.

லகர ளகரங்கள் வல்லினம் வந்தால் வேற்றுமையில் றகர டகரங்களாகும்; அல்வழியில் இயல்பாகும்.

வேல் + கூர்மை = வேற்கூர்மை, முள் + கூர்மை = முட்கூர்மை; கால் + குறிது = கால்குறிது, வாள் + கூரிது = வாள்கூரிது.

உயர்திணைப் பெயர் பொதுப்பெயர்களின் ஈற்றிலுள்ள லகர ளகரங்கள் வல்லெழுத்துவரின் இருவழியும் இயல்பாகும்.

தோன்றல் + பெரியன்=தோன்றல் பெரியன், தோன்றல்+ பெருமை=தோன்றல் பெருமை.

லகர ளகரங்கள் மெல்லினம் வந்தால் இருவழியிலும் னகர ணகரங்களாகத் திரியும்

கல் + மாடம்=கன்மாடம், எள் + மூட்டை=எண்மூட்டை; கல் + மிகுந்தது=கன்மிகுந்தது, முள் + முரிந்தது=முண்முரிந்தது.

லகர ளகரங்கள் இடையினம் வரில் இருவழியிலும் இயல்பாம்.

வேல்+யாது=வேல்யாது, வேள்+வலியன்=வேள் வலியன்; கல்+யானை=கல்யானை, வேள்+வலிமை=வேள் வலிமை.

தனிக்குற்றெழுத்தைச் சாராத லகர ளகரங்கள், அல்வழியில் வருமொழி முதலிலுள்ள தகரம் றகர டகரங்களாகத் திரியும்போது கெடும்.

வேல்+தீது=வேறீது; வாள்+தீது=வாடீது.

தனிக்குற்றெழுத்தைச் சாராத லகர ளகரங்கள், வருமொழி முதலிலுள்ள நகரம் னகர ணகரங்களாகத் திரியும் போது இருவழியிலும் கெடும்.

தோன்றல் + நல்லன்=தோன்றனல்லன், வேள்+நல்லன்=வேணல்லன்; கோல்+நலம்=கோனலம், நாள்+நலம்=நாணலம்.

## பிற.

விளிப்பெயர்களின் ஈற்றிலுள்ள உயிரெழுத்துக்களின் முன்னும்; ய, ர, ழ ஒற்றுக்களின் முன்னும் வரும் வல்லெழுத்துக்கள் இயல்பாம்.

வேந்தே + கேள்=வேந்தேகேள்; நங்காய்+கொடு=நங்காய் கொடு.

இடைச்சொல், உரிச்சொல், வடசொற்களின் ஈற்றிலுள்ள உயிரெழுத்துக்களின் முன் வரும் வல்லெழுத்து இயல்பாம்.

அம்மா + பெரிது=அம்மாபெரிது; நனி + பேதை=நனி பேதை; ஆதி+பகவன்=ஆதிபகவன்.

## வடமொழிச்சந்தி.

தமிழில் வந்து வழங்கும் வடமொழிச்சந்திகளுள் தீர்க்க சந்தியும், குணசந்தியும் முக்கியமானவை.

### தீர்க்கசந்தி.

அ ஆ முன் அ ஆ வரின் இரண்டும் கெட ஓர் ஆகாரம் தோன்றும.

குண + அகுணம் = குணாகுணம், பரம + ஆனந்தம் = பரமானந்தம்; கங்கா + அமிர்தம் = கங்காமிர்தம், கருணா + ஆகரன் = கருணாகரன்.

இ ஈ முன் இ ஈ வரின் இரண்டும் கெட ஓர் ஈகாரம் தோன்றும்.

கரி + இந்திரன் = கரீந்திரன், கிரி + ஈசன் = கிரீசன்; மகீ + இந்திரன் = மகீந்திரன், கௌரீ + ஈசன் = கௌரீசன்.

உ ஊ முன் உ ஊ வரின் இரண்டும் கெட ஓர் ஊகாரம் தோன்றும்.

குரு + உபதேசம் = குரூபதேசம், மேரு + ஊர்த்துவம் = மேரூர்த்துவம்; ஸ்வயம்பூ + உபதேசம் = ஸ்வயம்பூபதேசம், ஸ்வயம்பூ + ஊர்ஜிதன் = ஸ்வயம்பூர்ஜிதன்.

### குணசந்தி.

அ ஆ முன் இ ஈ வரின் இரண்டுங்கெட ஓர் ஏகாரம் தோன்றும்.

தேவ + இந்திரன் = தேவேந்திரன், தேவ + ஈசன் = தேவேசன்; தரா + இந்திரன் = தரேந்திரன், ரமா + ஈசன் = ரமேசன்.

அ ஆ முன் உ ஊ வரின் இரண்டும் கெட ஓர் ஓகாரம் தோன்றும்.

சூரிய + உதயம் = சூரியோதயம், ஞான + ஊர்ஜிதன் = ஞானோர்ஜிதன்; கங்கா + உற்பத்தி = கங்கோற்பத்தி, தயா + ஊர்ஜிதன் = தயோர்ஜிதன்.

நலன்.

17789

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.

உ

## எங்களுடைய தமிழ்ப் பிரசுரங்கள்

### படங்களுடன் கூடியவை.

| | | | |
|---|---|---|---|
| * மஹான்களின் சரிதம் மலர்—1. | 0 | 2 | 6 |
| * மஹான்களின் சரிதம் மலர்—2. | 0 | 3 | 0 |
| * மஹான்களின் சரிதம் மலர்—3. | 0 | 4 | 0 |
| * மஹான்களின் சரிதம் மலர்—4. | 0 | 6 | 0 |
| * மஹான்களின் சரிதம் மலர்—5. | 0 | 7 | 0 |
| மஹான்களின் சரிதம் மலர் —6. | (அச்சில்) | | |
| லீலாவதி நூதன கணிதம் IV | (அச்சில்) | | |
| * லீலாவதி கணித வாய்பாடு | 0 | 1 | 0 |
| * தமிழ்ப் பாட புத்தகம் (V) முதல் பாரத்திற்கு | 0 | 6 | 0 |
| ஷை (VI) இரண்டாவது பாரத்திற்கு | 0 | 7 | 0 |
| ஷை (VII) மூன்றுவது பாரத்திற்கு | 0 | 9 | 0 |

* இக் குறியிட்டவைகள் சென்னைத் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை.

## விளம்பரம்.

---

எங்களிடம் மேல் கண்டிருக்கும் எங்களுடைய சொந்தப் புஸ்தகங்களும்; ஸ்கூல், காலேஜ் இவைகளுக்கு வேண்டிய இங்கிலீஷ், தமிழ், ஸம்ஸ்கிருத புஸ்தகங்களும், இங்கிலீஷ் தமிழ் நாவல்கள், பவுண்டன் பேனுக்கள், ஸோப்பு தினுசுகள், லேட்டர்பேபர், கவர்கள், கணக்குப் புஸ்தகங்கள், பாகவத விலாஸ சாக்குக் கிறேயான்ஸுகள், பென்சில்கள், பேபர், சுதேசக் கத்திகள், சிலேட்டுகள், சிலேட்டுக் குச்சிகள் முதலிய இன்னும் அநேக சாமான்களும் சில்லறையாகவும், மொத்தமாகவும் கிடைக்கும். உபாத்தியாயர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

**T. K. SUBRAMANIAM & SON,**

*Publishers, Book-Sellers & Stationers,*

*Dabir Square*, **KUMBAKONAM.**